KALKI
9.6.85
ரூ1.50

கல்கி





அதிக சுவையானது
அதிக முழுமையானது



**நீங்கள் பாசத்துடன்
ஊட்டும் ஒவ்வொரு கவளமும்
உங்கள் பாப்பாவின்
வளர்ச்சிக்குச் சிறந்ததாகும்.**

பால் அடங்கிய ஃபாரெக்ஸ் திட உணவு. இதைக் கலப்பது எளிது. பாப்பாவுக்கு ஊட்டுவதும் எளிது.

பாப்பாவின் வளர்ச்சிக்கு இன்றியமையாத புரதம் நிரம்பியது. மிக ஆரோக்கியமான இரத்தத்திற்குக் கூடுதல் இரும்புச்சத்து கொண்டது. உறுதியான பற்களையும் எலும்புகளையும் பெற சரியான விகிதத்தில் கால்ஷியமும் ஃபாஸ்ஃபரஸும் அடங்கியது. பாப்பாவின் மென்மையான ஜீரண சக்திக்கென முன்கூட்டிப் பக்குவம் செய்தது.

பால் அடங்கிய ஃபாரெக்ஸ் திட உணவு. அதிக முழுமையான திட உணவு.

உடல் நலத்தின் உறைவிடம்—

இலவசம்! குழந்தையின் முதலாண்டுப் புத்தகம்: உங்களது பிரதியைப்பெற தபால் மற்றும் இதர செலவிற்கு ரூ. 1/— தபால்தலை உள் வைத்து எழுதுவீர் இம்முகவரிக்கு—தபால் பெட்டி எண் 19119, (FCM-21) பம்பாய் 400 025.

CLARION/B/GX/4/203 TAM

வாரம் ஒரு கடிதம்



உறுதி கொண்டவனே!

உழைக்கப் பிறந்தவனே!

வா நண்பனே!

சாதிப்பதற்கும் வயதிற்கும் சம்பந்தம் இல்லை. கீட்ஸ் தனது இமாலயக் கவிதைகளை இயற்றி முடித்தது இருபத்து நான்கிற்குள்,

பாரதி தனது சாதனைகளுக்கு முற்றுப் புள்ளி வைத்துக் கொண்டது முப்பத்து ஒன்பதில்.

அலெக்சாந்தர் வெல்வதற்கு இனிமேல் உலகமில்லையே என்று திகைத்த போது வயது முப்பத்திரண்டு.

(அப்படி வருந்தியவன் வெற்றிகொண்டதே உலகப் பரப்பில் அறுபத்து நான்கில் ஒரு பகுதிதான் என்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள்.)

எனவே இளைஞனே!

சாதிப்பதற்கும் வயதிற்கும் சம்பந்தமில்லை.

சாதனைகள் எல்லாம் பெரும்பாலும் கற்பனைகளிலிருந்து பிறந்தவைகளே தவிர அனுபவங்களிலிருந்து பிறந்தவைகள் அல்ல.

சாதித்த பிறகுதான் ஒன்று அனுபவமாகிறது.

அனுபவத்திற்கு வயது தேவை; கற்பனைக்கு ஏது வயது?

சொல்லப் போனால் வயதானவர்களுக்கு இயலாத கற்பனைகளே வரும்; இளைஞர்களுக்கோ — காரியக் கற்பனைகள் வரும்.

கற்பனைகளில் கட்டப்படும் கோட்டைகளை விட எதார்த்தத்தின் குடிசைகளே எமக்குத் தேவை;

இளைஞனே!

அனுபவங்களுக்காகக் காத்துக் கொண்டிராதே. மனிதகுலம் தனது எல்லா அனுபவங்களையும் உனக்குத்தான் உயில் எழுதி வைத்திருக்கிறது.

அந்த அனுபவங்களைக் கற்பனைகளாய் நிறம் மாற்று. கற்பனைகளுக்கு உனது செயல்களால் வடிவம் கொடு.

ஓடிக் கொண்டே இருப்பதுதான் நதி!

உலவிக் கொண்டே இருப்பதுதான் காற்று.

செயல்பட்டுக் கொண்டே இருப்பவன் தான் இளைஞன்.

இளமைக்கு நீ வேலைக்காரனாக இருந்தால் முதுமைக்கு நீ எஜமானனாக இருப்பாய்!

மனித மதிப்பீடுகள் மாறிக் கொண்டிருக்கின்றன; விஞ்ஞான யுகத்தின் தேவைகள் வேறு வேறாக இருக்கின்றன.

எனவே, இளைஞனே! பழைய அனுபவங்களில் பல உனக்கிப்போது உதவா.

ஆகவே, முடிவெடுக்க வேண்டியவனும், செயல்படுத்த வேண்டியவனும் நீயாகவே இருக்கிறாய்.

இப்போது உனக்குள் எரிந்து கொண்டிருக்கிறதே ஒரு நெருப்பு — இப்போது உனக்குள் இருக்கிறதே ஒரு தகிப்பு — இது எத்தனை காலம் இருக்கும் என்று உத்தரவாதம் தர முடியாது.

முதுமை என்பது அனுபவங்கள் என்னும் நிலக்கரியை மட்டும் நிறையச் சேர்த்து வைத்திருக்கிறது.

நீயோ செயல்வீரம் என்னும் நெருப்பை மட்டும் நெஞ்சு நிறையச் சேர்த்து வைத்திருக்கிறாய்.

உனக்குள் அந்த அனுபவ நிலக்கரியை அள்ளிப் போட்டுக் கொள் —


அதில் —

உலகை வெல்லும் சக்தி உற்பத்தியாகும்.

புகைப்படம்: யோகா



கவிஞர் வைரமுத்து


படுகொலை நாள்
அகாலிகள்
அப்பாவி பொதுமக்கள் படுகொலை
அமிர்தசரஸ் பொற்கோவிலில் ராணுவ நடவடிக்கை மேற்கொண்டதை
அகாலிகள் 'படுகொலை' தினமாகத் துக்கம் கொண்டாடுகின்றனர்—


தமிழக அரசு


கறை படிந்த கரம்
பேச்சு- வார்த்தை



கல்கி

1985 ஜூன் 9
மலர் 43 இதழ் 45
குரோதன வைகாசி 27

தேவையற்ற உரசல்கள்!

கருணாநிதி மறுபடி கைதாகி விடுவிக்கப்பட்டிருக்கிறார். இம்முறை கைதானது சட்டமன்ற கட்சிக் காரியாலயத்தைக் காலி பண்ண முடியாது என்றதற்காக.

ஏப்ரல் 83ல் ராஜாராம் தலைமையில் அமைந்த குழு செய்த சிபாரிசுகளைக் கடந்த பிப்ரவரியில் சட்டசபையில் கொண்டு வந்து சட்டமாக்கிய போது யாருமே ஆட்சேபிக்கவில்லை. 24 எம். எல். ஏ.க்களைப் பெற்றிருந்தால் அதனைக் கட்சி என அங்கீகரிக்கலாம் என்பது இந்தக் குழுவின் சிபாரிசுகளில் ஒன்று.

இந்த அடிப்படையில் பார்க்கும் போது தி. மு. க., சட்டமன்ற கட்சி அலுவலகத்தைக் காலி செய்ய வேண்டும் என்பது அரசு தரப்பு வாதம். ராஜாராம் குழு சிபாரிசு சட்ட மன்றத்தின் உள் நடவடிக்கைகளுக்கு மட்டுமே பொருந்தும். வெளி நடவடிக்கைகளுக்கு அல்ல; அரசியல் சாசனமே இதனை மெய்ப்பிக்கும் என்பது தி. மு. க. தரப்பு வாதம்.

'சட்ட மன்ற உள் நடவடிக்கையைப் பொறுத்துத்தானே சட்ட மன்றக் கட்சிக் காரியாலயமே வழங்கப்படுகிறது' என்றால், 'ஜனநாயக மரபு என்பதாக ஒன்றில்லையா? 67ல் 50 பேர்களாக இருந்த காங்கிரஸ் எம். எல். ஏ.க்கள் 71ல் 15 ஆகக் குறைந்த போது அவர்களைச் சட்டமன்றக் கட்சிக் காரியாலயத்திலிருந்து வெளியேற்றியா விட்டோம்?' என்ற எதிர்வாதம் கிளம்புகிறது.

'இந்த அறை வேறு காரியங்களுக்குத் தேவைப்படுகிறது. உங்களுக்கு இரண்டாம் எண்ணுள்ள வேறு அறை ஒதுக்குகிறோம்' என்று ஒரு பலவீனமான குரல் இடையில் ஒலிக்கிறது.

இவர்களே பெருந்தன்மையாய் வெளியேறலாம்; அல்லது அவர்களும் அற்பத்தனமாய் நடந்து கொள்ளாதிருக்கலாம். ஏதோ ஒரு விதத்தில் ஆட்சியிலுள்ளோருடன் மோத வேண்டும் என்று இவர்களும், கருணாநிதிக்கு விட்டுக் கொடுக்கவாவது என்று அவர்களும் வீம்புப் பிடிவாதம் செய்யும் போது தேவையற்ற உரசல்கள் ஏற்படுகின்றன. இவை மக்களிடையே பிளவுகளையும், தொண்டர்களிடையே குரோதங்களையும் வளர்க்கின்றன.

சட்டம், அதன் விதிமுறைகள் இவற்றை மட்டும் பார்த்து அரசு எல்லாக் காரியங்களையும் செய்ய இயலாது. எண்ணிக்கை எவ்வாறாயினும் எதிர் கட்சிகளுள் சுயம்பிரகாசமாகத் தமிழகத்தில் மிகுந்த செல்வாக்குள்ள கட்சி தி. மு. க. தான் என்பதை ஆட்சியிலிருப்போர் மறப்பதற்கில்லை.

தமிழ்நாட்டின் கவனமெல்லாம் இன்று டில்லியில். ஒவ்வொரு தமிழனும் ராஜீவை எதிர்பார்ப்புடன் ஏறிட்டு நோக்குகிறான். காரணம், ஜெயவர்த்தன — ராஜீவ் பேச்சு வார்த்தை நாளை நடக்கிறது. இந்த உச்ச கட்டச் சந்திப்பின் பயனாக ஈழத்தில் அமைதி நிலவ வேண்டும் என்பதே ஒவ்வொரு தமிழனின் பிரார்த்தனை.

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா—பாரதியார்.



ஒருவாய்

மு. விவேகானந்தன்

அஞ்சு நிமிஷமாவது ரெஸ்ட் கெடைக்குமான்னு எதிர்பார்த்திண்டு இருந்த எனக்கு இப்போதான் ரெஸ்டா நிக்க நேரங்கெடச்சுது. பெரிசா சத்தம் போட்டுண்டு கஞ்சிவரம் பாஸ்ட் பேசஞ்சர் பிளாட்பாரத்தை கடந்திண்டிருந்தது. அடுத்த வண்டி எப்படி வருதோ.... இதுல ஏறி எடம் புடிச்சு ஆபீஸுக்குப் போயிட்டு வர்றதுக்குள்ள... அப்பப்பா...!

காலைல நாலு மணிக்கு எழுந்து நாலு குடம் தண்ணியை அந்த பம்பில அடிக்கறதுக்குள்ளே நாக்கு வறண்டு போயிடும். குளிச்சிட்டு இருக்கிற பாத்திரத்திலேயெல்லாம் தண்ணி புடிச்சிட்டு அடுப்படியில வந்து அனல்ல அவஸ்தைப்பட்டு, பருப்பு வேகறத்துக்குள்ள என்னோட 'செல்லப் பொண்ணு 'அம்மா... அம்மா' ன்னுட்டே எழுந்திரிச்சுடுவா. அப்புறம் அவர். ஒரு கையிலே "ஹிண்டு" வையும், மறு கையிலே ஆவி பறக்க காபியையும் வைச்சிண்டு எழுப்பினாத்தான் அவருக்கு திருப்தியா இருக்கும். காபிக் கடை முடியறத்துக்குள்ள மணி ஏழாயிடும். அப்புறம் கண்ணீரோட குளிச்ச உடம்பு வேர்வைக் குளியல்ல கசகசத்து சமைச்சு முடிச்சி, அவரோட வேலைகளையும் பாத்து, கொழந்தைக்குக் கூட நம்ம கையாலே ஒரு வேளை ஊட்ட முடியாத வேதனையோடு அவதிஅவதின்னு ஆபீஸுக்கு புறப்படறதுக்குள்ளே மணி ஒன்பதாயிடும்.

ட்ரெயின் வர்ற அறிகுறி தெரிஞ்சுது. பிளாட்பாரம் பரப்பரப்பாயிருந்தது. ஒரு வழியா ட்ரெயினில் ஏறினேன். ஏகக் கூட்டம். நிக்கறதுக்குக் கூட இடமில்லாம பெருமூச்சுவிட்டுக்கொண்டு காலைமாற்றிமாற்றி நின்றேன். ட்ரெயினில் ஏறுவது பெரும்பாடு. இறங்குவதோ அதனினும் பெரும்பாடு. ஒரு வழியா இறங்கி புடவையை சரி செய்துவிட்டு டயத்தைப் பார்த்தேன். மீண்டும்பதைபதைப்பு—அந்தஓட்டப்பந்தயத்திலே ஆணுக்கு ஆண் என்றோ, பெண்ணுக்கு பெண் என்றோ எவ்வித விதிகளுமின்றி மனித இனத்திற்கு பொதுவான போட்டியில் முண்டியடித்து ஓடிமாடிப்படியில்ஏறி இறங்கினேன். மீண்டும் ஒருமுறை டயத்தைப் பார்த்தேன். கடைசி அரை மணி நேரத்தில் குறைஞ்சது அஞ்சாறு தடவையாவது டயத்தைப் பார்க்காவிட்டால்... அப்பப்பா... அப்படி ஒரு ஈடுபாடு.

வேர்வையைக் கூட சரியாகத் துடைத்துக் கொள்ளாமல், கண்ணாடி முன் கால்கடுக்க நின்று, தலைவாரி, பொட்டு வைச்சு பூசிய பவுடரெல்லாம்பொங்கும்வியர்வைக்கொப்பளங்களால் அலைக்கழிக்கப்பட்டு அலங்காரமெல்லாம் அலங்கோலமாகிய நிலையில் அலுவலகத்திற்குள் நுழைந்தேன்.

"இன்னிக்கு 'என்ன வேலை வந்து சேருமோ... நேத்து அனுப்பின பைல்கள் எல்லாம் தகரறு (கொர்ரி) இல்லாம கையெழுத்தாயிருக்குமோ... வீட்டிலதான் டென்ஷன்னு... இங்க அதுக்கு மேல... கடவுளே இந்த ஜென்மமே போதுண்டாப்பா... நிம்மதியில்லாத இந்த பெண் ஜென்மமே வேண்டாம்பா..." என்று விதியை நொந்து கொண்டே சீட்டில் வந்து அமர்ந்தேன்.

"ஸார் மணி... என்ன... ஸார்..." ஒரு ப்யூன் அருகில் இருந்த உதவியாளரிடம் கேட்டான். அதற்கு அவர் என்னைக் காட்டி,

"அதோ... அந்த அம்மா வந்துட்டாங்களே... அவங்க வந்தாங்கன்னா கரெக்டா மணி பத்தரை".

"என்ன ஸார்... டயம் கேட்டா... அந்த அம்மாவைக் கிண்டல் பண்ற... டயம் என்ன ஸார்..."


"கிண்டலுக்கு சொல்லுல... மணி பத்தரைதான்... அவங்க மத்தவங்க மாதிரி இல்லப்பா... ரொம்ப பங்சுவல்... அதனால தான் சொன்னேன்..."

".... நம்ம ஆபீஸிலேயே அவங்க மாதிரி பங்சுவாலிடி கீப் அப் பண்றவங்க யாருமில்லப்பா".

என் உள்ளம் ஜில்லென்றாகியது.

என் வீட்ல படற கஷ்டம், ஆபீஸ்ல படற கஷ்டம், எல்லாமே ஒரு நிமிஷத்துல பறந்து போய், என்னுடைய "பங்சுவாலிடியைப் பத்தி அவங்க பேசினது எனக்கு ரொம்பவும் பெருமையா இருந்தது.





பாங்க் ஆப் தமிழ்நாடு லிமிடெட் சேர்மன் ஸ்ரீ R.A. நீலகண்டன் அவர்களின் புதல்வி சௌ. சுதா அவர்களுக்கும், பம்பாய் ஸ்ரீ S. சாமு அவர்களின் புதல்வன் சிரஞ்சீவி ராம் அவர்களுக்கும் சென்னை முக்தா கல்யாண மண்டபத்தில் 2-5-1985 அன்று விவாகம் சிறப்பாக நடந்தேறியது. திருமணத்திற்கு நேரில் வந்தும், வாழ்த்துக்கள் அனுப்பியும் சிறப்பித்தவர்களுக்கு ஸ்ரீ R.A. நீலகண்டன் தம்பதியினரும், ஸ்ரீ S. சாமு தம்பதியினரும் தங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறார்கள்.

நட்சத்திரங்களைக் கொஞ்சம் எட்டிப் பார்க்கலாமா?

"அந்த சூரியக் கண்களின் அற்புத ஒளியை... வானத்தில் அற்புதங்களைக் காணத்

துடிக்கும் உள்ளொளியை..." ஹார்வர்டு பல்கலைக்கழக வானியல் நிபுணர் டாக்டர் ஹார்லோவ் சாப்ளி (Harlow Shepley) "வைனுபாப்பு" என்ற அந்த இந்திய இளைஞனிடம் அவர் பதினேழு வயதாகு முன்னரே ஹைதராபாத் நிசாம்மையா அப்சர்வாட்ரியில் அன்றே கண்டு கொண்டார்.

இந்திய விஞ்ஞானி ஒருவருக்குக் கிடைக்கவியலாத மிக உயர்ந்த தகுதியான "உலக வானியல் கழகத் தலைவர் பதவியில் 1979 முதல் 82 வரை இருந்து திடீரென இயற்கை எய்திய டாக்டர் எம். கே. வைனு பாப்பு (Dr. K. Vainu Bappu)வின் தொலை நோக்குப் பார்வையே இன்றைய "காவலூர் இந்திய வானியல் பௌதிக ஆய்வுக் கூடம்."

வடார்க்காடு மாவட்டத்தில் சிதறிக் கிடக்கும் ஜவ்வாது மலைக் குன்றுகளின் மேலுள்ள காவலூர் என்ற மலைக் கிராமத்திற்கருகே நூறு ஏக்கர் பரப்பில் மனோரம்யமான சூழலில் இந்த விண்வெளி ஆய்வுக் கூடம் அமைந்துள்ளது. மலை அடிவாரக் கிராமமான ஆலங்காயத்திலிருந்து வளைந்து நெளிந்து செல்லும் தார்ச் சாலையில் எட்டு கிலோ மீட்டர் தூரம் சென்றால் இந்த விண்வெளி ஆய்வகத்தை அடைந்து விடலாம்.

"இந்திய வானியல் ஆய்வு கி. பி. 17—ஆம் நூற்றாண்டில் உலகவிண்வெளி அரங்கில் மிகச் சிறிய இடத்தையே பெற்றிருந்தது. இது குறித்துப் பேராசிரியர் சாப்ளி, "இந்திய தேசம் பௌதிக ஆய்வில் டாக்டர் சாஹா (Dr. Saha), டாக்டர். சந்திரசேகர் போன்ற அற்புத மூளை கொண்ட விஞ்ஞானிகளைப் பெற்ற போதிலும், அவர்கள் தங்கள் ஆய்வுகளை இங்கு நிகழ்த்துவதற்கு ஏற்ற வசதிகள் இல்லை," என்கிறார்.

1705—ஆம் ஆண்டு தற்பொழுது வானிலைகளை அறிவிக்கும் நுங்கம்பாக்கம் ஆய்வகத்தில் ஐரோப்பியர்கள் தங்கள் கடற்படையைக் கண்காணிக்க ஒரு சிறிய டெலஸ்கோப்பை நிர்மாணித்தனர். ஒரு நூற்றாண்டிற்குப் பின்னர் 1805—ஆம் ஆண்டு கொடைக்கானல் மலையில் சோலார் அப்சர்வேட்டரி ஒன்று ஏற்படுத்தப்பட்டது.

பின்னர் 1947—ஆம் ஆண்டு கொடைக்கானல் 20 அங்குல டெலஸ்கோப்பும், ஹைதராபாத்தில் 15 அங்குல டெலஸ்கோப்பும் அமைக்கப்பட்டன. ஆனால் அவை நட்சத்திர மண்டல ஆய்வுகளை (Stellar Observation) முழுமையாகச் செயல்படுத்தவில்லை.

1950—ஆம் ஆண்டுவாக்கில் 100 அங்குல டெலஸ்கோப்பை உருவாக்குவதற்குச் சுமார் ஒரு கோடி ரூபாய் செலவாகும் எனக் கணக்கிடப்பட்டது. ஆனால் அந்நேரத்தில் அரசு உடனடியாகப் பயன்தரக்கூடிய திட்டங்களில் முதலீடு செய்ய வேண்டியதிருந்ததால் அதுவும் கூடாமல் போயிற்று.


இத்தருணத்தில்தான் (1951—52), டாக்டர் வைனு பாப்பு, ஹார்வர்டு பல்கலைக்கழகத்தில் புதிய வால் நட்சத்திரம் ஒன்றை (The Bappu — Bok Kirk Comet) கண்டுபிடித்து உலக வானியல் அரங்கின் கவனத்தை ஈர்த்தார்.

நமது நாட்டு விண்ணியல் ஆய்விற்கு 100 அங்குல டெலஸ்கோப் அமைத்தால்தான் உலக அரங்கில் கொடி நாட்ட முடியும் என்பதை அரசுக்கு டாக்டர் வைனு பாப்பு வற்புறுத்திக் கூறினார்.

• நுழைவாயிலில் திரு வெசண்முகம்



• அலுமினிசிங் சேம்பர்





கம்ப்யூட்டர் யந்திரத்துடன் டாக்டர் போஸ்


அச்சமயத்தில் அதை அமைக்க ஏறத்தாழ நாலரைக் கோடி ரூபாய் செலவாகும் என இந்திய வானியல்நிர்வாகக் குழு தந்த அறிக்கையை இந்திய அரசு ஏற்றுக் கொண்டது.

சுற்றிலும் பூச்செடிகள் பூத்துக் குலுங்க வட்ட வடிவ அமைப்பில் சுமார் 50 அடி உயரம் எழும்பி முடிவில் இராட்சதக் கூண்டுடன் கம்பீரமாக நிற்கும் ஆய்வுக் கூண்டை ஏறிட்டுப் பார்க்கும் பொழுது கழுத்து சுளுக்கிக் கொள்கின்றது.

கூண்டின் இராட்சதக் கதவுகள் விண்வெளி நோக்கித் திறக்கப்படும் பொழுதும், அந்தக் கூண்டு வட்டவடிவமாகச் சுழலும் பொழுதும் அங்கங்கள் சில்லிடுகின்றன. டெலஸ்கோப் விண்வெளியில் குறிப்பிட்ட ஒரு பகுதி நோக்கி நகரும் பொழுது மயிர்க் கூச்செறிகின்றது.

''இங்கு அந்திப் பொழுது முதல்அதிகாலை வரைதான் எங்களுக்கு வேலை'' என்று டாக்டர்சிவராமன் சொல்லும்பொழுது, இருண்ட இரவில் ஒளிவிடும் அந்த விஞ்ஞானிகளின் ஒளி பொருந்திய கண்கள் நம் மனத்தில்பிரகாசிக்கின்றன.

1972—ஆம் ஆண்டு ஜூன் மாதம் எட்டாம் தேதி அபூர்வமான வானியல் நிகழ்ச்சியொன்று நடைபெற்றது. சூரியக் குடும்பத்தில் மிகப் பெரிய கிரகமான வியாழனைச் (Jupiter) சுற்றிவரும் இணைக் கிரகங்களில் ஒன்றான 'கனிமேட்' Gany-



நட்சத்திரங்களை எட்டிப் பார்க்கிறார்


made) (பூமியும் சந்திரனும் போல்) கண்ணுக்குப் புலப்படாத நட்சத்திரம் ஒன்றின் ஒளியை (. an eighth magnitude Star மறைத்த (occultation) பொழுது துணைக் கிரகத்தின் வாயு மண்டலப் பரப்பையும் வடிவ அமைப்பையும் படமாக்க முடிந்தது.

அக்கல்டேஷன் (occultation) என்பது சந்திரகிரகணத்தைப் போல், விண்வெளியில் நகரும் விண் பொருட்கள் (heavenly basics) ஒன்றை ஒன்று சில நிமிடங்கள் மறைக்கும்பொழுது ஏற்படுகின்ற அபூர்வ நிகழ்ச்சியாகும். இந்த நிகழ்ச்சிகளை அந்தக் கணமே படம் எடுக்கும் பொழுது அநேக ஆண்டுகள் காத்துக் கிடந்து ஆய்வு செய்யக் கூடிய விஞ்ஞானப் புதுமைகள் கிடைக்கக் கூடுமாம்.

அப்படியொரு அபூர்வநிகழ்ச்சி இவ்விண்வெளி ஆய்வகத்தில்முதலில்பதிவு செய்யப் பட்டதில்டாக்டர் சிவராமன் மிகுந்த பெருமிதம் அடைகிறார்.

1977—ஆம் ஆண்டு மற்றுமொரு அபூர்வ நிகழ்ச்சியை இவ்வாய்வகத்தின் தற்போதைய இயக்குநர் டாக்டர் ஜே. சி. பட்டாச்சாரியா கண்டுபிடித்தார். மார்ச் மாதம் 10—ஆம் தேதி எஸ். ஏ. ஓ. 158687 (S. A. O.) என்ற மங்கிய நட்சத்திரத்தின் ஒளியை அப்சர்வ் செய்து கொண்டிருக்கும்பொழுது யுரேனஸ் கிரகம் அதை மறைத்தது. டாக்டர் பட்டாச்சார்யாவுடன் இருந்த 'குப்புசாமி' என்ற இளைஞர், ஆய்வுகளை ரெக்கார்டு செய்யும் பேனா புதிய திசையில் திரும்புவதைக் கண்டு, அதை பட்டாச்சார்யாவிடம்

93'' கூண்டின் இயற்கைப் பின்னணி.



அறிவித்தார். உடனே அவர் தனது எட்டு அங்குல வழிகாட்டி டெலஸ்கோப்பின் (Guide Telescope) மூலம் யூரேனஸ் கிரகத்தில் தோன்றிய வளைய அமைப்பினைக் (Disc) கண்டு பதிவு செய்தார்.

ஒன்பதே நொடிகள் நடந்து முடிந்துவிட்ட இந்த நிகழ்ச்சியைப் படம் பிடிக்க உலகில் அநேக விண்வெளி நிலையங்கள் போட்டியிட்டன.

தற்பொழுது ஆசியாவிலேயே மிகப் பெரிய டெலஸ்கோப் இந்த காவலூரில் அமைந்துள்ள 2.34 மீட்டர் (93 அங்குலம்) டெலஸ்கோப்தான்.

ஏறத்தாழ ஆறுகோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்ட இந்த 93 அங்குல வட்டமுள்ள டெலஸ்கோப்பின் நவீன விஞ்ஞான நுணுக்கங்கள் (Modern Scientific technology) என்ன? அது எந்த அளவு விண்வெளி ஆய்வில் பயன் பெறக் கூடியது? போன்ற கேள்விகளைக் கேட்கிறோம்.

அதற்கு விளக்கமான பதில்கள் பெற என் பின்னே வாருங்கள் என்று கூறி, இரண்டாவது மாடியிலுள்ள கம்ப்யூட்டர் சாதனம் பொருத்தப்பட்டுள்ள அறைக்கு நம்மை அழைத்துச் செல்கிறார் டாக்டர் கோஷ்.

கண்ணாடிச் சுவர் அமைப்போடு, குளிர் சாதன இணைப்புடன் அமைக்கப்பட்டிருக்கும் அறையை நெருங்கும் போதே மனம் குளிர்கிறது. காலணிகள் உள்ளே அனுமதிக்கப்படுவதில்லை.

அமெரிக்காவிலிருந்து 80 லட்சம் ரூபாய் செலவில் இறக்குமதி செய்யப்பட்ட கம்ப்யூட்டர் இயந்திரம் உள் அறையில் கண்ணாடிச் சுவருக்குள்ளே குளிர்சாதனப் பெட்டிகளைப் போல் தொடர் அடுக்குகளாக அமைந்துள்ளது. டாக்டர் கோஷ் விளக்குகிறார்...

உள் அறையில் உள்ள சாதனத்தின் மீது கருமை நிறக் கண்ணாடிக் கூண்டுகளில் மேக்னெட்டிக் தட்டுகள் (Magnetic Disc) பொருத்தப்பட்டு, அவை வான்வெளியின் ஆய்வுகளைத் தானே சேகரித்துக் கொள்கின்றன. அவை பின்னால் ஆய்விற்கு ஃபீட் பேக்காகப் (feed back) பயன்படுமாம்.

மேலும் கம்ப்யூட்டருடன் இணைக்கப்பட்டுள்ள டெலிவிஷன் திரையில், டெலஸ்கோப்பின் வானியல் ஆய்வுகள் உடனுக்குடன் படமாகவும் விட்டரேச்சராகவும் விஞ்ஞானிக்குத் தெரிவிக்கப்பட்டு விடும்.

செய்தியை தெரிவித்துக் கொண்டே டாக்டர் கோஷ் மற்றும் டாக்டர் அலீம் ஹக் ஆகியோர் பட்டன்களை இயக்குகின்றனர்; வண்ண நிறத்தில் எழுத்துக்களும் கோடுகளும் வந்து போகின்றன. அந்த மாயாஜாலம் இரசிக்கும் படியாக இருக்கிறது.

இன்னும் மூன்று மாத காலத்தில் சோதனைகளும் முடிக்கப்பட்டு, இவ்வாண்டின் நடுவில் டெலஸ்கோப் ஆய்வுக்குத் தயாராகிவிடும். முதல் வேலையாக இந்த டெலஸ்கோப் விண்ணின் தூர. ஆழங்களை, அகலங்களை எவ்வளவு தூரம் ஆய்வு செய்கிறது எனக் கணிக்க விண்வெளி படம் எடுக்கப்படும். இதுகாறும் வானியல் சம்பந்தப்பட்ட புத்தகங்களில் வெளியிடப்பட்டுள்ள படங்களுக்குப் பதிலாக இந்திய விண்வெளி ஆய்வுப்படங்கள் இடம்பெறும். தொடர்ந்து நம் வான் வீதியிலுள்ள நட்சத்திர மண்டலங்களைப் பற்றிய உன்னத ஆய்வுகள் தொடரும்.

1986 மார்ச்சு மாதம் தோன்றவிருக்கும் ஹாலியின் நட்சத்திரத்தைப் படமெடுக்க உலகில் உள்ள அத்தனை விண்வெளி ஆய்வுக் கூடங்களும் தயாராக இருக்கின்றன. அதற்கு நாம் சளைத்தவர்களல்ல என்பதை நிரூபிக்க ஹாலியின் வரவை எதிர் நோக்கியிருக்கிறது இந்த 93 அங்குலவிட்டமுள்ள டெலஸ்கோப் என்கிறார் டாக்டர் சிவராமன்.

இந்திய பௌதிக வானியல் ஆய்வகத்திற்கு அருகே அமைந்துள்ள, செயற்கைக் கோள் ஆய்வு நிலையம், தன் உட்பிரிவு ஒன்றின் மூலம் புவியியல் சம்பந்தமாக ஆய்வதற்கும் செயற்கை கோளின் வரையறை காண்பதற்கும் நவீன லேசர் கருவியுடன் ஆய்வு நடத்துவது மற்றொரு குறிப்பிடத்தக்க அம்சம்.

விண்ணின் அதிசயங்களைக் கண்ட பாப்பு மண்ணின் அழகை எவ்வாறு ரசித்தார் என்பதை நிரூபிப்பது போல் அவர் உருவாக்கிய மலர்ச்செடிகளின் நடுவே நடந்து வருகிறோம்.

திரு. சிவ. சண்முகம், பாப்பு வாழ்ந்த காலத்தில் சொன்ன வாசகங்களைக் குறித்துக் கொள்ளச் சொல்கிறார்:


"வெற்றியோ, தோல்வியோ காணாது புலக்கதிரொளியில் அநேக காலம் வாழ்வதை விட, வெற்றி எனும் சூரியப் பிரகாசத்தில் ஒரு கணம் வாழ்ந்தோ அல்லது தோல்வி என்னும் நள்ளிரவின் மடியிலே வீழ்ந்து சாவதோ மேலானது"

கட்டுரை: ஜமுனா நீல்

படம்: அருணாசலம்



உதவி வரட்டும்; அதன் பிறகு காரியம் செய்வோம் என்று யார் எண்ணுகின்றனரோ அவர் மூலமாக எந்தக் காரியமும் ஆகாது. காரியத்தில் இறங்கியதுமே உதவி வந்து சேரும் என்று எவர் கருதுகின்றனரோ அவரே காரியத்தைச் செய்து தீர்ப்பர்.



பருவத்தின் எல்லையில் என் பாசத்துக்குரிய மகள், சங்கடமான இந்தக் காலகட்டத்தில் அந்த இளம் உள்ளம் படும் வேதனை, தாயாகிய எனக்குத் தான் புரியும்.

"என் மகளுக்கு கேர்ஃப்ரீ வாங்கித் தர நான் முடிவு செய்தது ஏனென்றால்!..

ஒரு சிறுமியின் வாழ்க்கையில் அவள் வயதுக்கு வரும் காலகட்டம் தவிர்க்க முடியாத ஒன்றாகும். பயமும், வெட்கமும், தவிப்பும் நிறைந்து, உடலளவில் மட்டுமின்றி மனத்தளவிலும் அவள் பாதிக்கப்படும் நேரமும் அதுதான்.

நான் ஒரு தாய். இந்தக் காலகட்டத்தை அனுபவித்தவள். அதன் சிரமங்களை நன்கு உணர்ந்தவள். குறிப்பிட்ட அந்த ஐந்து நாட்களும் ஒவ்வொரு பெண்ணுக்கும் ஏற்படும் சங்கடமும் தொல்லையும் எனக்கு நன்றாகவே தெரியும்.

இத்தனை வருடங்களாக, சானிடரி பாதுகாப்புக்குத் தேவையானதை நான் வீட்டிலேயேதான் தயாரித்துக் கொள்வேன். அது மிகவும் தர்மசங்கடமான வேலைதான்!

மீண்டும் மீண்டும் பயன்படுத்துவதற்காக நன்றாகத் துவைத்து, காயப்போட்டு... போதும் போதும் என்றாகி விடும். அக்கம் பக்கத்தில் உள்ளவர்களுக்குக் கூட நமது 5 நாள் பிரச்னை விளம்பரப்படுத்தப்பட்டு விடும். இத்தனை அவஸ்தைப் பட்டாலும்,

நமக்குத் தேவையான சானிடரி பாதுகாப்பு கிடைக்குமா என்பதும் நிச்சயமில்லை. அது மட்டுமல்ல; எப்போது எந்த அசம்பாவிதம் நடந்து அவமானப்பட வேண்டி வருமோ என்று பயந்து நடுங்கிக் கொண்டே இருக்க வேண்டும்.

என்னைப் பொறுத்தவரையில் இதிலெல்லாம் ஓரளவு பழக்கப்பட்டுவிட்டேன் என்றே சொல்லலாம். தவிர, அந்தக் காலத்தில் சங்கடமான அந்த 5 நாட்களில் பெண்கள் வெளியே போவது என்கிற வழக்கமெல்லாம் அறவே கிடையாது.

ஆனால் இப்போது காலம் மாறிவிட்டது...: பெண்கள் மாதத்தின் அந்த 5 நாட்களில்கூட துடிப்பாக செயல்பட வேண்டியுள்ளது.

ஆனால் இப்போது காலம் மாறிவிட்டது. இப்போது கேர்ஃப்ரீ போன்ற நவீன சானிடரி பாதுகாப்பு கிடைக்கும் இந்த நாளில், என் மகளும் நான் இளம் பெண்ணாக இருந்ததைப் போலவே ஏன் வீட்டிற்குள் அடைபட்டுக் கிடக்கவேண்டும். நான் வளர்ந்த காலம் வேறு. என் மகள் வளரும் சூழ்நிலை வேறு இன்றைய சிறுமிகள் மாதத்தின் அந்த 5 நாட்களில் கூட துடிதுடிப்பாக செயல்பட வேண்டியுள்ளது.

என் மகளைப் பாருங்களேன். அவள், நான் இளம் பெண்ணாக இருந்த காலத்தில் செயல்பட்டதைவிட மிக...மிக சுறுசுறுப்புடன் செயல்பட வேண்டியிருக்கிறது...படிப்பு விஷயத்திலும் சரி, இதர வேலைகளிலும் சரி. நாங்கள் இருந்ததைப் போல என் மகளையும் வீட்டிற்குள் முடக்கிப்போட நான் விரும்பவில்லை.

அதனால்தான் நான் கேர்ஃப்ரீயைத் தேர்ந்தெடுத்தேன். என் மகளின் துடிப்புக்கும் துள்ளலுக்கும், ஆட்டத்துக்கும் ஓட்டத்துக்கும் ஈடு கொடுக்கும் இணைபிரியாத் தோழி கேர்ஃப்ரீ.

முக்கியமான அம்சம் என்னவென்றால் கேர்ஃப்ரீ ஒரு ரெடிமேட் நாப்கின். துணியையும் பஞ்சையும் வைத்து மடித்து, நேரத்தை வீணாக்கும் தொல்லை கிடையாது.

நான் அந்தக் காலத்தில் செய்தது போல என் மகள் துவைத்து, காயப் போட்டு, சங்கடப்பட வேண்டியதில்லை தேவையான நேரத்திலே சட்டென்று புத்தம் புதுசாக, சுத்தமான ஒரு நாப்கினை எடுத்து அவள் உபயோகிக்கலாம்.

ஒரு விஷயத்தை நான் ஒப்புக்கொண்டாக வேண்டும். முதலில் எனக்கு இத்தகைய ரெடிமேட் நாப்கின்மீது கொஞ்சம் அவநம்பிக்கை இருக்கவே செய்தது. ஆனால், இப்போது என் மகள் மாசாமாசம் கேர்ஃப்ரீ பயன்படுத்தி மகிழ்ச்சியோடு இருப்பதைப் பார்த்ததும் எனக்குப் பூரண நம்பிக்கை ஏற்பட்டு விட்டது. தேவையான சானிடரி பாதுகாப்புக்கும், அசம்பாவிதம் எதுவும் நடக்காமல் தடுக்கவும் சானிடரி நாப்கின் பெரிதாக, கனமாக இருக்க வேண்டும் என்று நான் எண்ணி வந்தது தவறு என்பது இப்போது விளங்குகிறது.

கேர்ஃப்ரீ உபயோகிப்பதால் சுகமாகவும் பாதுகாப்பாகவும் உணர்வதாக என் மகளே சொல்கிறாள். பயமின்றி, கவலையின்றி வெளியே சுற்றவும் முடிகிறது என்றும் கூறுகிறாள். அப்பாடா! எனக்கு ஒரு கவலை விட்டது.

கேர்ஃப்ரீ பயன்படுத்துவதில் சிரமமோ சிக்கலோ எதுவுமே கிடையாது. இதனாலேயே என் மகளுக்கு எந்த விதமான பிரச்னையும் இல்லை. அதைக் குறித்து நான் சந்தோஷப்படுகிறேன்.

எனக்குக் கிடைக்காத ஒரு சுதந்திரமும் பாதுகாப்பும் கேர்ஃப்ரீ மூலம் என் மகளுக்குக் கிடைத்திருப்பதைப் பார்த்துப் பூரிப்படைகிறேன். ஒரு பெண்தான்—அதுவும் ஒரு அன்னைதான்—என்னுடைய மன உணர்வுகளைச் சரியாகப் புரிந்துகொள்ள முடியும்.

காலத்தோடு நாமும் மாறியாக வேண்டும். அதுவும் நமக்கு அதிக சுதந்திரமும் பாதுகாப்பும் தருகிற கேர்ஃப்ரீ வடிவிலே அந்த மாற்றம் இருக்குமானால், அதை நாம் வேண்டாம் என்று ஒதுக்குவானேன்?



கிடைக்கிறது. 10 உள்ள பேக் மற்றும் சிக்கனமிக்க 20 மற்றும் 30 உள்ள பேக்குகளிலும்

தனியும் கிடைக்கிறது. கேர்ஃப்ரீ 10 உள்ள பேக்கில்

கேர்ஃப்ரீ சானிடரி நாப்கின்கள்—பூரண சுகம், பரிபூரண பாதுகாப்பு—மாறுகின்ற காலத்துக்கேற்ற மகத்தான வசதி.

Johnson & Johnson

OBM/5070/TAM

ஜாதி

''என்ன பயித்தியக்காரத்தனம்? எழுபத்தைந்து வயதானால் என்ன? அதற்காக தினமும் எழுபத்தைந்து பேருக்கு அன்னதானம் செய்யணுமா என்ன? ஊர்ல இவ்வளவு பிச்சைக்காரங்க எப்படிப் பெருகிப் போனுங்கன்னு இப்பத்தான் தெரியுது. இந்த மாதிரி தான தர்மம் செய்யறவங்களாலதான் நாட்லே பிச்சைக்காரங்களே பெருகிட்டாங்க. இதுக்கு ஒரு முடிவு கட்டியே ஆகணும். இப்படியே விடக் கூடாது'' ஆத்திரமும் எரிச்சலுமாக இரைந்து கொண்டே போனுன் தர்மராஜன்.

தாத்தாவிடமே நேருக்கு நேர் சொல்ல, கேட்க பயம். தாத்தா, வயதானவர். அவர் இஷ்டப்படி ஏதாவது செய்துவிட்டுப் போகட்டும் என்று பொறுத்துக் கொள்ளவும் மனமில்லை. இருதலைக் கொள்ளியாக, ஆத்திரத்துடன் புலம்பித் தீர்ப்பதுடன் சரி.

ஆறுமுகம் பிள்ளை சிறு வயதில் மிகவும் கஷ்டப்பட்டு முன்னுக்கு வந்தவர். தனது இளமைப் பருவத்தில், கஷ்டகாலத்தில் பலரின் உதவியால் முன்னேறியவர். இப்போது தான் நல்ல நிலையில் ஏராளமான வசதியுடன் இருக்கும் போது தன்னால் முடிந்த உதவிகளைப் பிறருக்குச் செய்ய வேண்டும் என்ற நல்ல எண்ணம் கொண்டவர். பசியின் கொடுமையை உணர்ந்தவராதலால் தன்னால் இயன்றவரை ஏழைகளின் பசியை தீர்ப்பதையே முதற் கடமையாகக் கொண்டவர். தனக்கு தற்போது எழுபத்தைந்து வயது நடப்பதை முன்னிட்டு தினமும் 75 பேருக்கு அன்னதானம் செய்வதையும் அன்னதானம் செய்த பின்பே தான் உணவருந்துவதையும் வழக்கமாகக் கொண்டிருந்தார்.

''மனுஷன்னு இவர்தான் மனுஷன், என்ன தயாள சிந்தை? என்ன பரோபகாரம்? ஏழைகளைப் பார்க்கறதே பாவம்னு நினைக்கறவங்களுக்கு நடுவிலே ஏழைங்களை மதிச்சுப் பேசி என்னமா அன்பாப் பழகுறார்? மனுஷன் தீர்க்காயுசா இருக்கணும். இன்னும் ரொம்ப நாளைக்கு நல்லா இருக்கணும்'' என்று வாழ்த்திச் சொல்லும் போது ஆறுமுகம் பிள்ளையின் பேரன் தர்மராஜனுக்கு மனம் கொதிக்கும்.

ஆத்திரம் தாங்காமல் காவல்காரனை அழைத்து, இந்த பட்டினிப் பட்டாளத்தை உள்ளே வரவிடாதே. வாசலுக்கு வந்தால் துரத்தி அடி என்று உத்தரவிட்டுப் பார்த்தான்.

''பெரிய ஐயா பாத்தா திட்டுவாரே. யார் வந்தாலும் உள்ள அனுப்புன்னு ஐயா சொல்லியிருக்காருங்களே. நான் என்ன செய்யட்டும்'' என்று காவல்காரன் தனது தர்ம சங்கடத்தை விளக்கினுன்.

உடனே கோபாவேசமாக தந்தையிடம் சீறினுன். ''என்னப்பா இது? இதை எவ்வளவு நாளைக்கு அனுமதிக்க முடியும்? நீங்களும் பார்த்திட்டு சும்மா இருக்கீங்களே?''

''நீ எதைச் சொல்றே? எனக்கு எதுவும் புரியலேயே?'' மகனின் ஆத்திரம் புரியாமல் குழம்பினுர் சிதம்பரம் பிள்ளை, தர்மராஜனின் தந்தை, ஆறுமுகம் பிள்ளையின் ஒரே மகன்.

''இதைத்தான் சொல்றயா? நான் என்னவோ ஏதோன்னு பயந்துட்டேன். தாத்தா வயதானவர். அவர் காலம் வரை அவர் இஷ்டம் போல் நடக்கட்டும். அதுல நாம தலையிடறது நல்லாயிருக்காது'' என்று ஒதுங்கிக் கொண்டு விட்டார் சிதம்பரம் பிள்ளை.

''உங்களிடம் சொல்லிப் பிரயோசனமில்லை. நீங்களும் அப்பாவுக்குப் பிள்ளை தான். நானே தாத்தாவிடம் பேசிக் கொள்கிறேன்'' என்று புறப்பட்டவனைத் தடுத்து நிறுத்தினுர் சிதம்பரம் பிள்ளை.

வீட்டில் தந்தை இல்லாத சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருந்த தர்மராஜனுக்கு ஒரு சந்தர்ப்பம் வாய்த்தது. இதுதான் நல்ல சமயமென்று தாத்தாவிடம் சண்டைக்குக் கிளம்பி விட்டான்.

''தாத்தா, உங்க மனசில என்னதான் நினைச்சிட்டிருக்கீங்க?''

''யாருடா பேரப்பிள்ளை தர்மனு? வாடா என்ன விஷயம்?''


''என்ன விஷயமா? நீங்க செய்யறது கொஞ்சமாவது நல்லாயிருக்கா? தான தர்மம்னு சொத்தை வாரியிறைச்சா நாங்களே ஒருநாள் ரோட்டிலே நின்னு பிச்சை எடுக்க வேண்டியதுதான். இனிமேலாவது அதையெல்லாம் நிறுத்தித் தொலையுங்க. இதைச் சொல்லிட்டுப் போகத்தான் வந்தேன்.''

''இதுதானு விஷயம்? வாடா என் பேரப்பிள்ளையே? இவ்வளவு நாள் எனக்கு இந்த விஷயம் தெரியாமப் போச்சே. நல்ல நேரத்திலே நினைவுப்படுத்தினே. நீ சொல்றத சொல்லிட்டே. இப்ப நான் சொல்றதையும் கேட்டுக்க. இந்தச் சொத்தெல்லாம் நானே கஷ்டப்பட்டுச் சம்பாதிச்சது. அதை என் விருப்பம் போல எதுவும் செய்வேன். அதப்

பத்தி என் பேரப் பிள்ளையே, உங்கப்பனே என்னிடம் இதுவரை ஒரு வார்த்தை கேட்டதில்லே. நான் என்ன செய்யறேன்? தப்பான வழியிலே செலவு செய்யலையே? தான தர்மந்தானே செய்யறேன். தர்மம் தலைகாக்கும்னு சொல்வாங்க. கேள்விப்பட்டிருக்கிறியா? அதனாலே உங்களுக்கு எப்பவும் பணக் கஷ்டம் வராது. அப்படியே ஒருவேளை கஷ்டமே வந்தாத்தான் என்ன? அதையும் அனுபவிக்க வேண்டியதுதான். நான் படாத கஷ்டமா? உனக்குத்தான் கஷ்டம்னு என்னன்னே தெரியாது. அனுபவிச்சாத்தான் அதிலிருந்து முன்னுக்கு வர சாமர்த்தியம், தைரியம் வரும். என் சொத்துல நீ சுகமா வாழணும்னு நினைக்கிறதே உன் கையாலாகாத்தனம். இறைக்காத தண்ணீர் நாத்தமெடுப்பது போல் கொடுக்காத செல்வமும் கொள்ளை போயிடும். போ, போ, இதெல்லாம் தெரியாம பேச வந்திட்டே."

தாத்தா தன்னை அலட்சியப்படுத்திப் பேசியது தர்மராஜனைப் பெரிதும் உறுத்தியது. கிழத்துக்கு என்ன திமிர்? தர்மம் தலைகாக்குமாமே?. ஒழுங்கா சொன்னாகேட்கமாட்டார் கையைக் காலை ஒடிச்சுப்போட்டாத்தான் அடங்குவார் என மனத்தில் நினைத்துக் கொண்டு, "சொன்னது நினைவிருக்கட்டும். உங்க வழக்கத்தை இன்னியோட மூட்டை கட்டி வச்சிடுங்க. இல்லாட்டா நடக்கிறதே வேற" என்று எச்சரித்தான்.

"என்னடா, நீ எனக்கு எச்சரிக்கை விடறியா. பேஷ், நல்லாருக்கு. முளைச்சு மூணு இலை விடலை. நீ என்னடா செய்வே? இப்பவே உனக்கு இவ்வளவு திமிரா? இப்படி ஒரு பேரனா? கடவுளே இவனுக்கு நல்ல புத்தியைக் கொடு."



நீலவானமா நமது நீதிமன்றம்?

நமது வழக்குகள் ஒருபோதும்
தீர்க்கப்பட்டதில்லை
ஒரு வழக்கை மற்றொரு வழக்காலும்
ஒரு யுத்தத்தை மற்றொரு யுத்தத்தாலும்
ஒத்திப் போட்டே
மறக்கப் பழகிவிட்டோம்
மறந்து மறந்தே
இந்தப் பூமியை மிச்ச மீதியின்றி
பஸ்மாசூரர்களுக்குப்
பத்திரம் எழுதிவிட்டோம்

இந்த உலகின் உல்லாசமும்
ஆனந்தமும்
நம் கண்ணீரும் கனவுகளும்
தொலை தூரத்தில் எங்கோ
ஒரு போர் வெறியின்
பெருவிரல் அழுத்தத்தில்
ஊசலாடுவது ஞாபகமில்லையா?

நம் பிஞ்சுக் குழந்தைகளின்
மென் மலர்ச் சிரிப்பையும்
அன்னையர் அணைப்பையும்
அழிக்கப்போவோர்
மும்முரமாக மனித குலத்தின்
இறுதி அத்தியாயத்தை
நியூட்ரான் வரிகளில்
எழுதிக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த வாழ்வை
நேசிப்பவர்களே!
தீர்க்க முடியாத வழக்குகளைத்
தீ வைத்துக் கொளுத்தத்
துடிப்போரை விசாரிக்க
அணுகுண்டுப் புகை மூடிய
நீலவானின் மேலே
நீதி மன்றங்கள் உண்டோ
இல்லையோ!
ஒரே ஒரு முறை
சாகப்போகும் நாம்,

யுத்த வெறியருக்குள்ள உரிமை போல
சமாதானப் பிரியருக்குமுள்ள
உரிமையை
நெஞ்சு நிமிர்த்திப்
பிரகடனம் செய்துவிடுவோம்



"உனக்கு மரியாதை ஒரு கேடா?"

"அவ்வளவுதிமிராடா? எதிர்த்தா பேசறே? படவா ராஸ்கல்?" என்றவாறு பேரனின் கன்னத்தில் பளாரென்று ஒரு அறை கொடுத்தார். உணர்ச்சிவசப்பட்டதில், வயோதிகத் தால்கிழவரின் கை, கால்நடுங்கியது உடம்பில் வியர்வை வெள்ளம். இன்று யார் முகத்தில் விழித்தோம்? சிதம்பரம் எங்கு போனான்? அவனும் ஒருவேளை இதற்கு உடந்தையா? தானே கேட்பதற்குப் பதில்பையனைத்தூண்டி விட்டிருப்பானோ?

இத்தனை வயதிலும் இவ்வளவுவலிமையா? தர்மராஜ் ஒரு நிமிஷம் பொறி கலங்கிப் போனான். "என்னைக் கைநீட்டி அடிச்சிட்டே இல்லே. ஒன்னைச் சும்மா விட மாட்டேன். பதிலுக்கு நீயும் வாங்கிக்கோ" என்றவாறே தாத்தா என்றும் பாராமல் அவரது இரு கன்னத்திலும் மாறி மாறி அறைந்தான். இளைஞனை பேரனின் அடியைத் தாங்க முடியாமல் கிழவர் சுருண்டு விழுந்தார். பேச்சுமூச்சற்றுப் போனார். நிலைமை விபரீதமானதை உணர்ந்த தர்மராஜ் சற்றும் தயங்காமல் டாக்டருக்குப் போன் செய்தான். "டாக்டர், தாத்தா நெஞ்சு வலில துடிக்கிறார். உடனே புறப்பட்டு வாங்க.

* * * * *

பெரியவர் ஆறுமுகம் பிள்ளையின் நினைவாக இன்றும் தினசரி 75 பேருக்கு வழக்கம் போல் அன்னதானம் வழங்க ஏற்பாடு செய்திருந்தார் சிதம்பரம் பிள்ளை. தர்மராஜன் இப்போது அதைப் பற்றிச் சிறிதும் கண்டு கொள்வதேயில்லை. மகன் தன்னையும் எங்கு சண்டை பிடிப்பானோ என்று பயந்து கொண்டிருந்தார் சிதம்பரம் பிள்ளை. அன்னதானத்தின் போது சாப்பிட வந்திருந்தவர்களுக்கு தர்மராஜனே பரிமாற ஆரம்பித்தபோது சிதம்பரம் பிள்ளை திகைத்துப் போனார். "என்னடா!" என்றுபிரமித்துப் போய்க் கேட்டார். "தாத்தா அருமையும், அவர் பெருமையும் இப்போத்தான் புரியுது! அவர் வழியிலே போகலேன்னா அவர் ஆத்மா சாந்தியடையாது அப்பா" என்றான் தர்மராஜ்.

தர்மராஜன் பரிமாற ஆரம்பித்ததும் சாப்பிடும் ஏழை ஜனங்களுக்கும் வியப்புத் தாங்கவில்லை. "தாத்தா சாப்பாடுதான் போட்டார். பேரனோ பரிமாறவே ஆரம்பிச்சிட்டாரு. பெரிய மனுசங்க எப்பவும் பெரிய மனுசங்கதான். பேர் தர்மராஜனாச்சே. நீங்க மவராசனா நல்லா இருக்கணும்" என்று வழக்கம் போல் வாழ்த்தத் தொடங்கி விட்டனர்.

மேலட்டையில்—
சுவப்ன சுந்தரி.
வண்ணப்படம்:
யோகா.

ஈ.வெ.ராவின் வெற்றி



ஸி. ஆருக்கு யோசனை: ராதாகிருஷ்ணன்



கிளர்ச்சியாளருக்கு யோசனை: பி.டி.ராஜன்

திருத்தப்பட்ட குற்றச் சட்டத்தின் ஏழாவது பிரிவைப் பயன்படுத்த வேண்டாம் என்று எர்ஸ்கைன் ஸி. ஆருக்கு உபதேசித்தார். கட்சி நோக்கில் பார்த்தால் கூட இது விரும்பத்தக்கதல்ல என்றார்.

இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளிதழ் இச்சட்டத்தை ஒழித்துக் கட்டுமாறு அறிவுறுத்தியது: "காங்கிரஸ் சத்தியாக்கிரகத்துக்கும் தற்போதைய ஹிந்தி எதிர்ப்புப் போராட்டத்திற்கும் மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசம் இருக்கிறது. அதனாலேயே முன்னதில் பங்கேற்றவர்களுக்குக் கிடைத்த தியாகப் புகழ் இரண்டாவதில் கலந்து கொண்டுள்ளவர்களுக்குக் கிடைக்க அனுமதிக்கக் கூடாது. எந்தப் பொறுப்புள்ள அரசும் ஒரு மட்டமான சட்டத்தை நியாயப்படுத்திவிட முடியாது."

காங்கிரஸை ஆதரித்த மற்றொரு நாளிதழான சுதேசமித்திரனும் சட்டத்தைக் கைவிடுமாறும் தேவையானால் மாற்றுச் சட்டம் கொண்டு வருமாறும் கேட்டுக் கொண்டது. ஹரிஜன் பத்திரிகையில் மகாத்மா எழுதிய கட்டுரை ஒன்றில் ஸி. ஆர். இந்தப் பிரச்னைக்குரிய சட்டத்தில் விரும்பத் தகாத பகுதிகளை விடுத்து அவசியமானவற்றை மட்டும் வைத்துக் கொள்ளலாம் என்று யோசனை கூறினார்.

குறிப்பிட்ட சட்டப் பகுதியை ஒழித்துக் கட்டுமாறு கிருஷ்ணமாச்சாரி சட்டசபையில் தீர்மானம் கொண்டு வந்தார். லாஸ்கியை மேற்கோள் காட்டிப் பேசினார். "சுதந்திரத்துக்கு எதிராக அதிகாரபலம்" என்ற தலைப்பில் ஸி. ஆர். இருபதுகளில் எழுதிய ஒரு துண்டுப் பிரசுரத்தை நினைவு படுத்தினார். "பிரதம மந்திரி ரொம்ப மாறிவிட்டார்" என்று குற்றம் சாட்டினார் கிருஷ்ணமாச்சாரி. "சுதந்திரத்துக்குப் பதிலாக அதிகார பலமே சிம்மாசனம் ஏறியிருக்கிறது." ஸி. ஆர். அடைந்துள்ள அதீத எரிச்சல் தான் அவரை இச்சட்டத்தைப் பிரயோகிக்கத் தூண்டியுள்ளது என்றும் கருத்துத் தெரிவித்தார் அவர்.

ஸி. ஆர். பதில் சொன்னார்:

"உங்கள் தீர்மானம் எந்தக் கொள்கைகளின் அடிப்படையில் உருவானதோ அந்தக் கொள்கைகள் எனக்கும் என் சகாக்களுக்கும் நன்கு பரிச்சயமானவை. அவை லாஸ்கியிடமிருந்தோ அல்லது வேறு புத்தகத்திலிருந்தோ காப்பி அடிக்கப்பட்டவையல்ல; எங்கள் தியாகத் தீயில் கனன்று சம்மட்டியால் அடிக்கப் பெற்று உருவானவையே அவை. தீர்மானத்தைப் பிரேரேபிப்பவர் இப்போதே, இன்றே சட்டத்தைக் கைவிடுமாறு கூறுகிறார். நான் சொல்கிறேன் — இது சரியான தருணமல்ல. தற்கொலைக்கு நாம் உடந்தையாகக் கூடாது. நீங்கள் கருதுவது போல் நாங்கள் நிதானம் இழந்து விட்டோம் என்றால் அதற்குக் காரணம் தற்கொலை முயற்சியில் கழுத்தை இழக்க விரும்பாதது தான்."

கிருஷ்ணமாச்சாரி கொண்டு வந்த தீர்மானம் தோற்றது. ஆனால் அடுத்த நாளே முஸ்லிம் லீக் அணித் தலைவர், 'ஆர்ப்பாட்டக்காரர்களின் மீது அடக்கு முறையைப் பிரயோகிக்கும் கொள்கையை அரசு கைவிட வேண்டும்' என்று ஒரு தீர்மானம் கொண்டு வந்தார்: "தமிழனுக்கு ஹிந்தி ஒரு அன்னிய மொழி. வார்த்தைகளில், எழுத்தில், பண்பாட்டில், பாரம்பரியத்தில் — எல்லா விதங்களிலும் அது அன்னியமே; அதைப் புகுத்துவதால் தமிழ்ப் பண்பாடு கடுமையாகப் பாதிக்கப்படும்", என்றார், பன்னீர்செல்வம்.

ஸி. ஆர். பதிலளித்தார்:

"'நீங்கள் பௌத்தர்கள், அஹிம்சாவாதிகள், எங்கள் படையை எப்படித் தாக்கலாம்?' என்று ஜப்பானியர்கள் சீனர்களிடம் கேட்கமுடியாது. அதேபோல் கிளர்ச்சியாளர்களுக்குப் பணம் கொடுப்பவரோ, அவர்களைத் தூண்டி விடுபவரோ, அவர்களுடைய செய்கைகளைக் கண்டிக்காமல் சகித்துக் கொள்பவர்களோ, 'நீங்கள் முன்பு எதிர்த்த சட்டத்தை இப்போது உபயோகிக்கக் கூடாது'

என்று எனக்குச் சொல்லித் தர அருகதையற்றவர்களாகிறார்கள்.''

'''அடக்குமுறை' என்ற சொல்லை உபயோகிக்கிறீர்கள். வழக்கறிஞர்கள், சாட்சிகள், ஒத்தி வைப்புகள், என்று முறைப்படி விசாரணை நடத்தப்பட்டுச் சில மாதம் சிறைவாசம் அளிக்கும் செயலை காங்கிரஸ்காரர்கள் 'அடக்குமுறை' என்று அழைத்ததில்லை. சட்டப்படி விசாரிக்காமல், கைது செய்யாமல், அடித்து, எலும்புகளை உடைத்த போதே அச்சொல் உபயோகிக்கப்பட்டது. அப்போதும் காங்கிரஸ்காரர்கள் அச்சொல்லைக் கையாளவில்லை; பிறர்தான் காங்கிரஸ்காரர்கள் எப்படி நடத்தப்படுகிறார்கள் என்பதை வர்ணிக்க அச்சொல்லைக் கையாண்டனர். இப்போது ஓர் ஊர்வலமாவது நிறுத்தப்பட்டிருக்கிறதா? ஒரு கிளர்ச்சிக்காவது தடை விதிக்கப்பட்டிருக்கிறதா?''

ஸி. ஆரின் வாதங்கள் சிறப்பாய்த்தான் இருந்தன. அவருக்கு இருந்த ஆதரவையும் சந்தேகிப்பதற்கில்லை. எந்தத் தருணத்திலும் எதிர்ப்பு அலை காரணமாக அரசு கவிழ்ந்துவிடுவதற்கான அறிகுறிகள் இருக்கவில்லை. இருந்தும், பின் விளைவுகளை யோசியாமல் செயல்படும் ஸி. ஆரின் அவசரப் போக்கு அவரை ஏமாற்றி, எதிரிகளின் சக்தியை அதிகரித்து விட்டது. கிளர்ச்சியாளர்கள் மீது நடவடிக்கை எடுக்கப் பிரச்னைக்கிடமில்லாத வேறு முறையே இல்லை என்பதை ஒப்புக்கொள்வது கடினம். ஏழாம் பிரிவு தொடர்ந்து பிரயோகிக்கப்பட்டு வந்தது. ஸி. ஆர். பிடிவாதமாய் இருந்தார். ஆனால் அதே சமயத்தில் அதிகாரிகளிடம் ''கைது செய்வது ஒரு அன்றாட வழக்கமாகி விடக் கூடாது' என்றும், 'உண்மையான தொல்லை ஏற்பட்டாலொழிய வழக்குகளைத் தொடர வேண்டாம்' என்றும் அவ்வப்போது கூறி வந்தார். 'சிறைச்சாலைகளில் ஹிந்தி எதிர்ப்புக் கைதிகளுக்கும் பிற கைதிகளுக்கும் இடையே பாகுபாடு இருக்க வேண்டும்; முன்னவர்களைக் கடுமையாக நடத்தக் கூடாது' என்றும் அறிவுறுத்தினார்.

1939 ஜனவரி இறுதிக்குள் ஹிந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்ட 683 பேர்களுக்கு ஆறு வாரங்கள் முதல் ஒரு வருடம் வரை பலவாறாகச் சிறைத்தண்டனை வழங்கப்பட்டது. இவர்களுள் 36 பேர் பெண்கள், 173 பேர் பிரதம மந்திரி வீட்டின் எதிரே ஆர்ப்பாட்டம் செய்தவர்கள். கைதானவர்களுள் ஒருவர் பிற்காலத்தில் தென்னிந்தியாவின் மிகப் பிரபலமான தலைவர்களுள் ஒருவராய் உருவான ஸி. என். அண்ணாதுரை.

ஹிந்துஸ்தானி வகுப்புக்களை, விரும்பியவர்கள் மட்டுமே தேர்ந்தெடுத்துக் கொள்ளவும், பெற்றோர்கள் விரும்பினால் குழந்தைகளை இவ்வகுப்புக்களிலிருந்து நீக்கவும் வகை செய்யுமாறு சிலர் ஸி. ஆரை வற்புறுத்தினர். இவ்வாறு கூறியவர்களுள் இருவர், சத்தியமூர்த்தியும் கல்வித் துறை நிபுணரான தத்துவமேதை சர்வபள்ளி ராதாகிருஷ்ணனும். ஆனால் எந்தப் பெற்றோரும் இந்த வசதியைக் கோரவில்லை என்பதைச் சுட்டிக் காட்டி ஸி. ஆர். இந்த யோசனையை ஏற்க மறுத்துவிட்டார். 'நான் பெருமைக்காகவும் கௌரவம் கருதியும் விட்டுக் கொடுக்காமல் இருக்கிறேன் என்று எண்ணிவிட வேண்டாம்... சத்தியாகிரஹத்தை துஷ்பிரயோகம் செய்யும் இவர்களுக்கு விட்டுக் கொடுக்க நான் தயாராயில்லை. என்னை மன்னியுங்கள்'' என்று மகாத்மாவுக்கு எழுதினார் ஸி. ஆர்.

தென்னகத்தின் உதாரணத்தைப் பின்பற்றி பம்பாயும் ஹிந்துஸ்தானியை அறிமுகப்படுத்தியது. வல்லபபாய், ஸி. ஆரின் கொள்கைகளை வெளிப்படையாக ஆதரிக்க முன் வந்தார். ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்களுள் ஒருவரான பி. டி. ராஜன், போராட்டத்துக்கு வேறு முறைகளைக் கையாளுமாறு ஹிந்தி எதிர்ப்பாளர்களுக்கு அறிவுறுத்தினார். எனினும் ஈ.வெ.ரா.வுக்கு ஓரளவேனும் வெற்றி கிட்டியது என்பதை அக்டோபர் 1938—ல் நடந்த மதராஸ் முனிஸிபாலிடி தேர்தல் உணர்த்தியது. இத்தேர்தலில் காங்கிரஸ் பல தொகுதிகளை இழந்து விட்டது.

(தொடரும்)

தமிழாக்கம்: சீதா ரவி



சுறா மீன்கள் அபாயகரமானவையா?

ஜாஸ். ஜாஸ் II போன்ற திரைப்படங்களைப் பார்த்து சுறா மீன்கள் வேகம் வாய்ந்த அபாயகரமான ஆட்கொல்லிகள் என்ற கருத்து பரவியிருக்கிறது. சான்பிரான்ஸிஸ்கோவில் உள்ள ஸ்டெய்ன்ஹார்ட் அக்வாரியத்தின் டைரக்டர் ஜான் மக்காஸ்கர் இதை மறுக்கிறார். அவை மந்தமான. மெதுவாகச் செல்லும் மீன்கள் என்கிறார். மக்காஸ்கரின் கண்டுபிடிப்பின் படி அவற்றின் வேகம் மணிக்கு மூன்று மைலை விடக் குறைவு தானும்.

ஆதாரம்: சண்டே



மௌனப் புயல்

9

கூடத்தில் உற்சாகமான குரல்கள் கேட்டன. ரஞ்சனி படித்துக் கொண்டிருந்த ஸ்பானிஷ் புத்தகத்தை மூடி வைத்தாள். அம்மாவின் சித்தப்பா பிள்ளை நடராஜனும் அவர் மனைவி சீதாவும் கரோல்பாகிலிருந்து வந்திருந்தார்கள். அரட்டைக்குப் பின், சாப்பிட்டு இளைப்பாறி வெயில் தாழ்ந்த பிறகுதான் கிளம்புவார்கள்.

''நல்லவேளை ஸ்பானிஷ் க்ளாஸ் இன்னிக்கு இருக்கு. வகுப்பு முடிந்ததும் அமெரிக்கன் லைப்ரரியில் உட்கார்ந்து வெயில் தாழ நானும் வீடு திரும்பலாம்'' என்று ரஞ்சனி தனக்குள் சொல்லிக் கொண்டாள்.

நேரமாகி விட்டது என்கிற பரபரப்போடு புடவையை மாற்றிக் கொண்டு வரவேற்பறை வழியாகச் சென்றால் நடராஜன் பிடித்துக் கொண்டு விடுவார் என்று பயந்து பின் வழியாகச் சமையலறையை அடைந்தாள்.

''அம்மா சாதம் போடறியா? ஸ்பானிஷ் வகுப்புக்கு நாழியாயிடுத்து'' என்றாள் மெல்லிய குரலில்.

''உக்காரு போடறேன், இந்தக் காப்பியை அவாளுக்குக் கொடுத்துட்டு வறியா?''

''ஐயோ! என்னை மாமா பார்த்தால் பிடிச்சுப்பார். எனக்கு நாழியாயிடுத்து. நீயே கொடு. நான் பரிமாறிக்கிறேன்''

''நவுக்காரான்னுலே நனக்கு என்கிற வழக்கமான நிஷ்டூரத்தை இன்று காண்பிக்காமல், அம்மா நல்ல வேளையாகக் காப்பி டம்ளரை எடுத்துக் கொண்டு கூடத்துக்குச் சென்றாள்.

மேடைமேல் அம்மா மூடி வைத்திருந்த பாத்திரங்களிலிருந்து அவசரமாகத் தாளத்தில் கொஞ்சமாகப் பதார்த்தங்களைப் பரிமாறிக் கொண்டு அங்கேயே ஓரமாக இருந்த மேஜை மேல் வைத்து ரஞ்சனி சாப்பிட உட்கார்ந்தாள்.

சமையலறை அலமாரி சுவாமி படங்கள் முன் இரண்டு ஜோதிகள் அப்பொழுது ஏற்றப்பட்டுப் பிரகாசத்துடன் எரிந்தன. சாம்பார் மணத்துக்கு மேல் சுகந்த சிருங்காரின் மணம் அறையை நிறைத்தது.

''எங்கே ரஞ்சனியைக் காணும்?'' என்று நடராஜனின் குரல் கேட்டது.

''நானே அவளை அபூர்வமாத்தான் பார்க்கறேன்'' என்றார் அப்பா.

ரஞ்சனி தனக்குள் புன்னகை செய்தபடி சாப்பாட்டைத் தொடர்ந்தாள்.

''ஏன்? காலேஜ் எல்லாம் தான் மூடியிருக்கே?''

''காலேஜ் இல்லேன்னா இன்னொண்ணு! ஸ்பானிஷ் வகுப்பு, ஜர்னலிஸம் லைப்ரெரி, பேட்டின்னு நித்தியம் எங்கேயாவது அலையற வேலைதான்''.

''செய்யட்டும், நல்லதுதான்!'' என்றார் நடராஜன் தாராளமாக. ''கல்யாணமாற வரைக்கும் இப்ப எல்லாப் பெண்களும் இப்படித்தான் இருக்கா''.

''கல்யாணத்துக்குப் பார்க்க ஆரம்பிச்சுட்டேளா அக்கா?''

''இனிமேல்தான் ஆரம்பிக்கணும். நான் கவலைப் பட்டுண்டுதான் இருக்கேன். இவருக்கு எதுக்கும் நேரமில்லே. கவர்மென்டே இவர் தோளிலே உட்கார்ந்திருக்கிற மாதிரி வேலை வேலைன்னு பிராணனை விடறார். ஏதாவது வரன் காதிலே பட்டதானா சொல்லேண்டா நடராஜா''.

''ஆகா, கண்டிப்பாச் சொல்றேன்! ரஞ்சனி மாதிரி டில்லியிலே வளர்ந்த பெண்களுக்கு வடக்கே இருக்கிற பிள்ளைகளாத்தான் பார்க்கணும். தெற்கேயெல்லாம் போய் இந்தப் பெண்களாலே அட்ஜஸ்ட் செய்துக்க முடியாது''.

ரஞ்சனி எழுந்தாள். சிரிப்புப் பொத்துக் கொண்டு 'வந்தது. கையைக் கழுவிச் செருப்பை மாட்டிக் கொண்டு அவர்கள் பேச்சு காதிலேயே விழாத பாவனையுடன் வரவேற்பறைக்குள் எட்டிப் பார்த்துப் பெரிய புன்னகையுடன்,

''ஹலோ மாமா! மத்தியானம் வந்து உங்களோட பேசறேன்! ஸாரி க்ளாஸுக்கு நாழியாயிடுத்து!'' என்றாள்.

நடராஜன் ஏதோ சொல்ல வாயைத் திறப்பதற்குள் தெருவுக்குச் சென்றாள்.

வாஸந்தி

ஜூன் மாதத்து வெய்யில் காலை எட்டரை மணிக்கே உக்கிரத்துடன் தெருவில் நீட்டிப் படுத்திருந்தது. எல்லா வீடுகளின் ஜன்னல்களும் இறுக மூடித் திரைகளினால் மறைக்கப் பட்டிருந்தன. இன்னும் கொஞ்ச நேரத்தில் இந்தக் காலனியில் அநேகமாக எல்லா வீடுகளிலும் கூலரின் ஓசை கேட்க ஆரம்பித்து விடும்.

சௌகர்யமான பாதுகாப்பான வாழ்க்கை. கணவன்மார்களின் பெரிய உத்தியோகத்திற்குத் தகுந்தபடி, குழந்தைகளைப் பப்ளிக் ஸ்கூல்களுக்கு அனுப்பி வைக்கும் மனைவிகள்... பெண்களை நல்ல இடத்தில், கல்யாணம் செய்து கொடுத்துப் பிள்ளைகளைப் பெரிய உத்யோகத்தில் உட்கார்த்தி வைத்து, ரிடையர்மெண்டுக்குள் சொந்த ஊரில் ஒரு வீட்டையும் கட்டி முடித்து விட



ஆசைப்படும் அம்மாக்கள், அப்பாக்கள்... அவர்களது சின்ன பெரிய கவலைகள்... அந்தக் குறுகிய வட்டத்துக்குள் வளைய வந்து தங்கள் பிரச்னைகளுக்கு முடிவு காண்பதே அவர்களுக்குப் பெரிய ஆயாசம்...

'நான் கவலைப்பட்டுண்டுதான் இருக்கேன்' அம்மாவின் வார்த்தைகள் செவியில் பட்ட விநாடியிலிருந்து ரஞ்சனிக்கு மனதில் ஒரு மெல்லிய சங்கடம் புகுந்து நெருடிற்று.

'கவலை'. அதாவது அம்மாவின் எதிர்பார்ப்பின் படி, சம்பிரதாய நியாயமான ஆசைகளின் படி தன் பெண்ணுக்குக் கல்யாணம் ஆகுமா என்கிற கவலை.

அம்மாவை நினைத்து ரஞ்சனிக்கு மெல்லிய பரிதாபம் ஏற்பட்டது. அம்மா எளிமையானவள். வாழ்க்கையில் சிக்கலையும் அதிர்ச்சிகளையும் விரும்பாதவள். அவர்களுடைய வாழ்க்கையைப் பற்றி அவளும் அப்பாவும் எடுக்கிற முடிவைப் பிள்ளையும், பெண்ணும் சமர்த்தாகச் சொன்னபடி கேட்க வேண்டும் என்று ஆசைப்படுபவள். சமையலறை அலமாரியைத் திறந்தால் இந்த அவளது ஆசைகள்,

பிரார்த்தனைகள். ஜோதியின் பிரகாசத்தில் எதிரொலிக்கும். சுகந்த சிருங்காரின் மணத்தில் சுழலும்...

ரஞ்சனி யோசனையுடன் ருமாவின் வீட்டை நோக்கி வேகமாக நடந்தாள். அம்மா அப்பா விருல்யதார்த்தங்களுக்கு விழித்துக்கொள்ள முடியுமா? நடராஜமாமாவும் சீதா மாமியும் இன்று மாலே கரோல்பாகுக்குக் கிளம்புவதற்குள் அம்மா பெண்ணுக்குச் செய்ய வேண்டிய சீர் செனத்தியைப் பற்றி முடிவு கூட எடுத்து விடுவாள். தன் எதிர்பார்ப்பின்படி எங்கே நடக்காமல் போய் விடுமோ என்று அம்மாவுக்கு உள்ளூர பயமிருக்க வேண்டும்.

அன்று வாசலில் சியாம் கிஷோருடன் பேசிக் கொண்டிருந்த போது அம்மா சிடுசிடுத்ததற்கும், மன்மோஹன் சிங்கைக் கண்டு முகம் சுளித்ததற்கும் இதுதான் காரணம். அவளுடைய பயம் அப்பாவையும் தொத்திக் கொண்டிருக்க வேண்டும் – மன்மோஹன் பிந்திரன்வாலேயின் ஆளாக இருக்கலாம் என்று சொல்லும் அளவுக்கு...

'இஸ் இஸ் நாட் ஃபென்னி' என்று அவள் தனக்குள் முணுமுணுத்துக் கொண்டாள். இவர்களுக்கு அதிர்ச்சியும் அளிக்காமல், என் மனசாட்சிக்கு விரோதமாகவும் இல்லாமல் என்றால் இருக்க முடியுமா?



ருமாவின் வீடு வந்து விட்டது. அழைப்பு மணி அடித்ததும் பப்லு ஓடி வந்து கதவைத் திறந்தான். வெளேர் என்ற முகத்தில் விடுமுறையின் ஓய்வு ஏற்படுத்திய சிவப்பு கன்னங்களில் பளபளத்தது.

''ஹாய்!'' என்றான் சினேகிதமாக நமுட்டுச் சிரிப்பு சிரித்துக் கொண்டே.

''தீதி இன்னும் தயாராகல்லே!'' என்றான். ''இன்னிக்குக் கிளாஸுக்குப் போவான்னு தோணல்லே!''

''ஏன்?''

அவன் உதட்டைப் பிதுக்கித் தோளைக் குலுக்கி விட்டு,

''தீதி, உன் ஃப்ரெண்ட் ரஞ்சனி வந்திருக்கா!'' என்று கூவியபடி சென்றான்.

''ஆவோ பேட்டி!''

ருமாவின் தாத்தா வரவேற்பறையின் ஸோஃபா ஒன்றில் உட்கார்ந்திருந்ததை ரஞ்சனி அப்பொழுதுதான் கவனித்தாள். கனமான திரைகள் வெளி வெளிச்சத்தை மூடியிருந்ததால் அறையில் மெல்லிய இருள் படர்ந்திருந்தது.

அவரைக் கண்டதும் அவளுக்குப் பொற்கோவிலின் நினைவு வந்தது. நாலைந்து நாட்களாக வரும் செய்திகளும் விவரங்களும் பிரக்ஞையைத் தாக்கின.

பெரியவரின் முகம் சோர்ந்திருந்தது. இந்த ஒரு வாரத்தில் உடம்பு வற்றி விட்டாற் போல் இருந்தது.

''எப்படியிருக்கிறீர்கள் தாதா?'' என்றாள் அவள் வாஞ்சையுடன்.

இது என்ன அசட்டுக் கேள்வி என்பது போல் அவர் அவளை ஒரு விநாடி ஏறிட்டுப் பார்த்து விரக்தியுடன் புன்னகை செய்தார்.

''எப்படியிருக்கேன் பாரேன்! மூணு வேளை சாப்பிட்டுக் கொண்டு நன்றாகவே இருக்கேன். இரண்டு நாள் சாப்பிடாமல் இருந்தேன். மூணாம் நாளிலிருந்து கரனை கெட்ட உடம்பு சாப்பாடு கேட்கிறது. இத்தனை பெரிய அநியாயம் நடந்த பிறகும்... அவமானம் ஏற்பட்ட பிறகும்...''

சோகமும் கோபமும் சரிசமமாக இருந்தது குரலில்.

பிந்தைய இரவு டீ.வி.யில் அகால்தக்தின் அடித்தளத்தில் ராணுவம் கண்டெடுத்த ஆயுதங்கள் வரிசை வரிசையாக நகர்ந்த காட்சி திடீரென்று கண்ணில் நின்றது.

''எந்த அவமானத்தைச் சொல்கிறீர்கள்?'' என்றாள் அவள் ஜாக்கிரதையாக. ''ராணுவம் பொற்கோவிலுக்குள் சென்றதா, இல்லே ஒரு புனித ஸ்தலத்தை ஒருத்தன் ஆயுதங்களாலே...!''

''இதைப்பார், நேத்து அவன் செத்துப் போயிட்டதா செய்தி வந்தது. இறந்து போனவனைப் பத்தி ஒண்ணும் பேச நமக்கு உரிமை இல்லே. அவன் சட்டத்துக்கு விரோதமா காரியம் செஞ்சிருந்தான்னா, அவனையும் அவன் ஆட்களையும் பிடிச்சு உள்ளே தள்ள

வேண்டியதுதானே ? ஒருகொசுவை அடிக்கக் கோடாலி உபயோகிக்கணுமா ? கோவிலை நொறுக்கணுமா ?''

இந்தக் கிழவரின் கண்களில் தெரிந்த பளபளப்பு அவளுக்கு அடி வயிற்றைக் கலக்கிற்று.

''எல்லா வழிகளும் தோல்வி அடைஞ்சதினுலேதான் ராணுவத்தை அனுப்பவேண்டி வந்தது தாதா !'' என்ருள் அவள் மெல்ல.

''ஆ ! நான் நம்பமாட்டேன் !'' என்ருர் கிழவர் ஆவேசத்துடன் கையை ஆட்டி.

ஒருவாரமாகமனத்தில்சுழன்றகேள்வியை அவள் மெல்லக் கேட்டாள்.

''எனக்கு உங்க கோபம் புரியல்லே தாதா. துவேஷத்தையும் கொலே வெறியையும் ஒருத்தன் கோவிலுக்குள்ளே உட்கார்ந்து பரப்பிஞன்; மதம் என்கிற பெயரில். அது உங்களுக்கு அவமானமில்லேயா ?''

''அவமானம்தான் ! அவனே இரண்டாம் பேர் அறியாமல் அகற்ற வேண்டியது தானே ? ராணுவத்தை அனுப்பி கோவிலே இடிச்சு உலகம் பூரா ஒரு சீக்கியனுடைய மடத்தனத்துக்கு விளம்பரம் கொடுத்து எல்லா சீக்கியர்களேயும் அவமானப்படுத்தணுமா ?''

அவளே ஒரு சோர்வு ஆட்கொண்டது. கூடவே கவலேயேற்பட்டது.

''இதப்பார். இனிமேல் நான் கறுப்பு டர்பனேதான் கட்டிக்கப் போறேன். இந்த அவமானம் துடைக்கப்படும் வரை''.

அவள் உடம்பு சிலிர்த்தது.

கடவுளே. இந்தக் கிழவரின் உடம்பில் ஓடுவது சாதாரண ரத்தம்தாஞ ?

''ஹாய் ரஞ்சனி !''

ருமாவின் குரல் கேட்டு அவள் நிம்மதியுடன் எழுந்தாள். ருமாவுடன் அவளுடைய எதிர்காலக்கணவன் அர்ஜுன் ஸிங்நின்றிருந்தான். ருமாவின் முகத்தில் வழக்கத்தை விட அதிக செம்மை படர்ந்திருந்தது இன்று. பப்லுவின் நமுட்டுச்சிரிப்புக்குக் காரணம் புரிந்தது.

''ஹாய் !'' என்று இருவரையும் பார்த்து ரஞ்சனி சிரித்தாள்.

''ஸ்பானிஷ் க்ளாஸுக்கு வரல்லே?'' என்ருள் ருமாவிடம்.

''வரேன் ! அர்ஜுன் அந்தப் பக்கம்தான் போருன். காரிலே கொண்டு விடறேன் என்கிருன். ஸோ வீ கான் ரிலாக்ஸ் !'' என்று ருமா சிரித்தாள்.

அர்ஜுன் ஸிங்வாட்டசாட்டமாய்களேட்டத்துடன் தெரிந்தான். தந்தையின் பிஸினெஸ்ஸைக் கவனிக்கிருன் என்று ருமா சொல்லியிருக்கிருள்.

''அர்ஜுன், உனக்கு ரஞ்சனியைத் தெரியுமில்லேயா ?''

''அஃப்கோர்ஸ், தி ஜர்னலிஸ்ட் !'' என்று அர்ஜுன் சிரித்தான்.

''கர்தார் ஸிங்கோட நீங்க செஞ்சிருக்கிற பேட்டியை இன்னிக்குப் பார்த்தேன்''.

அவள் வியப்புடன் அவனேப் பார்த்தாள்.

''நானே இன்னும்பார்க்கல்லே! பத்திரிகை வந்து விட்டதா ? என்ன நினைக்கிறீர்கள் பேட்டியைப் பற்றி ?''

அவன் காரின் கதவை அவர்களுக்காகத் திறந்து விட்டுத் தன் இடத்துக்கு மௌனமாகப் போய் உட்கார்ந்தான்.

காரைக்கிளப்பிச்சற்றுத்தொலேவுசென்றதும் சொன்ஞன் அவளுக்குப் புரிபடாத தீவிரத்துடன்.

''நீங்கள் ஹிந்து ஆனதால் அப்படிப்பட்ட கேள்விகள்தான் கேட்பீர்கள். அவர் சீக் ஆனதால் அப்படிப்பட்ட பதிலேத்தான் சொல்வார்''

அவள் குழப்பத்துடன் அவனேப் பார்த்தாள்.


''நீங்கள் ? நீங்கள் என்ன நினேக்கிறீர்கள் ?''

''நானும் சீக் ! என்ஞல் அதை எப்படி மறக்க முடியும் ?''

தாதாவுக்கும் இவனுக்கும் இடையில் இரண்டு தலே முறை வித்தியாசம் என்று அவள் கணக்குப் போடுகையில்,

ருமா அவள் கையைப் பற்றி, ''ப்ளீஸ் ரஞ்சனி, நாம் இதைப் பத்திப் பேசாம இருப்பது நல்லது !'' என்ருள்.

(தொடரும்)



புலிகளின் கல்யாணம்

புனேயில் ஒரு விநோத கூட்டுத் திருமணம் நடந்திருக்கிறது. மணமக்கள் புலிகள். ஆம், அமர், அக்பர், அந்தோனி என்று பெயரிடப்பட்ட நாலரை வயது ஆண் புலிகளுக்கு முறையே கங்கா லக்ஷ்மி, ருக்மிணி என்ற இரண்டரை வயதுள்ள பெண் புலிகளே புரோகிதர் மந்திரங்களே ஓதத் திருமணம் நடந்தது. புனேயின் முனிபல் கமிஷனர் அருண் பாங்கிர்வார்தான் நடத்தி வைத்தவர். பிரதான விருந்தாளிகளில் ஒருவர் ஒரு யானே. மக்கள் மனதில் வனவிலங்குப் பாதுகாப்பு அவசியம் என்பதைப் பதிய வைக்க நகர சபையின் ஆண்டு விழாவில் இந்த ஏற்பாடு.

ஆதாரம்: சண்டே.

இவருடைய பற்களுக்கு
இவர் பாதுகாப்பு அளித்துள்ளார்



உங்கள் பற்கள்
பல்லாண்டு நீடித்திருக்க,
சொத்தை விழுவதிலிருந்து
அவைகளைப் பாதுகாக்க வேண்டும்.
இதோ பினாகா ஃப்ளோரைட். அவைகளுக்கு
ஃப்ளோரைட் மூலம் இன்றியமையா பாதுகாப்
பளிக்கிறது. ஏனெனில், தீங்கு விளைவிக்கும் அமிலங்
கள் பற்களின் பரப்பைத் தாக்கும் போது, பற்களினால்
கிரகிக்கப்பட்ட ஃப்ளோரைட், பல்லின் எனாமலுக்கு
சொத்தையை எதிர்க்கும் ஆற்றலைக் கொடுக்கிறது. இதன் மூலம்
பற்சிதைவு ஆரம்ப கட்டத்திலேயே தடுத்து நிறுத்தப்படுகிறது.
பற்சிதைவையும் சொத்தையையும் பினாகா
ஃப்ளோரைட் உபயோகித்து தடுத்து நிறுத்துங்கள்.

உங்கள் பற்கள் பல்லாண்டு வாழ

பினாகா ஃப்ளோரைட்
டூத்பேஸ்ட்

இந்தியாவின் முதல் முதல் சக்தி வாய்ந்த ஃப்ளோரைட் பற்பசை

ULKA-HCG-BF-12-85-TAM

ஒரு தெய்வம் இடம்

ஒரு குழந்தை எப்போது பிறக்கும்?

எந்த மருத்துவக் கணக்கிற்கும் எட்டாத புதிர்தான் அந்தச் சங்கதி.

பங்கஜத்திற்கு பிரசவ நேரம் நெருங்கிய பொழுது அவள் கணவன் பரமசிவம் தன் வியாபார அலுவல்களையெல்லாம் ஒத்தி ஒத்திப் போட்டுப் பார்த்தான்.

அவளுக்கு இது இரண்டாவது பிரசவம். முதல் குழந்தை தக்கவில்லை. குறைப் பிரசவமானதால் பிறக்கும் போதே இறந்திருந்தது.

அந்த செத்துப் போன குழந்தையை வைத்துக் கொண்டு அவள் பைத்தியம் போல் பிதற்றிய காட்சிதான் அவனை உலுக்கி விட்டது. அதுதான் பரமசிவத்தை அடுத்த குழந்தைக்காக ஏங்க வைத்து விட்டது. பங்கஜத்தின் துக்கம் மாற வேண்டுமானால் இன்னொரு குழந்தை ஆரோக்கியமாகப் பிறக்க வேண்டும்.

டாக்டர்கள் மூன்று வாரம் தள்ளும் என்று சொன்ன சொல்லைக் கூட போன முறை ஆன குறைப் பிரசவத்தை நினைத்து அவ்வளவாக நம்பவில்லை. பரமசிவம் செய்து வந்த வர்ண வியாபாரத்தில் திடீரென்று ஏற்பட்ட விலையேற்றமும் பம்பாயிலிருந்து சரக்கு வராமல் போனதும் பெரிய பிரச்னையை ஏற்படுத்தி விட்டன.

கட்டாயம் பம்பாய் போயே தீரவேண்டிய கட்டம் வந்துவிட்டது.

''நான் போகட்டுமா பங்கஜம்!'' என்று அரைமனதாக அவளிடம் உத்தரவு கேட்டான்.

இந்த முறையும் தெய்வம் தண்டித்து விடுமோ என்ற பயம்.

''நீங்க போய்ட்டு வாங்க. பகவான் இருக்கையிலே ஒண்ணும் பயப்பட வேண்டியிராது.''

அவள் தைரியம் கொடுத்து அனுப்பினாள்.

ஆனால் அவன் புறப்பட்ட மறுநாளே அவளுக்கு பிரசவ வலி ஆரம்பித்துவிட்டது.

பிரசவம் சுகப் பிரசவம் ஆயிற்று.

டாக்டர் கமலா மிகவும் சிறப்பாகக் கவனித்துக் கொண்டாள். தன் நர்ஸிங் ஹோமிலிருந்து டிஸ்சார்ஜ் செய்தும் பங்கஜத்தை வீட்டிற்கு வந்து தினமும் பார்த்துச் சென்றார். நான்கு தினங்களுக்குப் பின்பே பரமசிவம் வர முடிந்தது.

''நீ... நீ... பங்கஜ்... நீ தைரியம் சொன்னதாலதான் நான் பம்பாய் புறப்பட்டேன். இல்லன்னா நா போயிருக்க மாட்டேன். இனிமே...''

''எதுக்கும் கவலை இல்லைன்னு...''

''லேடி டாக்டர் சொல்லிட்டாங்க... இல்லையா... எல்லாம் அந்த ஆண்டவன் செயல்.''

''எனக்கு ஆண்டவன் டாக்டர் கமலா தாங்க.''

''செர்ட்டன்லி... ஐ அக்ரி...''

''டீ ஆறிடும் குடிங்க.''

''டாக்டர் எங்க குடியிருக்காங்க?'' — என்றான்.

''நாளைக்கு அவங்களே உங்களை பாக்க நதா?''

''சொன்னாங்களா... வெரிகுட்...'' என்று திரும்பினான். குழந்தை நெளிந்தது.

அடுத்த நாள் காலை...!

டாக்டர் கமலாவை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தான், பரமசிவம். டாக்டரும் வந்தார். அறிமுகம் செய்து கொண்டான். அறைக்குள் வந்து குழந்தையையும் பங்கஜத்தையும் பார்த்தார்.

''ஹவ் ஈஸ் ஷி டாக்டர்?'' — அவன் கேட்டான்.

''ஓ. கே.''

''டாக்டர்! பங்கஜம் உங்களை தெய்வமா மதிக்கிறா'' என்றான்.

''இந்தச் செல்வம் உங்கள் இருவருக்குமே மனநிறைவு அளித்ததல்லவா?'' என்றாள்.

''டெபனட்லி,'' என்றான் பரமசிவம்.

பங்கஜம் தலையசைத்து ஒப்புதல் தெரிவித்தாள்.

''மிஸ்டர் பரமசிவம், உங்களுக்கு ஓய்விருக்கும் பொழுது டிஸ்பென்ஸரி பக்கம் வர முடியுமா?'' என்றாள்.

''இப்பவே வரேன் டாக்டர்.''

''நோ. நோ! வசதிப்படும்போது வாங்க.''

அன்று மாலையே அவன் டிஸ்பென்ஸரிக்குச் சென்றான். டாக்டரைத் தனியறையில் சந்தித்தான்.

''டாக்டர், நான் பம்பாய் சென்ற பிறகு பங்கஜம் பிரசவிப்பாள் என்று நம்பவே இல்லை.''

''நம்ப முடியாததும் வாழ்க்கையில் நடக்கும். அதிர்ச்சியும் ஏற்படும்.''

தகரோன்

''அதை ஏன் கேட்கிறீர்கள். பங்கஜத்தின் பிரசவடெலிவிராம்வந்ததும்நானே அதிர்ந்து போனேன்.''

''ஏன்?''

''பங்கஜத்துக்கு இது செகண்ட் டெலிவரி. அவளோட ஃபர்ஸ்ட் டெலிவரி குறைப் பிரசவம். அதுவும் குழந்தை இறந்தே பிறந்தது. அது அவளுக்கு பெரிய ஷாக். இந்த டெலிவரி...''

''ஓ! முதல்ல நடந்தது போலவே அமையும்னு நினைச்சிட்டீங்க.''

''எஸ்...''

''நீங்க நினைக்கிற மாதிரி குறைப் பிரசவம் தான்.''

''என்றாலும், குழந்தையை உயிரோடு காப்பாத்திட்டீங்க, டாக்டர்! அவளையும் காப்பாத்திட்டீங்க.''

''முதல் குழந்தை நிலையே இப்பவும் ஏற்பட்டிருந்தா பங்கஜத்தாலே அதிர்ச்சி தாங்க முடியாமலும் போயிருக்கலாம், இல்லையா?''

''நிச்சயமா, டாக்டர்.''

''டிஸ்பென்ஸரியைப் பார்க்கறீங்களா, மிஸ்டர்.''

''பார்க்கலாம், டாக்டர்.''

டாக்டர் முன் செல்ல பரமசிவம் தொடர்ந்தான். பார்த்துக் கொண்டே நடந்தனர். நீண்ட வராண்டாவைக் கடந்து திரும்பினர். முதல் அறைக் கதவு திறந்திருந்தது. அதை எட்டிப்பார்த்தடாக்டர்திரும்பினார். இரண்டு கட்டில்கள் போட்டிருந்த அந்த அறையை அவனும் எட்டிப் பார்த்தான். ஒரு கட்டிலில் மட்டும் களைத்துப் படுத்துக் கிடந்தாள் ஒரு பெண். அவளைப் பார்த்ததும் அவன் முகம் சட்டென்று மாறியது.

அந்தப் பெண்ணும் ஏதோ சொல்ல விரும்புகிறவள் போல அவனைப் பார்த்தாள்.

அவன் திரும்பி டாக்டரைத் தொடர்ந்தான்.

''இங்கே அனாதைப் பெண்களுக்கு இலவசமாகவே மருத்துவம் செய்கிறேன். பிரசவத்திற்கு வரும் பெண்கள் அதிகமாகிக் கொண்டே வருகிறார்கள்'' என்று பேசியபடி டாக்டர் கமலா நடந்தாள்.

''உம்...'' என்று தொடர்ந்தான்.

டாக்டர் கமலா, வராண்டா அடுத்திருந்த அறைக்குள் நுழைந்தார்.

படுக்கையில் படுத்திருந்த பெண் எழுந்தமர்ந்தாள். அவள் தெளிவாக காணப்பட்டாள்.



அருள்வாக்கு

தெய்வமானாலும் ஆத்மாவானாலும் எதுவானாலும் நேராக அந்தத் தெய்வசக்தியினாலேயே inspiration பெற்று (உள் உந்துதல் பெற்று)ப் பரமத் தியாகிகளான ரிஷிகள் அல்லது மதாந்தரங்களின் மூல புருஷர்களாக இருக்கப்பட்ட prophet—கள் ஒரு சாஸ்திரம் அல்லது பைபிள் அல்லது கொரான் என்று கொடுத்து அதுவும் அநுபவிகளான பலபூர்வீகர்களால் அநுஷ்டிக்கப்பட்டு ஒரு tradition என்கிற weight—ஐப் பெற்றிருந்தால் அப்போது அதன்படியே நடந்தால்தான் தர்மமும் ஒழுக்கமும் இருக்கிறது. அந்தந்த தேசத்திலிருக்கிறவர்கள் ''இதுதான் ஈச்வரன் நமக்கேயென்று கொடுத்திருக்கிற மார்க்கம். எந்த மார்க்கத்தில் போனாலும், ஒரு மார்க்கத்திலுமே போகாவிட்டாலும் கூட அவனைப் பிடித்துவிடலாம் என்பது நிஜம் என்றே வைத்துக் கொண்டாலும், அவன் எப்போது எத்தனையோ ப்ளானோடு ஆர்டரோடு பிரபஞ்ச விவகாரங்களை நடத்துவதில் நம்மை இன்ன இடத்தில், இன்ன ஸமாயாசாரத்தில் பிறக்கப் பண்ணியிருக்கிறானோ, அப்போது இங்கே அவன் கட்டளையாக எந்த சாஸ்திரம் இருக்கிறதோ அதை நாம் அநுஷ்டானம் செய்ய வேண்டுமென்பது தான் அவன் சித்தம்' என்று புரிந்து கொண்டு (இப்படிப் புரிந்து கொள்வதுதான் நிஜமான விழிப்பு) அந்தப் படியே பண்ண வேண்டும். இப்படி அவரவருடைய பூர்வீகர் போன ஆசார வழியில் போவதைத்தான் ''ஸமயாசாரமேவசபூர்வை: ஆசரித: குர்யாத்'' என்று சொன்னது. இவ்வாறு பண்ணமற்போனால்—''அந்யதா'' அதாவது வேறே வழியில் போனால்—''பதிதோ பவேத்'' விழுந்து விடுகிறான்.

**ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய ஸ்வாமிகள்**



''ராணி, நீ மனசைத் தளரவிடக் கூடாதம்மா!''

''இனிமே என் உடம்புக்கு எதுவும் வராது டாக்டர். நான் நல்லாயிட்டதும் நீங்க சொன்னதத் தட்டாம என்ன இங்கேயே வைச்சுக்கணும்.''

''அத நா மறக்க மாட்டேம்மா. உம் மனசுக்கு நிறைவு செய்ய வேண்டியது என் கடமை இல்லையா?''

''எம் மனசு நிறைவு கண்டிருக்கு, டாக்டர்.''

''ரொம்ப சந்தோஷம். இன்னொண்ணு சொல்லணும். இத பார்,'' என்று டாக்டர் ஒரு செக்கைக் காட்டினார். அதில் பத்தாயிரம் ரூபாய் குறிக்கப்பட்டிருந்தது.

''ராணி! பங்கஜத்தோட குழந்தை இறந்து பிறந்தது. பங்கஜத்தின் கதையை நான் அறிய வந்தேன். அதுபோலவே யாரோ ஒருவனால் ஏமாற்றப்பட்ட உன் கதையையும் அறிவேன். உன் குழந்தை நல்ல செல்வந்தர் வீட்டில் வளரட்டும். அதே சமயத்தில் பங்கஜத்தின் உயிரும் காக்கப்படட்டும் என்று எண்ணினேன். நீயும் ஒப்புக் கொண்டு உன் குழந்தையைக் கொடுத்தாய். அது பங்கஜத்தின் குழந்தையாக மாறியது. அதற்காக பங்கஜத்தின் கணவர் இந்த டிஸ்பென்ஸரி நிதிக்கென்று பத்தாயிரம் அனுப்பியுள்ளார். ஆனால் அது உனக்குத்தான் சேர வேண்டும்.

''மன்னிக்கணும் டாக்டர். எனக்குப் பணம் வேண்டாம். என் குழந்தையை எடுத்துக் கொள்வதற்கு முன்பே எனக்களித்த உறுதிப்படி இங்கு தொண்டு செய்ய வாய்ப்பளிக்க வேண்டும். அவ்வளவுதான், அவருக்கு...''

''நான் இன்னும் குழந்தை மாற்றத்தைப் பற்றி எதுவும் கூறவில்லை. விரைவில் சொல்லி விடுவேன்.''

''நீங்க எதுவும் சொல்ல வேண்டாம், டாக்டர். நானே சொல்லிவிட்டேன்.''

''என்ன?''

''ஆமாம் டாக்டர்! அவரை எனக்குத் தெரியும். உங்களுடன் அவர் வந்த போது என்னைப் பார்த்தார். பிறகும் வந்து சந்தித்தார். இதே அறையில் பங்கஜத்தின் பிரசவம் நடந்தது. நான்தான் குழந்தையை மாற்றி விடும்படி கூறினேன். மாற்றினார்கள் என்று சொல்லிவிட்டேன். அவரே கேட்டாலன்றி நீங்கள் சொல்ல வேண்டாம். என் மகனால் பங்கஜத்துக்கு மனநிறைவு. அவனுக்கு மனநிறைவு தந்தேன் என்பதால் எனக்கும் நிறைவு. அவருக்கும் நிறைவுதான்.''

''அதெப்படி, ராணி!''

''என் பிள்ளைக்குத் தந்தை அவர்தானே டாக்டர்! அவர் பிள்ளை சேர வேண்டிய இடத்திலே சேர்ந்தாச்சு. அவர் அவனை அனாதையாக்கணும்னு பார்த்தார். அவன் அவரைப் பிள்ளையில்லாத அநாதையாக்காமே காப்பாத்திட்டான். இதுக்குப் போய் நான் பணம் வாங்கினா அவர் பிள்ளையை அவருக்கே வித்த மாதிரி ஆயிடுமே டாக்டர்?'' என்றாள் அவள்.



22

ஒரே நிமிடத்தில் தாரக்ராம் வசுமதியை எடை போட்டு விட்டார். தாம் யார் என்று தெரிந்த பிறகும் அவள் அலட்சியமாக இருக்கிறாள் என்றால் அவள் ஒன்று முரட்டுப் பிடிவாதம் செய்கிறவளாக இருக்க வேண்டும் அல்லது அதீத திறமையுள்ளவளாக இருக்க வேண்டும். சில விநாடிகள் தாரக்ராம் யோசித்தார். அவருடைய நிறுவனத்தில் இவளைப் போல யாராவது அலட்சியமாக இருந்திருந்தால் அக்கணமே அவளைக் கால் விரலால் தேய்ச்சு நசுக்கியிருப்பார். ஆனால் இப்போது காரியம்தான் முக்கியமே தவிர, வீர்யம் அல்ல.

"நான் ஒரு தர்ம சங்கடமான நிலையில் இருக்கேன், மிஸ். வசுமதி" என்றார்.

என்ன சங்கடம் என்று வசு விசாரிக்கவில்லை.

"அப்படியா?" என்றாள்.

"என் பெண் மாயாவைப் பார்க்கணும்னு என் உடம்பின் நாளங்களெல்லாம் துடிக்கிறது மிஸ் வசு. ஆனா என் மாப்பிள்ளை எனக்குத் தடை உத்தரவு போட்டிருக்கிறார்"

"இது விஷயமா கேஸ் போட வாய்ப்பு இருக்குமான்னு நீங்க லீகல் அட்வைஸ் கேக்க வந்திருக்கீங்களா சார்?"

"இல்லை".

"பின்னே?"

"உன் மூலமா என் பெண் சௌக்கியத்தைத் தெரிஞ்சுக்கலாம்னு நினைச்சேன்".

"நான் உங்க மாப்பிள்ளை வீட்டுக்கு அடிக்கடி போய் வரேன்னு யார் சொன்னா, மாயாவோட சௌக்கியம் என் மூலமா தெரிஞ்சுக்கலாம்னு நீங்க நினைக்கிறதுக்கு?"

"ரொம்ப ஸிம்பிள்"

"ஓ. ஐ ஸீ..."

"என் பெண்ணும் மாப்பிள்ளையும் மெட்ராஸ் வந்தப்ப, வீட்டு வாசல்லே செம்மண் கட்டிக் கோலம் போட்டு, மாவிலைத் தோரணத்தாலே வரவேற்றவள் நீன்னு எனக்குத் தெரியும். இன்னும் ஒரு விஷயமும் தெரியும்"

"அது என்னவோ?"

"நான் குறுக்கிடலேன்னா உன் கதையே வேறு விதமா மாறியிருக்கும்".

"என் கதையை மாத்தினவரே நீங்கதான்னு எனக்குத் தெரியும்".

"தென் யூ ஆர் எ வெரி ஸ்டுபிட் கேர்ள், மிஸ். வசுமதி".

தாரக்ராம் ஆசை தீர வாயார அழுத்திச் சொன்னார்.

வசுமதியின் கண்கள் சிவந்தன.

"என்ன சொன்னீங்க, ஸ்டுபிட் கேர்ளா?"

"யெஸ், ஐ ரிபீட். நான் என் சுயநலத்தில் அரவிந்தனை மாப்பிள்ளையாக்கிக்க ட்ரை பண்ணினேன். யாரைப் பிடிச்சா காரியம் எளிதா முடியும்னு யோசிச்சேன். கே.ஜி.கே. நினைவுக்கு வந்தார். ஆனா எங்க ரெண்டு பேர் சக்திக்கு நீ அடி பணியணும்னு அவசியமில்லையே... நீ உண்மையாகவே அரவிந்தனை விரும்பியிருந்தா, உலகத்திலே எத்தனை ஆயிரம் சக்திகள் வந்திருந்தாலும் உன்னை அசைச்சிருக்க முடியாதே? நீ எப்படி அசைஞ்சே?"

வசுமதி பதில் கூறவில்லை.

"மாயா எப்படி இருக்கா?"

"ஸாரி சார்... அவ ஒரு தேறாத, தேற முடியாத மெண்டல் கேஸ்".

"ஏன்... என்ன ஆச்சு?"

"கலியாணமாறதுக்கு முன்னாடி அவ உங்க வீட்லே எப்படி இருந்தாளோ எனக்குத் தெரியாது... இப்ப நாளுக்கு நாள் முத்திட்டு வர்றதா எனக்குப் படறது".

தாரக்ராம் முகம் வெளிறியது.

"உண்மையாகவா?"

"ஏன் பொய் சொல்லணும்?"

"வேளா வேளைக்கு மருந்தும் மாத்திரையும் அரவிந்தன் கொடுப்பதில்லையா?"

"அவள் மாத்திரை சாப்பிட்டு நான் பார்க்கலை"

"என்னதான் செய்கிறாள்?"

"இதை நீங்க என்னிடம் கேட்பதில் அர்த்தமில்லை. மாயா இஸ் ஹிஸ் ஒய்ஃப்"

பி. வி. ஆர்.

''மிஸ்.வசு.பளீஸ்ஹெல்ப் மீ...கைன்ட்லி ஹெல்ப் மீ... மாயா எப்படி இருக்கிறாள்?''

''கத்தறா... கோபம் வந்தா கையில் கிடைச்சதை விசிறி எறியறா. ஏன் சார் நீங்க ஒரு பொண்ணுடைய வாழ்க்கையோட விளையாடப் பார்த்தீங்க? அரவிந்தன் உங்களுக்கு என்ன பாபம் செய்தார்?''

''அவனாலே அவள் காலப்போக்கில் குணமடைவாள்னு நான் நம்பினேன்.''

''போகிற போக்கைப் பார்த்தா ரெண்டு பேரையுமே மெண்டல் அஸைலத்தில் சேர்க்கும்படியாயிடும்''.

''ஐ டோண்ட் பிலீவ் யூ!'' என்ற தாரக்ராம், ''நீ ஏன் உன் பழைய சிநேகிதனைப் பத்தி இப்படிப் பேசணும்?'' என்றார்.

''அவர் இன்னும் என் சிநேகிதர்தான், மிஸ்டர் தாரக்ராம். இன்னும் பழசாகவில்லே''

''புரியலே!''

''தினசரி ரெண்டு வேளையும் அரவிந்தனுக்கு ஹெல்ப் பண்ண நான் போயிட்டுத்தான் இருக்கேன். உள்ளங்கையிலே ஒரு நெருப்புத் துண்டை வைச்சுண்டு, கீழேயும் போட முடியாம அணைக்கவும் முடியாம அவர் அவதிப்படறார்''.

''நான் போய்ப் பார்க்கிறேன். ஐ டோண்ட் கேர் அபவுட் ஹிஸ் கண்டிஷன்ஸ்!''

''என்னைக் கேட்டா அது சாதுரியமான செயல்னு படலே''

''உன்னைக் கேட்கவில்லே''.

''ஓ.கே. தாங்க்யூ... உங்க முரட்டுத்தனத்தாலே ஒரு ஆண்பிள்ளை வாழ்வை நாசம் பண்ணினீங்க... இப்ப உங்க பிடிவாதத்தாலே நரகத்திலே இருக்கிற பெண்ணை இன்னும் ஆழமா அமுத்தணும்னு நினைச்சா எனக்கு என்ன?''

வசுமதி எழுந்தாள்.

''ஜஸ்ட் எ மினிட், மிஸ் வசுமதி, நாம ரெண்டு பேருமே கொஞ்சம் அத்து மீறி முரட்டுத்தனமா பேசிட்டோம். ஐ'ம் ஸாரி... கொஞ்சம் உட்காருங்க''.

தன் வழிக்கு அவரை எளிதாக இழுத்துக்கொள்ளலாம் என்று வசுமதிக்குப் பட்டது. ஸீனியர் இன்னும் ஒரு மணி நேரத்துக்கு வர மாட்டார். தன் திட்டத்தை ஏன் இவர் மூலம் செயல்படுத்தக் கூடாது?

''ஓ.கே.... என்ன கேட்க ஆசைப்படறீங்க சார்?''

''இப்ப மாயா மருந்து மாத்திரை ஏதும் இல்லாம இருக்கா! ஆம் ஐ கரெக்ட்?''

''யெஸ்''.

''அவளுக்கு குணமாறமாதிரித் தோணலே, அல்லவா?''

''சொல்லப் போனா இந்த ரெண்டு மாசத்திலே அதிகமாயிருக்கு''

''இப்படியே போனா...?''

''என்னைக் கேட்டா குணமாகாமப் போயிடும்... அது சரி நான் ஒண்ணு உங்களைக் கேட்கலாமா?''

''ஷ்யூர்'' என்றார் தாரக்ராம்.

''மிஸ்டர் அரவிந்த என்னமோ கண்டிஷன்ஸ் போட்டார்னு சொன்னீங்களே, அவை என்னன்னு சொல்ல முடியுமா?''

சொன்னார்.

''ஸோ, ரெண்டு வருஷத்துக்கு அப்புறம் மாயாவை அவரே ஒரு அஸைலத்தில் சேர்த்து விடுவார். அந்த வருஷத்திலும் குணமாகாமப் போனால் டிவோர்ஸ் வாங்கிப்பார். இல்லையா?''

''யெஸ்''

''அது வரையில் நீங்க உங்க பெண்ணை மறந்து வாழப் போகிறீர்களா?''

''என் பெண் மாயாவுக்கு ஒரு நல்ல கதி கிடைக்கணும்ங்கற வெறியிலே அரவிந்தன் போட்ட நிபந்தனைக்கெல்லாம் தலை ஆட்டினேன்''

''உங்களைப் போல ஒரு பெரிய தொழிலதிபர், பெரிய மனுஷர் செய்யற காரியமா சார் இது?''

''என் பொண்ணுன்னு வரப்போ நான் ஒரு அப்பாதான், மிஸ் வசுமதி. இண்டஸ்ட்ரியலிஸ்ட் இல்லே. வி.ஐ.பி. இல்லே...''



''எனக்குப் புரியறது... எனக்குத் தெரிஞ்ச வரை, மிஸ்டர் அர்விந்த் ஒரு பிடிவாதக்காரர். நல்லவர்தான். ஈரமுள்ள நெஞ்சு உள்ளவர்தான். ஆனா அவருடைய பெஸ்ட் இயர்ஸ் வீணாப் போறதை அவர் விரும்ப மாட்டார்...

''அதாவது....'' தாரக்ராம் இழுத்தார்.

''யெஸ். சொன்னபடி செய்துவிடுவார். ஆனா அப்படிச் செய்துட்டா உங்க கௌரவம் என்ன வராகும்னு கொஞ்சம் யோசிச்சுப் பாருங்க...

''நீ என்ன சொல்ல வர்றே?''

''தற்காலிகமா மாயாவை பாம்பேக்கு அழைச்சுட்டுப் போங்க. ரெண்டு மூணு மாசம் வைச்சுண்டுத் திருப்பிக் கொண்டு விடறேன்னு சொல்லுங்க''

சொல்லும்போதே வசுமதியின் கண்களில் மாயா இல்லாத அரவிந்தனுடைய வீடு கண் முன் நின்றது. மாயா எனும் ஒரு காயை சதுரங்கப் பலகையிலிருந்து அகற்றி விட்டால்? பம்பாய் செல்லும் மாயா அங்கேயே தங்கிவிட்டால்?

அரவிந்தன் எத்தனை நாட்களுக்கு உடலுக்கோ. உள்ளத்துக்கோ உபயோகமில்லாத ஒரு பெண்ணைப் பற்றியே நினைத்து மாய்ந்து போகப் போகிறான்? ஒரு நாள் இல்லாவிட்டால் ஒரு நாள் அவன் யதார்த்த உலகுக்குத் திரும்பி வரத்தானே வேண்டும்?

''நீ சொல்றது அவ்வளவு எளிசா சாத்தியமாகும்னு படலே மிஸ் வசுமதி.... கலியாணமாகி இன்னும் முழுசா மூணு மாசம் ஆகவில்லே''.

''அதனால் என்ன? இன்னும் மூணு மாசத்தில் மாயா இன்னும் எப்படிச் சீரழிஞ்சு போவாளோ?''

''அரவிந்தன் சம்மதிக்காமல் போனால்?''

''நான் சம்மதிக்க வைத்தால்?''

''ஓ. கே. அப்புறம்?''

''நீங்க உங்க பெண்ணின் வைத்தியத்தை அங்கே தொடர்ந்து நடத்துங்க''.

''நான் ஒரு விஷயம் கேட்கலாமா, மிஸ் வசுமதி?''

''கேளுங்க'';

''அந்தரங்கமான விஷயம்''.

''புரியலே...''

''அவங்க ரெண்டு பேருடைய பெட்ரூமையும் பார்க்கிற வாய்ப்பு உனக்கு இருந்திருக்கணுமே!''

''அவங்க ரெண்டு பேருடைய பெட்ரூமை நான் இன்னும் பார்க்கலே'' என்றாள் வசுமதி.

''இனை சரி போய் வருவதாகச் சொன்னே?''

''நான் மாயாவின் பெட்ரூமைத்தான் பார்த்திருக்கிறேன் சார். அந்த அறைக்கு வெளியே ஒரு பாயையும் தலையணையையும் கூடப் பார்த்திருக்கிறேன்''.

''ஐ மீன்...'' தாரக்ராம் இழுத்தார்,

ஆமாம் என்கிற பாவனையில் வசுமதி தலை அசைத்தாள்.

''தாங்க்ஸ்!'' என்ற தாரக்ராம் எழுந்தார். பிறகு. ''என் மாப்பிள்ளை எப்பேர்ப்பட்டவன்னு நீ உன்னை அறியாமலே எனக்கு உணர்த்திட்டே, மிஸ் வசுமதி! நான் என் அரவிந்தனை நினைச்சுப் பெருமைப் படறேன்.. அதே சமயத்தில் உன்னைச் சந்திக்க இவ்வளவு தூரம் வந்ததுக்கு வெட்கப்படறேன் ... உன் உள் நோக்கம் என்னன்னு எனக்கு வெட்ட வெளிச்சமாப் புரிஞ்சுட்டுது. நீ அரவிந்தனுக்கு ஒரு உண்மையான சிநேகிதியா இருந்திருந்தா, என் பெண்ணைக் குணமாக்கற பரீட்சையிலே நீ அவனுக்கு உதவியா இருந்திருப்பே. மாறா, என் பெண் ஒரு தேறாத கேஸ்னு என்கிட்டயே சொல்றே? ஏன்? ஏன்? ஏன்னு நான் சொல்ல வேண்டாம். நீயே உன் மனச்சாட்சியைக் கேட்டுக் கொள்!''

அடுத்த கணம் தாரக்ராம் வெளியேறினார்.

சொல்லி வைத்தாற் போல கேஜிகே கறுப்பு கவுனை அணிந்தவராய் இடது கையில் கேஸ் கட்டுடன் எதிரே வந்தார்



அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி —1985



அமரர். கல்கி அவர்களின் நினைவாக ஆண்டு தோறும் நடக்கும் இந்தச் சிறுகதைப் போட்டியில் வழக்கம் போல் இந்த ஆண்டும் எழுத்தாளர்கள் பெருமளவில் உற்சாகத்துடன் கலந்து கொண்டு ஒத்துழைக்க வேண்டுகிறோம்.

முதல் பரிசு	ரூ. 1000
இரண்டாவது பரிசு	ரூ. 500
மூன்றும் பரிசு (இரு கதைகளுக்கு தலா ரூ. 250 வீதம்)	ரூ. 500

ஆக மொத்தம் ரூ. 2000 பரிசுகளாக வழங்கப் பெறும்.

தவிர பிரசுரத்துக்கு ஏற்கப்படும் ஒவ்வொரு கதையும் ரூ. 100 சன்மானம் பெறும். அறிமுக எழுத்தாளர்களுக்குப் போனஸ் உண்டு:

* கதைகள் சொந்தக் கற்பனை என்றும், கதை வேறு எந்த உருவிலும் பிரசுரமானதில்லை என்றும் உறுதி மொழி தேவை.

* அறிமுக எழுத்தாளர் எனில் இதற்குமுன் எந்தப் பத்திரிகையிலும் எழுதியதில்லை என்றும் போட்டி முடிவு அறிவிக்கப்படும் வரை எழுதமாட்டேன் எனவும் உறுதிமொழி தர வேண்டும்.

* நடுவர் குழு கதைகளைப் பரிசீலித்துப் பரிசுக்குரிய கதைகளைத் தேர்ந்தெடுக்கும்.

கதைகளை அனுப்ப வேண்டிய கடைசி தேதி: ஜூன் 15.

* உறையின்மேல் அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி என்று குறிப்பிடுதல் அவசியம்.

* பிரசுரத்துக்கு ஏற்கப்படாத கதைகளைத் திரும்பப் பெறப் போதிய அளவு தபால் தலை ஒட்டிய சுய விலாசமிட்ட உறையைக் கதையுடன் கூடவே அனுப்புதல் வேண்டும். பின்னால் தனியே அனுப்பிப் பயனில்லை.

* கதைகள் கல்கியில் நாலு பக்கங்களுக்கு மேற்படாதிருப்பது நலம். ஒருவர் எத்தனை கதைகள் வேண்டுமானாலும் அனுப்பலாம்.

* எவ்விதக் கடிதப் போக்குவரத்தும் கிடையாது.

* சந்தேகம் எழும் விஷயங்களில் ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.

* போட்டி முடிவும் முதல் பரிசுக் கதையும் கல்கி ஆகஸ்டு 4 ஆண்டு மலரில் பிரசுரமாகும்.

ஆசிரியர், கல்கி, சென்னை—600032.

"வாங்கோ, மிஸ்டர் தாரக்ராம்! வாங்கோ!" என்றார்.

"ஸாரி மிஸ்டர் கேஜிகே. நான் வந்த வேலை முடிஞ்சுட்டுது... நான் வரேன்..."

"என்ன மிஸ்டர் தாரக்ராம் ஏன் இவ்வளவு விரக்தியா பேசறேள்! கமான், கொஞ்சம் காபியாவது குடிச்சுட்டுப் போங்கோ..."

தாரக்ராம் சிரித்தார்.

"இந்த ஒரு மணி நேரமா உங்க பிரில்லியண்ட் ஜூனியர் எனக்கு ஜில்லுன்னு ஒரு ட்ரிங்க் குடுத்து, நான் குடிக்கிறேனா இல்லியான்னு பார்த்தா. பாவம் அவளாலே என்னை ஜெயிக்க முடியலே. உங்க வெரி க்ளெவர் ஜூனியர்ட்டே சொல்லி வையுங்கோ, இந்த தாரக்ராம் பெரிய பெரிய புள்ளிகளைப் பந்தாடியவன்னு..."

"சார், நீங்க என்ன சொல்றேள்? வசுமதி, இங்கே என்ன நடந்தது?"

வசுமதி தலையைத் தாழ்த்திக் கொண்டாள்.

"அவ சொல்லமாட்டா, மிஸ்டர் கேஜிகே. என் பெண்ணை குழி வெட்டிப் புதைக்கணும்னு உள்ளூறத் துடிக்கிறா... நீங்க பெரிய லாயர்! ஆனா இப்படிப்பட்ட விஷ ஜந்துக்கள் ஜூனியரா இருக்கிறது உங்க சேம்பர்ஸ்க்கே அவமானம்... அடுத்த தடவை நான் என் கம்பெனி கேஸ் விஷயமா இங்கே வர்றப்ப, இதோ இந்த ஜூனியர் உங்ககிட்டே தான் தொடர்ந்து இருக்கான்னு தெரிஞ்சா, நான் வேறே லீனியரை ரிடெய்னரா வைச்சுக்கத் தயங்கமாட்டேன். இட் இஸ் நாட் எ த்ரெட்... இட் இஸ் எ ஸ்வீட் பிராமிஸ்!"

தாரக்ராம் திரும்பிப் பாராமல் நடந்தார்.

புயல் ஓய்ந்தது.

"என்ன நடந்தது?" என்றார் கேஜிகே.

"அவர் தம் பெண்ணின் சௌக்கியத்தைத் தெரிஞ்சுக்க வந்தார்!"

"பொய்! அதுக்கு மட்டும் அவர் வந்திருந்தா ஏன் உன்னைப் பத்தி இப்படிப் பேசிட்டுப் போகணும்?"

வசுமதி பதில் பேசவில்லை!

"இதோ பார், மிஸ் வசுமதி. தாரக்ராம் இஸ் எ கோல்ட் மைன்! கிடைச்ச ஒரு தங்கச் சுரங்கத்தை நழுவ விடறதா இல்லே பத்தோடு பதினொண்ணா இருக்கிற ஜூனியரை, அவ என்ன கெட்டிக்காரியா இருந்தாலும்சரி, கைவிடறதாங்கறகேள்வி எழுந்தா நான் என்ன செய்வேன், எதை உதறி எறிவேன்னு உனக்குத் தெரியும் இல்லியா?" என்றார் கேஜிகே.

அவளுக்குப் பதில் தெரியும்.

ஆனால் வசுமதி தன் வாயால் சொல்லவில்லை.

ஆத்திரத்திலும், கோபத்திலும் அழுகை தான் வந்தது.

(தொடரும்)

ராமு ஹைஸ்கூலுக்குப் போகிறான்

அறிமுக எழுத்தாளர்





ராமு ஆறும் வகுப்பு படிக்கவேண்டுமானால் ஹைஸ்கூலுக்குத்தான் போக வேண்டும். அது அவனுடைய சேரியிலிருந்து ஐந்து கி. மீ. தூரத்திலிருந்தது. அங்கே இங்கு மாதிரி தரையில் உட்கார வேண்டியதில்லை. உட்காருவதற்கும், எழுதுவதற்கும் பெஞ்சுகள் போடப்பட்டிருக்கும். மேலும் பெரிய பெரிய விளையாட்டுக்களெல்லாம் விளையாடலாம். இங்குள்ளதுபோல் ஓலைக் கூரையின்கீழ் மணலில் உட்கார்ந்து படிக்க வேண்டி இருக்காது. ராமு ஐந்தாவது பரீட்சையில் எல்லாப் பாடத்திலும் முதல் மார்க் வாங்கி இருப்பதாக ஆசிரியர் சொன்னதிலிருந்தே கனவு காண ஆரம்பித்து விட்டான்.

ஹைஸ்கூலில் சேர்வதை நினைத்து நினைத்து ராமு மகிழ்ச்சி அடைந்தான்.

பரீட்சை முடிந்ததும் மத்தியானம் வெயிலில் செருப்பில்லாத தன் கால்கள் சுடுவது கூடத் தெரியாமல் இந்நினைவுகளிலேயே ராமு குடிசைக்குச் சென்றான்.

ராமுவின் அம்மா கருப்பாயி சோறு பொங்கத் தயாரானாள்.

ராமு, "யப்பா எனக்கு அந்த ஸ்கூலுக்குப் போகும்போது புதுத் துணி, நோட்டு, புத்தகம், செருப்பு எல்லாம் வாங்கித் தரணும்" என்றான்.

"சரிடா, எல்லாம் வாங்கித் தரலாம்."

"யப்பா, அப்புறம் எனக்குச் சாப்பாடு கொண்டு போவப் பாத்திரம் வாங்கித் தரணும்."

"சரிடா, கண்ணு, எல்லாம் வாங்கித் தர்றேன். நீ இப்ப போய் விளையாடு."

ராமுவும் சந்தோஷத்துடன் விளையாடச் சென்றான்.

மறுநாள் காலை, பழனியாண்டி பண்ணையார் வீட்டிற்குப் போகும் போது, ராமுவையும் கூட்டிச் சென்றான்.

பண்ணையார்—"யாருடா பையன்?" என்று கேட்டார்.

"எம் பையனுங்க."

"என்ன பண்ணிக்கிட்டிருந்தான்?" — பண்ணையார்.

"படிச்சிக்கிட்டிருந்தானுங்க" — பழனியாண்டி.

"ஒழுங்கா இருப்பானா?"—

"இருப்பானுங்க."

"சரி சரி, போய் வேலையைப் பாரு."

ராமுவின் அப்பன் பழனியாண்டி அவ்வூர்ப் பண்ணையாரின் வீட்டில் மாட்டுவண்டி ஓட்டிக கொண்டிருந்தான். பண்ணை வீடு சற்றுத் தொலைவில் இருந்தது.

ராமுவின் அம்மா கருப்பாயி கூலி வேலைக்குப் போய்க் கொண்டிருந்தான். இருவரும் காலையில் சென்றால் சாயந்திரம்தான் திரும்புவார்கள்.

ராமுவிற்குப் பசித்தது. குடிசையில் ஒன்றும் இல்லை. பானையில் உள்ள தண்ணீரைக் குடித்துவிட்டுப் பெற்றோர் வருகைக்காகக் குடிசைக்குள் படுத்துக் கொண்டான்.

சாயந்திரம் இருட்டும் நேரம் பழனியாண்டியும், கருப்பாயியும் குடிசைக்கு வந்தனர். ராமு ஓடிச்சென்று அம்மாவின் இடுப்பைக் கட்டிக் கொண்டான்.

"எம்மா, எனக்கு இன்னியோடு பரீட்சையெல்லாம் முடிஞ்சிடுச்சிம்மா."

"எப்பா, என்னையும் ஆறாங்கிளாஸ் படிக்க அனுப்பப்பா" என்று அப்பா வந்தவுடன் மனு தாக்கல் செய்தான்.

"சரிடா, என்ன கண்டிப்பா ஆறாங்கிளாஸில சேக்கறேன். இந்தா இப்ப இந்தத் தின்னு" என்று தூக்குப் பாத்திரத்தில் பண்ணையார் வீட்டிலிருந்து கொண்டு வந்ததைக் கொடுத்தான் பழனியாண்டி, சற்று அலுப்புடன்.

ராமுவிற்கு விடுமுறை நாட்கள் பண்ணையார் வீட்டு வேலையிலும், விளையாட்டிலும் கரைந்தன. ரிஸல்ட் வந்தது. ராமுவும் தேறிவிட்டான்.

ஸ்கூல் திறக்கும் நாளும் வந்துவிட்டது. அன்று காலை, ராமுவிற்குப் போட்டுக் கொள்ளப் புதுத் துணி கொடுத்தான் பழனியாண்டி.

ராமுவைக் கூட்டிக் கொண்டு பண்ணையார் வீட்டிற்குச் சென்றான்.

அங்கு ராமுவிற்குப் புதிய நோட்டுக்களும், புத்தகங்களும் உள்ள கூடையும், சாப்பாட்டுப் பாத்திரமும் கொடுக்கப்பட்டன.

பழனியாண்டி, "டேய் ராமு, சின்ன ஐயாவைக் கூட்டிக் கொண்டுபோய் ஸ்கூலில் விட்டுட்டு சீக்கிரம் வீட்டுக்கு வா" என்றான்.

"சீக்கிரமா வாடா... பண்ணை வேலையிருக்கு." என்று அதட்டினார் பண்ணையார்.

பண்ணையார் மகன் முகத்தில் சிரிப்புடன் முன்னால் சென்றான். ராமுவும் ஹைஸ்கூலுக்குப் போய்க் கொண்டிருக்கிறான். ஆனால் சுமை தூக்கியாக. பண்ணையார் மகனின் புத்தகச் சுமைகளோடு.



• உடன் சென்றவர் தரும் தகவல்கள்

கவிஞர் அணி

பாதுகாப்பு

வீதியோரங்களில்
பாதுகாப்பு போலீசாம்.
ஐயோ...
எங்களைப்
போலீசிடமிருந்து
யார் பாதுகாப்பதாம்?

—த. முரளி.



கண்ணீர்


முகக் குளத்தில்
மீன்கள் நிலைத்திருக்க
தண்ணீரே
நீந்துகிறது!

—பொன். செல்வகணபதி.



போபால் கி. பி. 2000

காற்றில் விஷம் வழிய
நின்ற இடத்திலேயே பிணம் விழும்.
நடக்கும் போதும்
மைதானத்தில்தான் சுடுவார்கள்
பிணங்களை
மீண்டும் நடக்கும் கார்பைடு
விஷம் விட்டபடி.
ஜனங்கள்தான் செத்துக் கொண்டே
இருப்பார்கள்.
அரசுக்கு
அந்நியச் செலாவணி ரொம்பவும்
முக்கியம்.





எப்போது வரும்?

உருகாத வெண்ணெயும்
ஒரடையும் படைத்து
கணவன் பிரியாதிருக்க
பிரார்த்தித்தாள்.
'அருகிலிருந்த
மகன் கேட்டாள்;
'உனக்காக அப்பா
பிரார்த்திக்கும் பண்டிகை
எப்போது வரும்?'

—சே. பாரதி.



மைத்துனர்ச் சங்கிலி

பொம்மைகள் உடைகளென
என் சகோதரிகள் மக்களுக்கு
வாங்கிக் கொடுத்து
நான் மடியில் வைத்துக்
கொஞ்சியதுண்டு
இன்று என் நான்கு
வயதுப் பயலை
அவர்கள் நினைப்பதுமில்லை
என் மைத்துனர்கள்
வாங்கித் தருகிறார்கள்.
நாளை நான் அவர்கள்
மதலைகளைக் கொஞ்ச [illegible].
அதற்குத்தான்
அவர்கள்
மைத்துனர்கள்
வந்துவிடப் போகிறார்களே!

—கண்ணன் மகேஷ்.

கவிஞர் அணி

பிளாஸ்டிக் மரங்கள்

அப்போது
எங்கள் கிளைக்கரங்களில்
அடர்ந்து செறிந்த
தழைப் பனிப்பில்
மலர்ந்து மணம் பரப்பும்
போதை மயக்கத்தில்
மேகக் கூட்டங்களே

மெல்லத் தரையிறங்க...
தங்களுக்குள் அவை கிசுகிசுத்து
மின்னி முத்தமிட்டு
தரையை நனைக்கும்
அமுத மழைத்துளிகள்!
இப்போது?
மலைநகரங்களிலேயே நாங்கள்
எண்ணிக்கையில் சிறுபான்மையாகி
விட்டோம்
விரைவில் வந்துவிடுமோ
எங்கெங்கும் பிளாஸ்டிக் மரங்கள்?

—சுப்ர. பாலன்.

பிழைத்திருத்தம்

தொல்காப்பியத்தில்
விடுபட்டுப் போன
ஒரு பிழைத்திருத்தம்!
உயர்திணை—
பணம் உள்ளவர்!
அஃறிணை—
பணம் இல்லாதவர்!

—ஸ்ரீ. ஸ்ரீதரன்.









[illegible]
வெளிச்சத்தையே தேடியதால்
என் விழிகளுக்கு
இருட்டு இயல்பாகிவிட்டது.
இப்போது
வெளிச்சம் வந்து விட்டது
இருளுக்கு ஏன்
ஏங்குகிறாய்?
இதயத்தைக் கேட்டேன்.
அது சொன்னது:
"நந்தவனத்தோடு நிற்காதே!
காட்டு வழிகளையும் காதலி.
மரணம் ஒரு மாயை
என்று புரிந்து விடும்."

—வசந்தராஜன்.

நானாகவே இருக்கிறேன்

எனக்கு
மலையோடும் உறவு
மடுவோடும் நேசம்.
கரிசலில் பருத்தியும்

சகதியில் தாமரையும்
சரிவில் தேயிலையும்
கழனியில் நெல்லும்
காட்டில் அகிலுமாய் மணக்கிறேன்.

நான் இத்தனையுமா?
அல்ல, அல்ல.
அத்தனையிலும் ஒன்று
உன்னோடு நீயாவதுண்டு.
ஆனால் என்றும்
நான் நான்தான்.

—பெ. ஜெகதீசன்.

மயிரிழையில் தப்பினேன்

பாம்பும் ஒரு பழுதான ஸ்விட்சும்

அன்று நான் 'நைட்—டியூட்டி'யில் இருந்தேன். பிரஷர் டைகாஸ்டிங் மெஷினில் பணியாற்றும் பொறுப்பு. அந்த யந்திரத்திற்கான கூலிங் டவர், கட்டிடத்தின் வெளிப்புறத்தில் வெகுதூரம் தள்ளி இருளான பகுதியில் உள்ளது. கையில் ஒரு டார்ச்சுடன் அதை 'ஆஃப்' செய்வதற்காகச் சென்றேன். அதனருகே ஒரு நாகப் பாம்பு ஊர்ந்து செல்வதைத் தற்செயலாகக் கவனித்தேன். பயந்து போய் 'ஆஃப்' செய்யாமல் திரும்பிவிட்டேன். மறுநாள் பொழுது விடிந்து அதே இடத்திற்குச் சென்றபோதுதான் 'ஸ்விட்ச்' பழுதாகியிருப்பது தெரிந்தது. டார்ச்சின் மங்கிய ஒளியில் அது என் கண்ணில் பட்டிருக்காது. நான் தொட்டிருந்தால் ஆளே 'க்ளோஸாகி' விட்டிருப்பேன்.

சென்னை—33. வேல் விஸ்வகுமார்.


அலர்ஜி... அலர்ஜி!



இருபத்திரண்டு ஆண்டுகளுக்கு முந்தி என் தலைச்சன் பிள்ளை பிரசவத்தை எதிர்பார்க்கும் நேரம். பெனிசிலின் இஞ்செக்ஷன் போடச் சொல்லிவிட்டார் லேடி டாக்டர். தற்செயலாக அங்கே வந்த என் அண்ணு தனக்குப் பென்சிலின் அலர்ஜி இருப்பதால் 'டெஸ்ட் டோஸ்' போட்ட பிறகு ஊசி போடச் சொன்னுன். டெஸ்ட் டோஸில் ஏறிய சில துளி பெனிசிலினே ஐந்தாறு நாட்கள் கையை வீங்க வைத்து விட்டது. முழுசும் போட்டிருந்தால் என்ன வாகியிருப்பேனே? இன்றைக்கு மெரீன் இன்ஜினியரிங்படிக்கும் அந்தத்தலைச்சன் பிள்ளையும் நானும் மாண்டிருப்போம்.

போபால்—16. அஹல்யா ராவ்.

ஹீரோவின் சைக்கிள்



சைக்கிளில் போகும் போதெல்லாம் என் ஹீரோத்தனத்தைக்காட்ட இரண்டுகைகளையும் விட்டு விட்டுச் செல்வேன். ஒரு முறை அப்படிச் செல்லும் போது எதிரே ஒரு லாரி வர, என் வாகனம் நிலை தடுமாற உயிர் நொடிப் பொழுதில் ஊசலாட நல்ல வேளையாகச் சிலபினாஸ்திரிகளுடன் நான் தப்பினேன். லாரியில் சிக்கிய சைக்கிள் முற்றிலும் உருமாறிவிட்டது.

பழனி—1. இரா. ரவிச்சந்திரன்.

அறுந்த வயரும் அணுகவில்லை!

கடந்த ஜூன் மாதம் மகன் கல்யாணத்திற்குச் சாமான்கள் வாங்கிக் கொண்டு சாலையில் நடந்து வந்து கொண்டிருந்தேன். மின் விளக்குக் கம்பத்திலிருந்து பொறி மத்தாப்பு போல் படபடவென்று பெரிய கங்குகளாக விழுந்தது. திடுக்கிட்டு ஓரடி பின்னல் நகர்ந்தேன். அதற்குள் அந்தப் பொறி பட்டுக் கீழே சென்ற வயர் கூட அறுந்து என்னருகில் விழுந்தது. துள்ளி நகர்ந்து விட்டேன். வீடு திரும்பி வெகு நேரமாயும் படபடப்பு அடங்கவில்லை.

தூத்துக்குடி—1. பு. கலோச்சனு.

வாசகர் பங்கு

தெய்வம் அழைத்துக் காக்கும்

எங்கள் வீடு மிகவும் பழைய வீடு. அன்றிரவு நாங்கள் வீட்டின் முன் பகுதியில் படுத்து உறங்கிக் கொண்டிருந்தோம். அது உற்சவக் காலமாகையால் வெடியோசை யோடும் வாத்திய ஒலியுடனும் ஸ்வாமி ஊர்வலம் வந்தது. வேடிக்கை பார்க்க வெளியே போனேம். ஐந்து நிமிடம் கழிந் திருக்கும். படுத்திருந்த முன் பகுதியின் மேற் கூரை அப்படியே சரிந்து கீழே விழுந்தது. ஸ்வாமி ஊர்வல ஓசை கேட்டிராவிட்டால் நாங்கள் குடும்பத்தோடு வைகுந்தம் போயிருப்போம்.

வேலூர் —12. வி. ராஜாராசம்

ஒரு டீ, ஒரு நிமிடம், ஒரு விபத்து!

போன வருடம் மீனம்பாக்கம் விமான நிலையத்தில் நடந்த வெடிகுண்டு சம்பவம் நினைவிருக்கலாம். அப்போது அங்கிருந்த நான் டீ குடிப்பதற்காக நண்பனுடன் வெளியே வந்தேன். அந்த ஒரு நிமிடம் தாம தித்திருந்தால் விபத்திற்குள்ளானவர்களில் நானும் ஒருவனுய் இருந்திருப்பேன்.

சென்னை —18. கே. வி. பாலசுப்பிர மணியன்.

தூளிக் கயிரு? தூக்குக் கயிரு?

நான் பத்து வயது சிறுவனுக இருந்த போது குழந்தைகளைத் தூங்க வைக்கப்




போட்டிருந்த தூளி க் கயிற்றை எடுத்துக் கழுத்தில் மாட்டிக் கொண்டேன். தூக்குப் போட்டுக் கொள்ளப் போகிறேன் என்று விளையாட்டாகச் சொல்லிக் கொண்டே ஏறிய ஸ்டூல் கீழே சாய்ந்து விட, என் கழுத் தில் கயிறு இறுகிவிட்டது. அப்போது எதிர் பாராமல் அங்கே வந்த அம்மா என்னைக் காப்பாற்றினுள். அந்நேரத்தில் அம்மா ஏன் அங்கே வந்தாள்? நினைத்தால் சிலிர்க்கிறது.

சென்னை —43. ஏ. எஸ். ராமன்.

சக்கரம் விலக்கிய குழந்தை

லஸ் சர்ச் ரோட்டில் பிளாட்பாரம் கடை யில் அம்மாவும், சித்தியும் கிரஷ் குடித்துக் கொண்டிருந்தனர். அவர்கள் குழந்தைநழுவி நடு ரோட்டுக்கே சென்றுவிட்டது. அந்த நேரம் பார்த்து ஒரு பல்லவன் பஸ் மிகவும் வேகமாக எதிர்த்து வந்தது. மேலே நடக்க முடியாமல் குழந்தை கால் தடுக்கிக் கீழே விழுந்தது. பஸ் குழந்தையை நசுக்காமல் மேலே சென்றது. அதைப் பார்த்துக் கொண் டிருந்த அம்மா மயக்கம் போட்டுக் கீழே விழுந்துவிட்டார். குழந்தை சாதாரணமாக விழுந்து எழுந்து வருவதுபோல் நடந்து வந்தது.

சென்னை —18. சுவாமி.



தர்மம் தலை காக்குமா?

அன்று காலை 9.30 மணிக்கு ஆபீஸுக்கு வந்து கொண்டிருந்தேன். சாலையோரத்தில் ஒரு பிச்சைக்காரிக்குச் சில்லறை கொடுக்கச் சில விநாடிகள் தாமதித்தேன். சுமார் ஒரு பர்லாங் தூரம் போனதும் லாரி ஒன்று மோதிக் கம்பத்தையே பெயர்த்துவிட, கம் பம் என் பின்னுல் விழுந்தது. சில விநாடிகள் நான் முந்தியிருந்தாலும் பிழைத்திருக்க மாட்டேன்.

திருப்பூர்—4. எஸ். முகம்மது யூசுப்.

போர்வையை உதறி விடு!

இரவு கழுத்துவரை போர்த்திக் கொண்டு நான் முற்றத்தில் படுத்துத் தூங்கிக் கொண் டிருந்தேன். ஒன்பது மணி இருக்கும். முற்றத் துக்கு வந்த என் பெண் என் மார்பின் மீது ஒரு பாம்பைப் பார்த்து விட்டிருக்கிறுள். நிலா வெளிச்சத்தில் கத்தவும் பயம். கத்தி ஞல் பாம்பு கடித்து விடுமே என்ற பயம். அந்நேரத்தில் என் கணவர் அங்கே வந்திருக் கிறுர். அவரும் பாம்பைப் பார்த்துவிட்டார். மெதுவாக இருவரும் என்னைக் கூப்பிட் டனர். நான் கண் விழித்தேன். என்ன வென்று கேட்டதும் போர்வையைக் கால் பக்கமாய் எடுத்து வீசிவிட்டு இங்கே ஓடிவா என்ருர். ஒன்றும் புரியவில்லை. இருந்தாலும்

சொன்னபடி செய்தேன். போர்வைக்குள்ளிருந்து கட்டுவிரியன் ஒன்று நெளிந்தபடி வெளியேறிற்று. அவர் அடித்து விட்டார்.

திண்டுக்கல், ஆர். லோகாம்பாள்.

நீச்சு நிலை மறந்தால்...

நீச்சல் கற்றுக் கொள்ளும் ஆசையில் நானும் என் தோழியும் எங்கள் வீட்டின் அருகில் உள்ள கண்மாய்க்குச் சென்றோம். அங்கே குளித்த பையன் ஒருவனை ஆழம் காட்டச் சொன்னோம். அவன் காட்டிய ஆழத்தில் ஒரு பாறை அடையாளத்தை வைத்து நான் நீந்தினேன். பாறை விளிம்புக்கு வர அது வழுக்கி விட்டது. நீரில் அமிழ்ந்து போய்த் தண்ணீர் குடித்துவிட்டேன். ஆழம் காட்டியவன் சிறு பையன். அவனால் என்னை இழுக்க முடியவில்லை. தெய்வாதீனமாக அப்போது துணி துவைக்க வந்த பெண் ஒருத்தி ஓரே பாய்ச்சலில் நீந்தி வந்து என் கைகளைப் பற்றி இழுத்துக் கரை சேர்த்தாள். அந்த ஒரு நிமிட உயிர்ப்போராட்டத்தை இப்போது கூடத் திகிலுடன்தான் நினைக்கிறேன்.

சென்னை—26, என். லெக்ஷ்மி.

வேரோடு சாய்ந்த மரம்

நான் வயலில் வேலை செய்து கொண்டிருக்கும்போது திடீரென்று காற்று மழை பிடித்துக் கொண்டது. பெரிய மரத்தடியில் உள்ள மாட்டுக் கொட்டகையில் ஒதுங்கி



னேன். போகப் போக மழை அதிகரித்தது. நனைந்தாலும் சரி என்று எண்ணி வீட்டிற்கு புறப்பட வெளியே வந்தேன். சற்றுத் தூரம் நடப்பதற்குள் மரம் வேரோடு சாய்ந்து — கொட்டகையில் விழ மாடுகள் எல்லாம் இறந்து விட்டன. நான் கொஞ்சம் தாமதித்திருந்தால்?

ஊரக்கரை, ஏ. பன்னீர் செல்வம்.

கிருஷ்ணா நதிப் பாலத்தின் மீது

தூக்கத்தில் நடக்கிற பழக்கம் உள்ள நான் சென்ற வருடம் விஜயவாடாவிலிருந்து சென்னைக்கு ரயிலில் வந்து கொண்டிருந்தேன். பெர்த்தில படுத்திருந்த நான் எழுந்து மூன்று முறை பெட்டிக்குள்ளே முன்னும் பின்னும் நடந்திருக்கிறேன். மூன்றாவது முறை கம்பார்ட்மெண்ட் கதவைத் திறந்து ஓடும் ரயிலில் இருந்து இறங்க முயற்சி செய்திருக்கிறேன். என்னைக் கவனித்துக் கொண்டிருந்த ஒரு முஸ்லிம் பெரியவர் சட்டென்று பாய்ந்து என்னைப் பிடித்து இழுத்துக் கன்னத்தில் ஓங்கி ஓர் அறைவிட்டார். சுய நினைவு பெற்றதும் பெரியவர் விளக்கினார். குனிந்து பார்த்தேன். கிருஷ்ணா நதியின் பேரிரைச்சல்; வண்டி நதிப் பாலத்தின் மேல் சென்று கொண்டிருந்தது. அவருக்கும் ஆண்டவனுக்கும் நன்றி செலுத்தினேன்.

காரைக்குடி, எஸ். ராஜேஸ்வரி.



அவசரமாக பஸ் ஏறினேன்

ரயில்வே கிராஸிங்கில் கதவு சாத்தப்பட்டிருந்ததால் நான் போன பஸ் நிறுத்தப்பட்டது. நான் பஸ்ஸில் உட்கார்ந்திருக்கப் பிடிக்காமல் கீழே இறங்கினேன். புகைவண்டி போனதும் ரயில்வே கேட்டைத் திறந்தார்கள். பஸ் கிளம்பிற்று. அவசரமாக முன் படிக்கட்டில் ஏறியவன் கால்இடறி பஸ்ஸின் அடியிலேயே விழுந்து விட்டேன். பின் சக்கரம் மிக அருகில் வந்து விட்டது. கண்ணிமைக்கும் நேரத்தில் வழியில் போன ஒருவர் என் காலைப் பிடித்து இழுத்து வெளியே போட்டார். தெய்வாதீனமாகத் தப்பினேன்.

சிவகாசி, தி. இரவீந்திரன்.

ராகமாலிகா வழங்கும் பட்டுப் புடவையைக் குலுக்கல் முறையில் பரிசாகப் பெறும் அதிர்ஷ்டசாலி.

Ahalya Rao,
Director's Bungalow,
Academy Campus,
E6. Arera Colony,
Bhopal – 462 01 6 (M.P.)



34

விதியும், தெய்வக்கட்டளையும்

அடுத்த அறைக்குள் வர்மன் நுழைந்த போது பாளையத் தலைவர்கள் அத்தனை பேரும் அமர்ந்திருந்தார்கள். எல்லோரும் உடன் படிக்கைக் குழுவினர். அத்தனை பேர் முகமும் சோகமாக இருந்தது. குழுவின் வயோதிகத் தலைவர் வர்மனை சாடைகாட்டி அருகில் உட்கார்த்தினார். "ராஜா எப்படி இருக்கிறார்? திருப்பதிப் பணம் பற்றி ஏதாவது சொன்னாரா? நீ கேட்டாயா? எங்கள் வேண்டுதோலைச் சமர்ப்பித்தாயா?" என்றார்.

வர்மன் பதில் கூறினான். அவன் வந்து பார்த்ததிலிருந்து கார்வேட் ராஜா உடல் நலம் சரியில்லை. பணம் பற்றி அவரால் எந்த முடிவும் எடுக்க முடியவில்லை. முடிவை ஆண்டவனிடமே விட்டு விடுவதென்று வர்மனைத் திருமலைக்கு அனுப்பி வேங்கடவனுக்கு பிரார்த்தனை உண்டியல் போட்டு வரச் சொன்னார். வர்மனும் திருமலை போய் இப்போதுதான் திரும்பினான். ராஜா நினைவு இல்லாமல் போனது அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது.

"சேர்மா முதலியாரே! இப்போ என்ன செய்யச் சொல்லுதீர்?" என்றார் பெரியவர்.

வெற்றிலை போட்டு விபூதி அணிந்திருந்த சேர்மா முதலியார் உட்கார்ந்தவாறே பேசினார். "இப்பம் என்னங்க செய்யறது. எல்லாரும் படையும் கூடியாச்சே!" என்றார் அவர்.

"படை கூடியாச்சு! யாரை எதிர்க்கப் போகிறீர்கள்?" என்றான் வர்மன்.

"அதுதான் பேசி முடிவு பண்ணியாச்சே! இங்கிலீசுக்காரனைத்தான் முதல்லே பொசுக்கறோம்".

"அப்புறம்?"

"அப்புறம் எல்லாருமாக் கூடி பிரெஞ்சுக்காரனைப் பொசுக்கிறோம்".

"அப்புறம்?"

"நவாபோட உடன்படிக்கை வச்சுக்கிடறோம்".

"எந்த நவாபு?"

"முகம்மது அலி".

"என்ன உடன்படிக்கை பண்ணுவீர்கள்?"

"நவாபு வடக்கேயே இருந்துக்கிட வேண்டியது. தெக்கே வரக் கூடாது. தெக்கே நாயக்கரும், நாம்பளுமா ராஜ்யம் பண்ணிக்கிட வேண்டியது! நவாபுக்கு வருஷத்துக்கு ஒரு தொகை கப்பம் போட்டுற வேண்டியது"

திட்டம் பிரமாதமாக இருந்தது.

"சரி. முதல் காரியமா என்ன செய்யப் போறீங்க?"

"படை வரப்போகுது, ஆர்க்காட்டுப் பாரிசத்திலே!"

"எதுக்கு?"

"கிளைவு இருக்கானில்லே! கோட்டையை விட்டு வெளியே வர்றதுக்குக் காத்திருப்போம். வந்தா நொறுக்கிடுவோம்".

"வராமல் போனா? ஒரு வேளை சந்தா சாகிப் ஆளுங்களே கோட்டைக்குள்ளே கிளைவை முறியடிச்சுட்டா?"

"நல்லதாப் போச்சு! நாங்க தேவனும் பட்டணம் (கடலூர்) போறோம். அங்கே இங்கிலீஸ்காரனை நொறுக்கறோம். அப்புறம் சென்னைப் பட்டணம் போறோம். அங்கேயும் நொறுக்கறோம். இத்தனையும் சரியா நடந்துப் போச்சுன்னா அப்புறம் புதுச்சேரியிலே போய் பிரெஞ்சுக்காரனை துவம்சம் பண்ணறோம்"

வர்மனுக்குப புன்னகைகளாக வந்தன.. "நடைமுறையில் இதெல்லாம் சாத்தியமா?" என்றான் வர்மன்.

"நிச்சயம் சாத்தியம்தான்!" என்று மிக அழுத்தமான குரல் கேட்டதும் எல்லோரும் திரும்ப அங்கே ஜகவீர பாண்டிய நாயக கட்ட பொம்மன் கண்களில் பளபளப்புத் துளும்ப தீவிர முகத்தோடு இருந்தார். (பிரசித்தி பெற்ற கட்டபொம்மனின் தந்தை)

"இந்தப் பரங்கி மிலேச்சர்களை நம் நாட்டைவிட்டு ஓட்டினால்தான் சுபிட்சம் உண்டாகும்" என்றார் தொடர்ந்து.

வர்மன் அவரைப் பார்த்துத் திரும்பினான். "முதலில் இங்கிலீஸ்காரனை நொறுக்குறோம். அப்புறம் பிரெஞ்சுக்காரனை. சரிதானா?" என்றான்.

"அதுவே சரி! நல்லாப் புரிந்து கொண்டாய்!

ஸ்ரீ வேணுகோபாலன்

"அதை நிறைவேற்றுவதுதானே?"

"தம்பி படை இருக்கிறது தெற்கே! அதைக் கொண்டு வரவும் சண்டை புரியவும் பணம் வேண்டாமா?"

வர்மன் திரும்பினான். "ஐயா, படை இருந்தால் பணம் வராதா?" என்றான்.

"வராது தம்பி. நாட்டில் நல்ல ஆட்சி நடந்தால் பணம் சுரக்கும். இப்போதுள்ள பூசல் ஆட்சியில் வரிப் பணமாக மக்களின் அத்தனை வருமானத்தையும் பிடுங்கிக் கொண்டு ஓடுகிறார்களே! மக்கள் பரதேசிகள் ஆன பிறகு அவர்களிடம் பணம் திரட்ட வழி ஏது? முடிந்ததைச் செய்திருக்கிறோம். இனி பணம் வேண்டி இங்கே யாசிக்க வந்திருக்கிறோம்"

அவர் சொல்வது சரியாகப் பட்டது வர்மனுக்கு.

அந்தக் குழுவினர் போட்ட திட்டம் ஒழுங்காக நிறைவேறினால் நிச்சயம் நாட்டில் அமைதியான ஆட்சிகள் நடைபெற ஆரம்பிக்கும்.

ஆனால் திட்டங்கள் நிறைவேறுமா? வெறும் கனவுகளாக நின்று விடுமா?

தென் சீமைப் பாளையக்காரர்கள் அனைவருமே ஒரே கனவைக் காண ஆரம்பித்தது தேசத்திற்கு நல்ல அறிகுறி அல்லவா!

"ஐயா!" என்று ஆரம்பித்தான் வர்மன். "ராஜா ஏற்கெனவே உங்கள் மீதுதான் பற்று வைத்திருக்கிறார். உங்களுக்கு உதவவே விரும்பப்படுகிறார். ஆனாலும் இப்போது இருக்கும் சூழ் நிலையில் யாருக்கும் பணம் அனுப்ப முடியாத நிலையில் இருக்கிறார். இதற்கு ஒரு வழி காட்ட வேண்டும் என்று கடவுளைப் பிரார்த்தித்து என்னை மலை மேல் போகச் சொல்லி உண்டியலும் போடச் சொன்னார். நான் போட்டு வந்து விட்டேன். வேங்கடவர் நிச்சயம் ஒரு வழி காட்டுவார். ராஜாவின் உடம்பையும் குணம் செய்வார்" என்றான்.

பின்னர் எல்லோரும் பேசி இருந்து கலைந்து விட்டார்கள்.

இரவு ஆகி ஒரு நாழிகையில் வர்மன் இருப்பிடம் தேடி ஜமீன் ஆள் வந்தது.

அவனை அவசரமாக அரண்மனைக்கு அழைத்துச் சென்றார்கள்.

அரண்மனையில் இருட்டைத் தவிர மெல்லிய சோகம் ஊடுருவியிருந்தது. அகல் சுடர்கள் அங்குமிங்கும் மஞ்சள் தைக்கும் வெளிச்சத்தைக் கண்டிவிட்டன.

பாதிச் சாம்பல் பூத்த இருட்டு எங்கும் பரவியிருந்தது. மென்மையான சாம்பிராணி புகை காற்றில் ஜாடையாக மணத்தது.

ராஜா கொலுவுக்கு அடுத்த அன்றயில் வர்மன் நுழைந்த போது, கார்வேட் ராஜா மனைவி அவனுக்காகக் காத்திருந்தாள்.

நாற்பத்தைந்து வயது இருக்கும். சுவர்ண மயமான மேனியுடனும், முகத்தில் தெய்வ வசீகரத்துடனும் தோற்றமளித்தாள். இரு இருட்டுச் சிமிழ் போன்ற விழிகளுடன் அவனைப் பார்த்து.

"ஐயா, ராஜா தங்களைப் பற்றி நிறையச் சொல்லியிருக்கிறார். தாங்கள் இருட்டில்



சென்று வந்தீர்களே! பெருமாள் ஏதாவது சூசகம் தெரிவித்தாரோ?" என்றாள்.

அந்த ராஜ மனைவியை வணங்கி எழுந்த வர்மன்,

"நாச்சியாரே! அடியேன் ஒரு தெய்வ நிர்ப்பந்தத்திற்கு அருகதை உடையவன் அன்று. எனவே வேங்கடவன் எனக்கு எந்த சூசகமும் கொடுக்கவில்லை. ஒருவேளை, வேங்கடவன் வேறு வழியாகச் செய்தி அனுப்புவாரோ, என்னவோ! நான் ஒரு துரதிர்ஷ்டக்காரன்! நான் வருவதற்குள் ராஜா நினைவு



இழந்துவிட்டார். தங்களிடம் ஏதாவது சொன்னாரா?'' என்று கேட்டான்.

''என்னிடம் ஏதுவும் சொல்லவில்லை. குழப்பத்திலேயே இருந்தார். கடவுளைப் பிரார்த்தித்துக்கொண்டே இருந்தார்.'' என்று சொன்ன ராணி வேங்கட நாயகி அம்மா, தம் கையில் வைத்திருந்த ஒரு லிகிதத்தை எடுத்து,

''ஐயா! இப்போது இந்த லிகிதம் புதுச்சேரியிலிருந்து வந்திருக்கிறது. என் மகள் செஞ்சுகா எழுதியுள்ளாள். இதைப் படியுங்கள்'' என்று அதைக் கொடுத்தான்.

கைநீட்டி வாங்கும் போது பதற்றம் ஏற்பட்டது. லிகிதத்தைப் பிரிக்கும் போது கண்ணீர் மல்கியது.

எனது தந்தையாரின் பாத பதமாலையில் அனந்த கோடி தெண்டனிட்டு செஞ்சுகா எழுதுவது —

இப்பவும் என் வாழ்க்கை இங்கே கசக்கிறது. இத்தனை நாளும் இல்லாத ஒரு வெறுப்பு எனக்கு வாழ்க்கை மீது வந்திருக்கிறது. ஏனென்று எனக்குப் புரியவில்லை. முன்பு நான் இங்கே வந்ததையோ, இங்கே இந்த பிரெஞ்சுக்காரர் காவலில் இருப்பதையோ என் ஜமீன் பூமிக்கு நான் செய்யும் தியாகம் என்று நினைத்து மகிழ்ச்சியாக இருந்தேன். ஆனால் இப்போது வரவர நான் நினைத்தது எல்லாம் தப்பு என்று தோன்றுகிறது. நாட்டுக்குத்தியாகம் செய்யலாம். ஆனால் அதற்கும் அளவு முறை இல்லையோ என்று தோன்றுகிறது. காலம் காலமாகச் செய்து கொண்டே இருக்க முடியுமா? அப்படியானால் சொந்தத்திற்கு வாழ்வது எப்போது? சொந்தத்திற்கு நான் வாழ வேண்டாமா?

அப்பா எனக்கு உடனே ஊர் வர வேண்டும், வந்து உங்கள் கூடேயும், நமது அரண்மனை, நமது சோலை, நம் நதி, மலைகளிடையேயும், வனத்திலும் கானம் பாட வேண்டும் போல இருக்கிறது. எனவே நான் எழுதியதையெல்லாம் மனத்தில் பதித்துக் கொண்டு என்னை உடனே இங்கிருந்து அழைத்துச் செல்லும்படி வேண்டிக்கொள்கிறேன். தயவு செய்து காலம் தாழ்த்தி விடாதீர்கள்! தர்ம அதர்மங்களில் அதிகம் குழம்பி விடாதீர்கள். இந்தக் கடிதம் கண்ட ஒரு பட்சத்துள் என்னை அழைத்துப் போக வசதி செய்யா விட்டால் அடியாள் தன் உயிரை மாய்த்துக் கொள்வாள் என்பதை அறிந்துகொள்ளவும்.

லிகித்தை முடிக்குமுன் கண்ணில் நீர் வந்தது. ராணியிடம் அதை ஒப்படைத்தான். ''மகாராணி, ராஜகுமாரி எழுதி இருப்பதைப் படித்தால் மனம் நெகிழ்கிறது. வேதனை தாங்க இயலவில்லை. உத்தரவு கொடுங்கள். நான் புதுச்சேரி போய் அவரை அழைத்து வந்து விடுகிறேன்'' என்றான் வர்மன்.

ராணி முகத்தில் சலனமே இல்லை.

''ஐயா! தாங்கள் எப்படி அழைத்து வருவீர்கள்?'' என்றாள்.

''தந்திரமாக, பிரெஞ்சுக்காரருக்குத் தெரியாமல்''.

''ஐயோ, அது தப்பிதம். ராஜாவும் அதை விரும்ப மாட்டார்'' என்றாள் ராணி.

''பின்னே எப்படித்தான் அழைத்து வருவது?''

''ஐயா! இங்கேதான் நான் தெய்வ சங்கல்பத்தை நினைகிறேன். வேங்கடமலை தெய்வம் என்ன சூசகம் தருமோ என்று எதிர்பார்த்திருந்தோமே, அதை இப்போதே நிறைவேற்றி விட்டது. இந்தக் கடிதம் ரூபமாக நிறைவேறி விட்டது. நாம் பிரெஞ்சுக்காரர்களுக்குத் தான் பணத்தைக் கொடுக்க வேண்டும் என்பது தெய்வ சங்கல்பம்!''

பளீர் என்று ஜோதி பூத்தாற்போல் அந்த வார்த்தைகள் அவன் மனத்தில் பாய்ந்தன.

செஞ்சுகாவின் லிகிதமும், வேண்டுகோளும் தக்க சமயத்தில் வந்து தெய்வ சங்கல்பத்திற்கு ஒரு சூசக ரூபம் காட்டி விட்டது.

அதை அவன் உணராவிட்டாலும், ராணி விளக்கி விட்டதும், ஒரே சிலிர்ப்பு ஏற்பட்டது.

"மகாராணி!" என்று கும்பிட்டான் அவன். "ஆமாம். தாங்கள் சொன்னது முற்றிலும் சரி. தெய்வக் கட்டளை கிடைத்து விட்டது. போதும் இந்த சூசகம். இதுவே போதும். உத்தரவு கொடுங்கள் ராணி, நான் புறப்படுகிறேன்" என்றான் வர்மன் பரபரப்போடு.

"நல்லது ஐயா! தாங்கள் சித்தமாக இருங்கள். நான் ஸ்ரீநிவாசாச்சாரியாருக்கு ஆள் அனுப்ப வேண்டும். அவரிடமிருந்து பணம் வந்ததும் தாங்கள் புறப்படலாம். மேற்கொண்டு காரியத்தை நான் உடனே கவனிக்கிறேன். தாங்கள் போகலாம்" என்றான்.

வர்மன் உணர்ச்சிப் பெருக்கோடு வெளியே வந்தான்.

தாழ்வாரங்களைக் கடந்து வெளி வாசல் வருவதற்கு முன்,

"ஐயா!" என்று ஒரு குரல் கேட்டது.

திரும்பிப் பார்த்தான்.

தாதி ஒருத்தி மிகுந்த நாணமுடன் ஒதுங்கி இருட்டுள் நின்றான்.

கண்கள் மட்டும் இரு ஜீவ வண்டுகளாக அவன் மீது பதிந்தன. நிர்மலமான முகம்.

"தங்கள் பெயருக்கு ராஜகுமாரி ஒரு தனி லிகிதம் வைத்து அனுப்பி உள்ளாள். தங்களிடம் ரகசியமாக அதைக் கொடுத்து விடும்படி உத்தரவு" என்று சொல்லி மடியிலிருந்த லிகிதத்தை எடுத்து அவனிடம் நீட்டினான்;

அதைப் பெறும் போது மீண்டும் அவனுக்குப் பதற்றம் ஏற்பட்டது.

லிகிதத்தை வாங்கி, அவளைத் திரும்பிப் பார்த்து. "அம்மணி! தங்கள் பெயர் என்ன? தங்களுக்கு ஏதாவது பரிசில் தர நினைக்கிறேன்" என்றான்.

"என் பெயர் பத்மாவதி. தங்கள் பரிசிலை நான் உரிய நேரத்தில் வாங்கிக் கொள்வேன்" என்று கூறி இருட்டோடு நடந்து விரைவில் உள்ளே மறைந்தாள் அவள்.

வர்மன் பலவித உணர்வுகளில் தத்தளிக்க, தன் இருப்பிடம் வந்தான். விருந்தினர்க்கான மாளிகை அது. உள்ளே அறைப் பக்கம் போய், அகல் விளக்கில் லிகிதத்தைப் படிக்க முனைந்தான்.

கண்கள் இளகி நீராக வடிந்தது.

அவனால் வாசிக்க முடியவில்லை.

(தொடரும்)



''நேத்து சுகுணாவின் கச்சேரி இருந்ததே. உங்களுக்குத் தெரியாதா?'' என்று தியாகராஜன் என்னை ஹிந்தியில் கேட்டான்.

''எங்கே?''

''இந்திரா நகரிலே. மிஸஸ். குப்தா வீட்டிலே. உங்களைப் பார்க்கலாமேன்னுதான் நான் அங்கே போனேன்''.

தியாகராஜனுக்கு என்னிடம் இருந்த அக்கறைமுழுக்கமுழுக்கசங்கீதம்என்றுசொல்ல முடியாது. என் அண்ணன் ஹரிகிஷன் ஒரு கமிஷன் ஏஜண்ட். அவன் மூலம் சென்னை கோடவுன் தெருவில்மலிவுவிலையில்பாண்ட் துணித் துண்டுகள் தியாகராஜன் வாங்கித் தவணை முறையில் விற்பான். ஒரு துண்டுக்கு ஐந்து ஆறு ரூபாய் கிடைக்கும்.

என்னிடம் பாட்டு கற்றுக் கொள்கிறவர்கள் எனக்குத் தெரிந்ததற்காக மிகுந்த மரியாதை காட்டக் கூடும்; ஆனால் நான் கற்றுக் கொடுத்ததில் நாலில் ஒரு பங்கை அவர்கள் பாடி அவர்களைச் சற்றும் அறியாத நூறு பேர் அதைக் கேட்டு மகிழ்ச்சியில் தலையாட்டும் அனுபவம் எனக்குக் கிடைக்காது.

பக்கத்திலிருந்த கடைக்குள் சென்று, ''ஒரு டெலிபோன் செய்ய வேண்டும்'' என்றேன்.

கல்லாப் பெட்டிக்கடியில அவன் கையை விட்டு.டெலிபோனை வெளியே எடுத்தான். ''ரொம்ப நேரம் காக்க வைக்காதே. சேட்'' என்றான்.

வழக்கம்போல முதல் முறை டெலிபோன் மணியடிக்கவில்லை; சற்றுப் பொறுத்து இன்னொரு முறை எண்களைக் கழுத்து வலியையும்பொருட்படுத்தாமல்நிதானமாகச்சுழற்றினேன். மறுபுறத்தில் மணி அடித்தது. நான் பேசுவதற்கு உஷார் நிலையில் இருந்தேன். வெகு நேரம் இருந்தேன். மறுபுறத்தில் மணி அடித்துக் கொண்டே இருந்தது.

கடைக்காரனிடம் ஒரு ரூபாயைத் திருப்பி வாங்கிக் கொண்டு மீண்டும் தெருவில் காலடி வைத்தேன். வெயிலின் கடுமை இன்னும் அதிகமாக இருந்தது. சுகுணா மீது ஆத்திரம் சற்றுக் குறைந்து இருந்தது.

பஸ் நிலையத்திலேயே நிரம்பி வழிந்த பஸ்ஸில் என்னை நுழைத்துக் கொண்டு எழுபது பைசா சீட்டு வாங்கிக் கடைசி வரை நின்ற படியே. பயணத்தை முடித்து ஒரு பங்களாவினுள் நுழைந்தேன். வெராண்டாவுக்கு வந்த வேலைக்காரப் பையனிடம் ''அம்மா இருக்கிறாங்களா?'' என்றுகேட்டேன். அவன் உள்ளே போய் இரு நிமிடங்களுக்கெல்லாம் அன்னபூரணா வந்தாள்.

''எப்ப வந்தீங்க, மாஸ்டர்?'' அவள் சமையல் செய்து கொண்டிருக்க வேண்டும்; அவளுடைய புறங்கையில் கோதுமை மாவு லேசாகப் பரவியிருந்தது.

''அரை மணியா டெலிபோன் பண்ணி லைன் கிடைக்காம நேரேயே வந்துட்டேன்''

''அப்படியா? இங்கே ஒண்ணுமே வரலியே?''

''மணி அடிச்சுண்டேயிருந்ததே''.

அன்னபூரணா விவாதத்தை வளர்க்க இடம் தராமல் பதில் சொல்லாமல் இருந்தாள். அடுப்பில் ரொட்டி தீய்ந்து போயிருக்கக் கூடும்.

''எப்போ க்ளாஸ வைச்சுக்கலாம்?''

அன்னபூரணா பளிச்சென்று, ''இன்னிக்கு வேண்டாமே மாஸ்டர்'', என்றாள்.

நான் என்னையறியாமல்தோள்களை உயர்த்தினேன். அன்னபூரணா கவனித்து விட்டாள்.

''ஒரு அரை மணி நேர வேலை பாக்கியிருக்கு. ஆனால் உங்களை எப்படிக் காக்க வைக்கிறது?''

''அரை மணி நேரம்னா பரவாயில்லை. நான் இங்கேயே இருக்கேன். இன்னிக்கும் தவறினா அப்புறம் இரு வாரங்களுக்கு முடியாது''.

''வெளியூர் போகிறீங்களா?''

''ஆமாம்'' என்று பொய் சொன்னேன்.

அவள் உள்ளே சமையலை முடிக்கப் போனாள். நான் ஹாலில் மின் விசிறியைக் கிளப்பி விட்டு சோபாவில் சாய்ந்தேன்.

நான் சோபாவில் நன்றாகச் சாய்ந்து கொண்டு கண்களை மூடினேன். சுகமாகத் தூக்கம் வர வேண்டும். வரவில்லை. என் ஜன்மம் நடுத்தர வயதுப் பெண்மணிகளைத் தேடி வீடு வீடாகப் போய் காத்துக் கிடக்கும் படியாகிவிட்டது. ஒரு சிஷ்யை கூட நாற்பது வயதுக்குக் குறைந்தவள் கிடையாது.

வெவ்வேறு சிஷ்யைகளுக்கு வெவ்வேறு வகைத் தீவிரம். இந்த அன்னபூரணாவுக்கு, ''பாட்டாவது பூட்டாவது; நாம் ஏன் இதில் மாட்டிக் கொண்டோம்?'' என்று கூடத் தோன்றலாம். சுமார் இரு ஆண்டுகள் அவள் தட்டுத் தடுமாறிக் கழித்தாகிவிட்டது; குரல் பண்பட்டு விட்டது. இயற்கையாகவே சங்கீத சூட்சுமம் உண்டு. முன்னேற வேண்டும் என்று மட்டும் ஆசையிருந்தால் இதற்குள்

நான்கைந்து முறை மேடையேற்றிப் பாட வைத்திருக்கலாம். ஆனால் அவளுக்குச் சோம்பல்— சங்கீதம் கற்றுக் கொள்வதற்கு. நான்கு மாதமாகச் சமையற்காரி ஒருத்திக்காக எல்லாரிடமும் சொல்லி வருகிறாள். என்னிடம் கூட இரண்டு முறை இவன் வெளியிட்ட காலண்டர்கள் அகில இந்தியப் பரிசுப் பெற்றதாகச் சொல்லியிருக்கிறாள். இன்னும் எதில் எதிலோ பெரிய நிபுணத்வம் வாய்ந்தவள். ஆனால் பகல் சாப்பாடு விஷயத்தில் மட்டும் வெகு அவசரம். இன்னும் சிறிது நேரத்தில் அவளுடைய கணவனுக்கு டிபன் காரியரில் சாப்பாடு போகும். இப்போது சமையலாவதே அவளுக்குத்தான்.

வேலைக்காரப் பையன் ஒரு பீங்கான் சாஸர் மீது ஒரு கண்ணாடி கிளாஸ் நிறையச் சூடான பால் கொண்டு வந்தான். அன்னபூரணா அதில் இலேசாகப் பால் மசாலா சேர்த்திருந்தாள். அரை மணி நேரத்தில் அவளுடைய வேலையை முடித்து வர முடியர்து என்று தோன்றியது.

இம்முறை தூங்குவதற்கு உறுதியான முயற்சி செய்தேன். கண்களை மூடிக்கொண்டு விழிகளைப் புருவமத்தி திசையில் நிலைக்க வைத்தால் தூக்கம் வருவது போல இருக்கும். பாட்டு வாத்தியார் பிழைப்பில் இமர் இமரென்று காத்துக் கிடப்பதைத் தவிர்க்க முடியாது. இருந்த இடத்திலேயே வகுப்புகள் நடத்தினால் கற்றுக்கொள்ள வருகிறவர்களைக் காக்க வைக்கலாம். ஆனால் இருபது வருஷங்கள் தொழில் செய்த பிறகும் இன்னும் எனக்கென்று ஓரிடம் ஏற்படவில்லை.

நூறு இருநூறு செலவழித்து ஒரு பள்ளிக் கூடத்திலோ அல்லது வேறு பொது இடத்திலோ வகுப்புகள் நடத்த ஏற்பாடு செய்யலாம். எவ்வளவோ பேர் அப்படிச் செய்கிறார்கள். ஆனால் ஒவ்வொரு முறைப் பயிற்சிக்கும் ஒவ்வொரு வகையான மாணவர்கள் வருவார்கள். மிஸஸ் குப்தாவும், அன்னபூரணாவும் சுகுணாவும், மிஸஸ் கட்டாரும் என்னிடம் சங்கீதம் கற்றுக் கொண்டு கச்சேரி செய்யலாம் என்று கனவில் கூட நினைத்திருக்க மாட்டார்கள். இதில் சுகுணா எப்படி வந்தாள்?

எனக்குத் தூக்கம் வராது என்று தெரிந்து விட்டது. மீண்டும் சுகுணா வந்து விட்டாள். இந்த சுகுணாவை அவள் என்னிடம் பாட்டு கற்க வருவதற்கு முன்பே தெரியும். நானும் அவளும் ஒரே கல்லூரியில் சேர்ந்து படித்திருக்கிறோம். அப்போதே அவள் குண்டுப்



பெண் என்றுதான் அறியப்பட்டாள். ஆனால் குண்டானாலும் அவள் எவ்வளவோ பேரின் படபடப்புக்கும் காரணமாயிருந்திருக்கிறாள். அப்போது நான் பாட்டு வாத்தியார் ஆவேன் என்று எனக்குத் தெரியாது. அவளுக்குப் பாட்டு என்றால் சினிமாவில் காதலர் அஜீ ஓஓஓ வென்றால் அந்த "ஓ" காடு மேடு மலை மடுவெல்லாம் கடந்து காதலியையும் ஓஓஓ வென்று எதிரொலி எழுப்ப வைக்கும் ஒரு சாதனம் என்று மட்டும் தெரியும். திடீரென்று மூன்று நான்கு ஆண்டுகள் முன்பு சென்னையில் சந்தித்துக் கொண்டோம். நான் முதலிலே அவளைக் கண்டு கொண்டு விட்டேன். மிஸஸ் குப்தா வீட்டில் இரண்டாம் முறையாகச் சந்தித்தபோதுதான் அவளுக்கு மிஸஸ் குப்தா ஹிந்துஸ்தானி பாட்டு கற்றுக் கொள்வது பற்றித் தெரிந்தது. மிஸஸ் குப்தா பாட முடியுமென்றால் தன்னால் பாட முடியாதா? யார் பாட்டு மாஸ்டர்? அடே, நீயா... நீங்களா... நீங்க பாட்டே கத்துத் தரீங்களா? எவ்வளவு நாளா?

சுகுணாவுக்கு இரண்டும் பிள்ளைகள். இளையவன் பியானோவும் கித்தாரும் கற்றுக் கொள்கிறான். மூத்தவனுக்கு சங்கீதம் சோம்பேறிகள் பொழுது போக்கு என்ற அபிப்ராயம் இருக்க வேண்டும். ஒரு நாள் என் முன்னிலையிலேயே அவனுடைய அம்மாவை அப்படித்தான் ஒரு சொல் சொல்லி விட்டான். அன்றிலிருந்து சுகுணாவுக்கு ஒரு வெறியே பிடித்து விட்டது. தினமும் சொல்லித் தர என்னை வர முடியுமா என்று கேட்டாள். என்றால் அது முடியாது. அதிகம் போனால் வாரம் இரு முறை போகலாம். திடீர் திடீரென்று சுகுணா சில வித்தியாசமான சாயைகள் பாடுவது போலிருந்தது. அப்புறம் திருத்திக் கொள்வாள். ஆறு ஆண்டுகள் தேவைப்படும் பயிற்சிகளை ஓராண்டுக்குள் அடைந்த மாதிரி இருந்தது. அவளும் சாதனை செய்யக் கூடியவள் என்பதை யாருக்கோ நிரூபித்துக் காட்டப் பாடுபட்டு வருவது போல இருந்தது.

"மாஸ்டர் தூங்கிட்டீங்களா?" என்று அன்னபூரணா கேட்டாள். அவள் கன்னடக்காரி. யார் யாரோ ஆண்பாலைப் பெண்பாலாக்கி ஒருமையைப் பன்மையாக்கி என்னிடம் ஹிந்தி பேசுவார்கள். இவள் மட்டும் அவளுக்குத் தெரிந்த தமிழிலேயே என்னிடம் பேசுவாள். அவள் சக்திக்கு மீறியதாயிருந்தால் ஆங்கிலத்துக்கு மாறி விடுவாள். கடுமையான ஆசாரம் அதி நவ நாகரிகம் இரண்டையும் அவளால் வெகு சுலபமாக ஒரு சகஜ நிலையில் கடைப்பிடிக்க முடிந்தது.

நான் தம்பூரைப் பிடித்தேன். அதை அவள் தொட்டு ஒரு வாரம் பத்து நாட்கள் ஆகியிருக்கும். மடி மீது குறுக்காகப் போட்டு சுருதி மீட்டினேன். ஒரு கணம் அன்னபூரணாவை இன்று கதறக் கதறச் செய்ய வேண்டும் என்று தோன்றியது. ஒரு பெண்ணைப் பாட்டு வாத்தியாரால் அழச் செய்வது போல யாராலும் முடியாது. அவளுடைய கணவனால் கூட முடியாது. தினம் மூக்கு முட்டத் தின்று கொழுக்கும் சோற்று மூட்டையே, இன்று உன்னை என்ன செய்கிறேன் பார்!

தம்பூரை நிறுத்தி அன்னபூரணாவை உற்றுப் பார்த்தேன். அவளும் ஒன்றும் புரியாதவளாக என்னைப் பார்த்தாள்.

"சுகுணா கச்சேரி எப்படி இருந்தது?" என்று கேட்டேன்.

"எந்தக் கச்சேரி மாஸ்டர்?" என்று அன்னபூரணா கேட்டாள்.

"ஏன் நிறையக் கச்சேரி செய்கிறாளா?"

"என்னைக் கேக்கறீங்களே மாஸ்டர்? உங்களுக்குத் தெரியாமலா?"

"சரி, நேத்திக் கச்சேரி எப்படி இருந்தது?"

"எங்கே மாஸ்டர்?"

"மிஸஸ் குப்தா வீட்டிலேதான்".

"கச்சேரி ஒண்ணும் நடக்கலியே, மாஸ்டர்?"

"சுகுணா கச்சேரி நடக்கலே? தியாகராஜன் சொன்னானே?"

"யார் தியாகராஜன், மாஸ்டர்? எனக்கு ஒண்ணுமே தெரியாதே? மிஸஸ் குப்தா, இந்த வருஷம் பிரசிடெண்டா எலெக்ட் ஆனதுக்கு ஒரு சின்ன டின்னர் கொடுத்தாங்க. மொத்தம் பத்துப் பன்னிரண்டு பேர்தான் இருந்தோம்".

"சுகுணா க்ச்சேரிக்கு பன்னிரண்டு பேர் போதாதா?"

"கச்சேரி இல்லே, மாஸ்டர். அவ பாடினா. நான் பாடினேன், மிஸஸ் குப்தா பாடினாங்க. பாக்கப் போனா அது உங்க கச்சேரி மாஸ்டர். எல்லாரும் உங்க ஸ்டூடண்ட்ஸ்தான் பாடினோம், மாஸ்டர்"

"தபலா யார்?"

"குப்தாவே வாசிச்சார், மாஸ்டர். ஒரே காமெடியாத்தான் இருந்தது. அவளுக்கு ஒரு தாளமும் தெரியாதே"

நீ சொல்கிறபடி நடந்திருந்தால் கூட அது நீ நினைக்கிறபடி இல்லை என்று நான் அவளுக்குச் சொன்னால் புரியாது. சுகுணாவை எனக்குத் தெரிகிற மாதிரி அன்னபூரணாவுக்குத் தெரியாது. இவளுடைய இலட்சியங்கள் வேறு. சுகுணாவுடையது வேறு.




"ஏதோ ஒருநாள் தெரியாத்தனமா நீ கே. ஆர். விஜயாவைப் போல இருக்கேன்னு சொன்னது உண்மைதான். அதுக்காக இருபத்தி நாலு மணி நேரமும் இப்படி சிரிச்சுக்கிட்டே இருக்கணுமா?"

—விக.

''ஏண்டா, உன் நெம்பர் இப்பவா வந்து கிடைச்சுதாடா?''

—உதய்.



நான் தம்பூரைத் தள்ளி வைத்தேன். ''இன்னிக்கு கிளாஸ் வேண்டாம்,'' என்றேன்.

''ஏன் மாஸ்டர்?'' அன்னபூரணி பாதி கெஞ்சுவது போலக் கேட்டாள்.

''இந்தத் தொழிலுக்கே தலை முழுகிட்டு நான் ஓடிப் போகப் போறேன்''.

எவ்வளவோ லட்சக்கணக்கான முதல் போட்டு, பலர் தலைவிதியை நிர்ணயிக்கக் கூடிய பதவிகளை வகிப்பவள், நான் மேற்கொண்டு என்ன சுத்தப் போகிறேனோ என்று கேட்கக் காத்திருந்தாள். அவளுடைய வாழ்க்கை கொண்டிருந்த பரப்பு, நுணுக்கம், பிறர் வாழ்க்கையைப் பாதிக்கக் கூடிய சக்தி — இதற்கெல்லாம் சற்றும் பொருத்தமில்லாத இந்தப் பாட்டு வகுப்புக்காக இந்த நேரத்தையும் இவ்வளவு கவனத்தையும் எனக்குத் தருவதற்கே நான் எவ்வளவு நன்றி கொண்டவனாக இருக்க வேண்டும்? நான் கற்றுத் தரும் பாட்டு அவளுக்கு அவளறிந்த எந்தத் துறையில் அவளுக்கு விசேஷ முன்னேற்றம் தரப்போகிறது?

நான் தீர்மானமாகவே எழுந்து விட்டேன். அவளும் என்னை வற்புறுத்த மனமில்லாமல் எழுந்து நின்றாள். எனக்காகப் பாபம், சமையலறையில் எவ்வளவு பரபரப்போடு அவளுடைய வேலைகளை முடித்துக் கொண்டாளோ?

''மறுபடியும் எப்ப கிளாஸ் மாஸ்டர்?'' என்று அன்னபூரணி கேட்டாள். ''என்னிக்கு ஊருக்குப் போறீங்க?''

''எந்த ஊருக்கும் போகலியே... ஆமாம் போகப் போறேன், ஒரேயடியாப் போகப் போறேன்''.

மறுபடியும் அன்னபூரணி மௌனமானாள்.

''என்னை மன்னிச்சுடு, அன்னபூரணி. இன்னிக்கு மனசு சரியில்லே எனக்கு''.

''இதென்ன மாஸ்டர்? எனக்கு முதல்லியே தெரியும், மாஸ்டர்; இதுக்கெல்லாம் மனசு கலங்கிடுவாங்களா?''

''எனக்கு எவ்வளவு துரோகம் நடந்திருக்குன்னு தெரியாது, உனக்கு...''

''யாரும் துரோகம் செய்யலே, மாஸ்டர். எல்லாரும் உங்களை நினைச்சுண்டுதான் பாடறோம். நாங்க ஏதாவது பாடறோம்னா அது நீங்க கொடுத்த வித்தை, மாஸ்டர்''.

''உனக்குத் தெரியாது, அன்னபூரணி.

''மாஸ்டர், மாஸ்டர், நீங்களே கண்ணுலே கண்ணீர் விட்டா நான் அழுதுடுவேன், மாஸ்டர்''.

நான் சிறிது சமாளித்துக் கொண்டேன். அன்னபூரணி என்னை கைப்பிடித்து ஒரு சோபா மீது உட்கார வைத்தாள். என் கால்கள் என்னை அதிகநேரம் சுமந்து கொண்டு நிற்க முடியாது என்று எப்படியோ அவள் தெரிந்து கொண்டிருந்தாள்.

வெளியே ஒரு நிழல் ஆடியது தெரிந்தது. அன்னபூரணி என்னைத் தனியாக விட்டு விட்டுச் சமையலறைப் பக்கம் சென்றாள். நான் கைக்குட்டையால் முகத்தைத் துடைத்துக் கொண்டு முன் அறைக்கு வந்தேன். சீருடையணிந்த ஆள் ஒருவன் ஒரு மூலையில் நின்று கொண்டிருந்தான். நான் வாசல் வெராண்டாவுக்கு வந்தேன். வேலைக்காரப் பையன் ஒரு நீள ஹோஸ் குழாய் கொண்டு புல்வெளிக்கும் செடிகளுக்கும் தண்ணீர் விசியடித்துக் கொண்டிருந்தான். அதனால் அங்கே வெராண்டாவில் சற்றுக் குளுமையாகவே இருந்தது.

சீருடை ஆள் ஒரு டிபன் காரியரை எடுத்துக் கொண்டு வெளியே போனான். அவனைத் தொடர்ந்து அன்னபூரணி வந்தாள். ''இங்கே வந்துட்டீங்களா, மாஸ்டர்? நான் உள்ளே தேடிட்டு வரேன்'' என்றாள்.

''அடுத்த வாரம் திங்கட்கிழமை வரேன்; சரியா?'' என்றேன்.

ஒரு மிகச் சிறு தயக்கத்துக்குப் பிறகு ''சரிதான் மாஸ்டர்'' என்றாள்.

நான் ஓரடி எடுத்து வைத்து விட்டேன். ''மாஸ்டர் உங்களுக்கு யாரும் துரோகம் பண்ண மாட்டாங்க'' என்று அன்னபூரணி சொன்னாள்.

''உனக்கு நல்ல மனசு. அதான் அப்படித் தோணறது. ஆனா குருங்களுக்கு சிஷ்யங்க துரோகம் காலம் காலமாப் பண்ணிண்டுதான் வராங்க. ஒரு வேளை குருவுக்கு துரோகம் பண்ணாமே வித்தை பெரிசா விருத்தி ஆகாதோ என்னவோ. அந்தப் பாவத்தைப் போக்கத்தான் எப்பப் பாத்தாலும் குருஸ்தோத்ரம், குரு ஸ்துதி, குரு வந்தனம் செய்யறாங்க. நான் குருத் துரோகம் பண்ணலே அதான் இப்படி வெயில்லேயும் மழையிலேயும் தெருத் தெருவா அலையறேன்.''

அன்னபூரணி நான் சொல்வதைக் கேட்டுக் கொண்டிருந்தாலும் அவள் அதைச் சிறிதும் மனதில் ஏற்றுக் கொள்ளத் தயாராயில்லை என்று எனக்குத் தெளிவாகவே தெரிந்தது. எனக்குத் திடீரென்று அவள் மீது ஏராளமான மதிப்பு தோன்றியது. இவள் மட்டும் பாட்டுக் கற்றுக் கொள்ள இன்னும் சிறிது அக்கறை காட்டினால் இரண்டே ஆண்டுகளில் தேசிய விழாக்களில் பாடக் கூடும். ஆனால் அவளுடைய சிறந்த மனோதர்மம் சங்கீதம் பக்கம் சிறிது கூடச் சாயவில்லையே?

"சுகுணா சும்மாப் பாடலே, அன்னபூரணா. நேத்திக்கு அவ பதினஞ்சு நிமிஷம்தான் பாடியிருப்பா. ஆனா அது வேறு எதுக்கோ ஒத்திகை. அந்தக் கச்சேரியிலே இந்த சகாதேவுக்கு சம்பந்தம் இருக்காது''.

''இப்படி அவதிப்படுகிறீர்களே என்ற அங்கலாய்ப்போடு அன்னபூரணா பார்த்து நின்ற மாதிரி இருந்தது.

''நீ உன் புருஷனுக்குச் சமைச்சுப் போடறதுக்குத்தான் என்னைக் காக்க வைச்சே. அப்படிக் கூடச் சொல்லக் கூடாது. நானுந்தான் காத்திருக்கேன்னு சொன்னேன். சுகுணா என்னை ஒரு நாள் வரச் சொல்லிட்டு ரொம்ப நேரம் காக்க வைச்சா. அப்புறம் ஒரே தலைவலி, வயிறே சரியில்லேன்னு சொன்னா. நான் கிளம்பிட்டேன். நான் அந்தத் தெருவைக் கடந்து ரோடுக்கு வந்து ரொம்ப நேரம் பஸ்ஸுக்காகக் காத்திருந்தேன். அப்போ அவ காரிலே போனா. அது கூட ஏதோ டாக்டர் கிட்டே போகறதுக்காக இருக்கும்னு நான் வித்தியாசமா நினைக்கலே. ஆனா அடுத்த நாளே தெரிஞ்சுது அவ ஒரு ரிக்கார்டிங் தியேட்டர் போயிருக்கான்னு. அங்கேந்து ஒரு ஷூட்டிங்குக்கும் போய் மறு நாள் காலையிலேதான் வீடு திரும்பியிருக்கா. தலைவலி, வயித்து வலி எல்லாம் சரியாப் போயிடுத்து என்னு அந்த சஞ்சீவி இருக்கானே — அதான் அந்த வயலினிஸ்ட் — அவன் இவளைப் பூரண சந்திரராவ் கிட்டே சிபாரிசு பண்ணி சினிமாலே பாடறதுக்கு ஏற்பாடு பண்ணிடறேன்னு சொல்லியிருக்கான். சினிமாலே பாடறதுக்கு இந்த சகாதேவ் மாஸ்டர் பிரயோசனமில்லேன்னு யாரோ இவ கிட்டே சொல்லியிருக்கா. இப்போ வயலின் சஞ்சீவிதான் இவளுக்கு மாஸ்டர்.''

அந்தப் பிரதேசமே அதிர்ந்து விடும் போல ஒலியெழுப்பிக் கொண்டு அரக்கன் போன்ற மோட்டார் சைக்கிள் அன்னபூரணாவின் மகனையும் மகளையும் சுமந்து கொண்டு கேட் வெளியே வந்து நின்றது. அன்னபூரணா ஓடிச் சென்று கேட்டைத் திறந்தாள்.

ஒரு நொடியில் அன்னபூரணாவால் இந்த கேட்டைத் திறந்து தன் மகன் மகளை உள்ளே வரவிடும் செய்கையில் எப்படி இவ்வளவு கலகலப்பை உண்டு பண்ண முடிகிறது என்று எனக்கு ஆச்சரியமாக இருந்தது. எல்லாம் ஐந்தாறு வார்த்தைகள்தான் இருக்கும். அம்மாவும் ஒருமுறை சிரித்தாள். அவளுடைய குழந்தைகளும் சிரித்துக் கொண்டார்கள். அந்த இடமே கவலை, கோபம் முதலியன இருக்க முடியாததோர் பிரகாசம் கொண்டது போல மாறிப்-போயிற்று.

அன்னபூரணா மகன் என்னைப் பார்க்கவில்லை. ஆனால் மகள் எனக்கென்று ஒரு துளிப் புன்னகை தந்தாள். அன்னபூரணா நான் குமுறிக்கத்துவதைக் கேட்ட படி மௌனமாக நிற்கும் புதிரான அனுபவத்திற்கு இந்த இளம் பெண்ணின் புன்னகை சற்றும் குறைந்ததில்லை என்று தோன்றியது.

எங்கள் ஊர் ஹீரோ



போட்டி : 6

உங்கள் ஊரில் அல்லது தெருவில் தீமை ஏதாவது நடந்தால் தட்டிக் கேட்பதற்கோ, நல்லது நடக்க முந்திக் கொண்டு வருவதற்கோ ஒரு ஹீரோவை நீங்கள் கண்டிருக்கலாம். அல்லது யார் மூலமாவது கேட்டிருக்கலாம். ஆபத்து என்று வரும் போது தன் உயிரையோ, வசதிகளையோ பொருட்படுத்தாமல் ஒரு பொதுக் காரியத்தில் குதித்து எடுத்த வேலையை முடித்த ஒருவரைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கலாம். அவரைப் பற்றிய சுவையான தகவல் ஒன்றை கீழே உள்ள வெற்றிடத்தில் எழுதி இந்த அரைப் பக்கத்தைக் கத்தரித்து அனுப்பவும். பிரசுரமாகும் கேள்விகளுக்கு சன்மானம் உண்டு. தவிர குலுக்கல் முறையில் ஒருவருக்கு விலையுயர்ந்த வி. ஐ. பி. ஸூட்கேஸ். உறையின் மேல் எங்கள் ஊர் ஹீரோ என்று குறிப்பிடவும்.

முடிவு தேதி: 25.6.85


47 விலையுயர்ந்த வி. ஐ. பி. ஸூட்கேஸ் காத்திருக்கின்றன. அவற்றுள் ஒன்றைப் பரிசாகப் பெற வாரம் தவறாமல் போட்டியில் பங்கு பெறவும்.


என் பெயர்: ....

விலாசம்: ....

....

வி.ஐ.பி. ஸூட்கேஸ் பரிசுத்திட்டம்


RAJESH JEWELLARY
பெரியவர்: அறிவு கெட்ட முட்டாள், உன்ன பெத்த துக்கு நாலு தென்ன மரம் வச்சிருந்தா அதிலேயாவது லா ப ம் இருந்திருக்கும். எவனோ வந்தான், நகை களை "அப்ருவல்" கொடுத் தேங்கறியே?
பையன்: அவங்க ராக மாலிகா பட்டுசேலை கட்டி கிட்டு வந்தாங்க நல்ல "கஸ்டமர்" என்று ஏமாந் தேன் அப்பா.
UMA FEATURES



தீர்வு விரைவில் வருமா?

* 1984ல் மருத்துவ சாதனைகள்நமது மருத்துவ விஞ்ஞானத்தின் வீச்சுக்கு இனி எந்த நோயும் தப்ப முடியாது என்று நூற்றுக்கு நூறு நிரூபித்தது.

திருநெல்வேலி—1. எஸ். கணேசன்.

* தொட்டாற் சுருங்கியா கட்டுரையில் மார்க்கைக் கூட்டுவதில் கோட்டை விட்டு விட்டீர்களே! உங்கள் குறிப்புப்படி கூட்டினால் எல்லோரும் தொட்டாற் சுருங்கிதான்.

சென்னை—2. எம். கே. பாபு.

* ஒவ்வொரு வியாழக்கிழமை இரவும் விவிதபாரதி மூலம் பாலசந்தரின் பதில்களைக் கேட்டு ரசிக்க முடியாத நான் "கல்கி" மூலம் அவருடைய பதில்களைப் படித்துச் சுவைக்கிறேன்! தயவு செய்து 'நேரம் நல்ல நேரம்' பகுதியை தொடர்ந்து நடத்துங்கள்.

குளச்சல். முகம்மது இப்ராஹீம்.

* ஞாபகத்தின் விலை அதிகமில்லை என்ற கதைக்குச் செல்லம் வரைந்துள்ள ஓவியங்கள் டக்கர்.

திருப்பத்தூர்—1. அ. கதிரவன்.

* சுஜாதாவுடன் ஒரு ஹலோ தொகுப்பு படுசுவை. ஆம். நகைச்சுவையும் கூட.

தேரழுந்தூர். சி. சுப்பு.

* சும்மா சொல்லக் கூடாது. சமீப காலமாக கல்கி அட்டையிலும் உன்னையும் தான் ஜொலிக்கிறது. வழுவழுப்பான ஆப்செட் அட்டை ஆளை அசத்துகின்ற அச்சு. அமைப்பு!

சென்னை—39. சிம்மவாஹினி.

* சாகுமுன் சிறிது குங்குமத்திற்காக ஏங்கிய முருகேசனுக்கென்று நான் இரண்டு துளி கண்ணீர் விட்டேன்.

சீர்காழி. ஆர். எஸ். இராஜ்.

* வைரவனின் சந்தைக்கு வராத சந்தோஷங்கள் கவிதை மிகவும் அருமை.

காரைக்குடி. எஸ். பிரபா.

* சிறுவர்களுக்காகவே தயாரிக்கப்பட்ட கட்டிப் பையன் படத்தில் அனுராதாவின் ஆட்டம் ஜெயமன்மதன் கண்களை உறுத்தவில்லையா அல்லது அணு அணுவாய் ரசித்து மெய்ம் மறந்து விட்டாரா?

கரூர்—1. என். செல்வராஜ்.

* வாசகர்களின் சிக்கன யோசனையைப் பின்பற்றினால் சீக்கிரம் பணக்காரனாகி விடலாம். நான் கூட இந்தக் கடிதத்தை ஒரு கார்டில்தான் எழுதியிருக்கிறேன்.

சின்னதாமல் செருவு. வி. எம். கருணாகரன்.

* நாட்டு மக்களின் மன உணர்வை நறுக்கென்று பிரதிபலித்தது அமெரிக்காவுக்கு நன்றி தலையங்கம்.

சென்னை—93. எஸ். சம்பத்குமார்.

* குஜராத்தில் என்ன குழப்பம்? கட்டுரை மூலம் குஜராத் பிரச்னையில் எந்த பத்திரிகையிலும் கிடைக்காத தெளிவு கிடைத்தது.

மேலணிக்குழி. ஆர். இராஜாமணி.

* ஜெயலலிதாவைப் பற்றிப் பேச எம். ஜி. ஆர். தடை விதித்திருப்பது பற்றிய செய்திக்கு உமது கார்ட்டூனிஸ்ட்டின் படம் கண்டு விழுந்து விழுந்து சிரித்தேன்.

கும்பகோணம்—1. பி. சுவாமிநாதன்.

* அனைத்துப் போட்டிகளிலும் கலந்து பிரசுரம் ஆகாமலும் ராகமாலிகா புடவை கிடைக்காமலும் உள்ள ஒரு வாசகன் யார் என்று போட்டி வைத்தாலாவது எனக்கு ஒரு பரிசு கிடைக்குமா?

பெரியகுளம். பி. டி. சிதம்பர சூரிய நாராயணன்.

* அசுத்தங்களை அழிப்பதற்கு அக்கினி நிறைய வேண்டும் என்ற கவிஞர் வைரமுத்துவின் கருத்து என் சிந்தனையை ஊடுருவியது.

ஸ்ரீரங்கம். ஆர். கோபாலன்.

* அண்மையில்எங்கள் ஊரில் நடந்த மாட்டுவண்டிப் பந்தயத்தில் தாங்கள் வெற்றி பெறும் பொருட்டு போட்டியாளர்கள் மாடுகளைத் துன்புறுத்தும் காட்சி கல் மனது கொண்டோரையும் கண் கலங்க வைக்கும். ரத்தம் விளாறு விளாறாக, நுரை தள்ள, அவை எல்லைக் கோட்டைத் தொடும்போது என் மனது விறிட்டு அழுதே விட்டது. உயிர் வதைத் தடைச் சட்டமும் இந்தச் சூதிற்கு விதி விலக்கு அளித்து அங்கீகரித்திருப்பதுமகாகொடுமை.கிராமத்தினர் இவ்வாறு தங்களை வீணடித்துக்கொண்டிருக்கும்போது, அரசியல்வாதிகள் அவர்களை எளிதில் ஏமாற்றி, தங்களது பித்தலாட்டங்களில் தொடர்ந்து ஈடுபடுவர். இத்தகைய கொடிய ஹிம்சைக்கு நல்ல தீர்ப்பு விரைவில் வருமா?

திருப்புத்தூர்—11. து. ரவி.

(கடைசி கடிதம் பரிசு பெறுகிறது).

-: வட்டமேஜை :-

சி.எம்.சி. உங்கள் நண்பன்



• ஐடா ஸ்கட்டர்

ஒவ்வொரு நகரத்திற்கும் ஒவ்வொரு வகையில் சிறப்பிருக்கும். வடாற்காடு மாவட்டத் தலை நகர் வேலூருக்குப் பல சிறப்புகள். அதற்கெல்லாம் சிகரம்தான் சி. எம். சி. மருத்துவ மனையாகும்.

தினம் தினம் எத்தனையோ வெளி மாநிலத்தவர், வெளி நாட்டினர் என்று சி.எம்.சி.க்கு வந்து சிகிச்சை பெற்றுச் செல்வோர்களின் எண்ணிக்கை வளர்ந்து கொண்டே வருகிறது. சி. எம். சி. என்றால் கிறிஸ்டியன் மெடிகல் காலேஜ் என்று விரிவுபடும். இங்கே மருத்துவக் கல்லூரி, நர்சுகள் கல்லூரி, எனப் பல மருத்துவக் கல்வியின் பிரிவுகள் உண்டு. சி. எம். சி. உருவான கதை ஒரு சுவையான கதை.

நள்ளிரவில் ஓர் அழைப்பு

நிறை மாதக் கர்ப்பிணி ஒருத்தி பிரசவ வேதனையால் துடிக்கிறாள். அவள் ஆண் டாக்டர்களிடம் சிகிச்சை பெற மறுத்து விட்டதாகவும், அவர்களுக்கு உடனடியாக உதவும்படி ஒரு இளம்பெண்ணுக்கு அழைப்பு வருகிறது. போதிய அனுபவமின்றித் திகைக்கிறாள். இருந்தாலும் தன்னாலியன்ற உதவியை அவர்களுக்கு நிச்சயம் செய்ய வேண்டும் என்ற மனித உணர்வின் உந்துதலில் பல உதவிகளைச் செய்கிறாள்.

இருந்தாலும் போதிய சிகிச்சையின்மை காரணமாக அந்த நிறைமாத கர்ப்பிணி தாயாகாமலேயே இந்த உலகத்திலிருந்து விடை பெற்று விடுகிறாள். இந்த மரணம் அந்த இளம் பெண்ணின் மனத்தை மிகவும் பாதித்து விடுகிறது.

அப்போதுதான் அவளுக்கு அந்தச் சவால் உதிக்கிறது. தானுமொரு டாக்டராக மாறி, மருத்துவமனை திறந்து, இப்படி போதிய சிகிச்சை இல்லாமல் அவதிப்படும் பலருக்குப் பணி புரிய வேண்டுமென்று ஒரு தீர்மானம் எழுகிறது. அப்படி பிறந்த ஒரு தீர்மானம்தான் இன்றைய சி.எம்.சி. அப் பெண் தான் சி. எம். சி.யைத் துவக்கி வைத்த டாக்டர் ஐடா ஸ்கடர்.

அமெரிக்க பிரஜையான அவர் 1900ம் ஆண்டில் இந்த சி. எம். சி.யை ஒரே ஒரு படுக்கை வசதி கொண்ட சின்னஞ்சிறு ஆஸ்பிடலாகத்தான் துவக்கினார்.

அமெரிக்காவின் கார்னல் மருத்துவக் கல்லூரியின் முதல் பெண் டாக்டராக 1899ம் ஆண்டில் இந்தியா வந்த அவர், 1902ம் ஆண்டில் சி. எம். சியை 40 படுக்கை வசதிகள் கொண்ட ஒரு மருத்துவ மனையாக மாற்றினார். 'பிறரால் சேவை செய்யப் படுவதைக் காட்டிலும் பிறருக்குச் சேவை செய்வதே தம் நோக்கமென்று முதலிலேயே எடுத்துரைத்தார். இப்படி துவங்கியதுதான் இந்த சி. எம். சி. மருத்துவமனை.

இன்றைய சி. எம். சி.

இன்றைய சி. எம். சி. என்பது ஆண்டுகளில் ஏற்பட்டுவிட்ட மாபெரும் வளர்ச்சி. ஆற்காடு சாலையிலுள்ள பிரதான மருத்துவ மனையுடன், ஷெல்கண் மருத்துவமனை பொது மக்கள் நல முன்னேற்ற மருத்துவமனை, (CHAD), ரூசா மருத்துவமனை, உடலூனமுற்றவர்களுக்கான சிகிச்சைப் பள்ளி, பாகாயத்தில் உள்ள மனநோய் மருத்துவமனை, மூளை பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கான சிகிச்சைப் பள்ளி, தொழு நோயாளிகளுக்கான புது வாழ்வு மையம் என்ற பல கிளைகளைக் கொண்ட பிரம்மாண்டமான ஆலமரமான சி. எம். சி. யில் சுமார் 550 டாக்டர்கள். 700 க்கும் மேற்பட்ட நர்சுகள், 850 சுகாதாரப் பணியாளர்கள் என்று 3000க்கும் மேற்பட்டவர்கள் சேர்ந்து இயக்குவது தான் இன்றைய சி. எம். சி.

இங்கே எல்லா பிரிவுகளையும் சேர்த்து மொத்தம் 1350க்கும் மேலான படுக்கை வசதிகள் உள்ளன. புற நோயாளர்களுக்காக மட்டும் (Out Patient) 48 சிகிச்சைப் பிரிவுகள் உள்ளன.

சி. எம். சி. யில் ஒரு நாள்

ஒரு நாளில் சி. எம். சி. யில் சுமார் 1200 க்கும் மேற்பட்ட அக நோயாளிகளும், 2000 க்கும் மேற்பட்ட புற நோயாளிகளும் சிகிச்சை பெறுகின்றனர். சுமார் 20 க்கும் மேற்பட்ட குழந்தைகள் பிறக்கின்றன.

ஒரு நாளில் மொத்தம் 90 க்கும் மேலான அறுவைச் சிகிச்சைகள் மேற்கொள்ளப் படுகின்றன. 5000 க்கும் மேற்பட்ட ரத்தம் மற்ற இதர பரிசோதனைகளும் (X-Rays) மேற்கொள்ளப்படுகின்றன. 90 க்கும் மேற்பட்ட நுண்கதிர் சிகிச்சைகளும் (X-Ray Therapeutic) வழங்கப்படுகின்றன. 5000 மருந்து வகைகள் விநியோகம் செய்யப்படுகின்றன.

ஆஸ்திரேலியாவிலுள்ள வேலூர் நண்பர்கள் அமைப்பு (Friends of Vellore at Australia) சி. எம். சி. க்கு நிதி உதவி புரிகிறது.

மருத்துவக் கல்லூரி

சி. எம். சி. வெறும் மருத்துவமனையாக மட்டும் இல்லாது, மருத்துவக் கல்வியிலும் மருத்துவ ஆராய்ச்சியிலும் சிறந்த கவனம் செலுத்தி வருகிறது.

1903ம் ஆண்டிலேயே மருந்தாளர்களுக்கு (Compounders) பயிற்சிக் கல்வி என்ற ஆரம்பத்துடன் சி. எம். சி. யின் மருத்துவக் கல்வி துவங்கியது. 1909ம் ஆண்டில் நர்சுகள் பயிற்சி பள்ளி, 1918ம் ஆண்டில் பெண்களுக்கு டிப்ளமா அளவிலான மருத்துவக் கல்வி என்று உயர்ந்து, முதன் முதலில் 1942ம் ஆண்டு எம். பி. பி. எஸ். பட்டப் படிப்பு துவங்கப்பட்டது. பிறகு எம். டி., எம். எஸ். என்று வளர்ந்து, தற்போது சி. எம். சி யில் மருத்துவக் கல்லூரியின் பல முக்கிய கூறுகளுக்கான படிப்பு வசதிகள் உள்ளன.

எல்லா வகுப்புகளையும் சேர்த்து ஓராண்டில் மட்டும் 300 க்கு மேலான மருத்துவ பட்டதாரி படிப்பு மாணவர்களும், 400 க்கு மேலான நர்சுகள் பயிற்சியாளர்களும், 200 க்கும் மேலான மேல் நிலை மருத்துவம் மற்றும் நர்சுகள் பயிற்சியாளர்களும் கல்வி பயின்று வருகிறார்கள்.



• மருத்துவ ஆய்வு

சி. எம். சி. யின் சாதனைகள்

சாதனைகளுக்கு சி. எம். சி. மிகவும் பெயர் பெற்றதொன்று.

* இந்தியாவிலேயே முதன் முதலில் வெற்றிகரமான திறந்த இதய அறுவைச் சிகிச்சை, (Open Heart Surgery) 1961 ல் இங்கு தான் மேற்கொள்ளப்பட்டது.
* இந்தியாவிலேயே முதன் முதல் சிறுநீரக மாற்றம் (First Kidney Transplant), 1971ம் ஆண்டில் இங்குதான் நடந்தது.
* ஆசியாவிலுள்ள டாக்டர்களின் முதல் மாநாடு 1983ம் ஆண்டில் இங்குதான் நடந்தது.
* இந்தியாவிலேயே நர்சுகளுக்கான முதன் முதல் கல்லூரி, 1946ம் ஆண்டில் இங்குதான் துவங்கியது.

மருத்துவ ஆராய்ச்சி

சி. எம். சி. யின் 20 க்கும் மேற்பட்ட சிகிச்சைப் பிரிவுகள், முன்னணியில் நிற்கின்றன. இதற்காகச் சுமார் 60 க்கு மேற்பட்ட நிதியுதவிகள் (Scholarships) இருந்தாலும் இவற்றில் பெரும் பகுதியை சி. எம். சி. யே அளித்து ஊக்குவிக்கின்றது. தவிர இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் குழுவும் (Indian Council of Medical Research) சுமார் 10 க்கு மேற்பட்ட நிதியுதவிகள் வழங்கியுள்ளது. அமெரிக்கா மற்றும் நெதர்லாந்து போன்ற நாடுகள் கூட நிதியுதவி வழங்கி வருகின்றன.

• நர்சுகளுக்குப் பயிற்சி



மருத்துவ சாதனைகள்

தனியாகக் கண் மருத்துவமனை நடத்தும் சி. எம். சி., இதயத்திற்குள், ரத்த நாளம் மூலம் நேராக சிறு குழாயை அனுப்பி அதன்



நர்ஸுகளின் வகுப்பறையில்

துடிப்பையும் இயக்கத்தையும் பரிசோதனை செய்து அதிலுள்ள கோளாற்றைக் கண்டு பிடிக்கும் ஆஞ்ஜியோகிராம் (Angio-gram) என்ற கருவி சமீபத்தில்தான் ரூ 50 லட்சம் விலையில் ஜெர்மன் நாட்டிலிருந்து வரவழைக்கப் பெற்று, Catherization Laboratory ல் வைக்கப்பட்டுள்ளது.

ரூபாய் ஒரு கோடி மதிப்புள்ள CAT SCAN ஒன்று, உடலின் எல்லாப் பகுதிகளையும் சிறந்த முறையில் பரிசோதனை செய்வதற்காக, ஜெர்மன் நாட்டிலிருந்து மிகச் சீக்கிரத்தில் பெறப்பட உள்ளது.

நுண்கதிர் (X - Ray) மூலம் உடலைப் படம் எடுப்பதால் உண்டாகும் விளைவைத் தடுக்க, ஒலி அலைகள் (Sound Waves) மூலமாக உடலில் படம் பிடிக்கும் ULTRA SOUND என்ற கருவியும் அமைக்கப்பட உள்ளது. இக்கருவி கர்ப்பிணிப் பெண்களை அபாயமில்லாத முறையில் பரிசோதனை செய்யப் பயன்படும்.

டாக்டர்களுக்குப் பாராட்டு

விலை மதிக்க முடியாத டாக்டர்கள் சேவையினைப் பாராட்டி இந்திய அரசாங்கம் பலருக்கு விருது வழங்கிக் கௌரவித்துள்ளது. இது வரை விருது பெற்ற டாக்டர்கள், ஜேக்கப் சாண்டி, (பத்மபூஷன்), ஜார்ஜ் செரியன், மேரி வர்கீஸ், ஸ்டான்லி ஜான் மற்றும் பாண்டே (நால்வரும் பத்மஸ்ரீ) ஆகியோராவார்.

ஒவ்வோராண்டும் வழங்கப்படும், மருத்துவத்துறையில் மிகச் சிறந்த ஆராய்ச்சிக்கான பசந்த தேவி அமீர்சந்த் பரிசு சி.எம்.சிக்கு 1984ம் ஆண்டில் வழங்கப்பட்டுள்ளது. இப்பரிசு பெற காரணகர்த்தாவான டாக்டர் ஜேக்கப் ஆபிரகாம் அவர்களின் சிந்தனையும் உழைப்பும் வெகுவாகப் போற்றுதற்குரியது.

—பி. எஸ். வி.



சுந்தரையா

காலஞ்சென்ற மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் தலைவர் திரு. சுந்தரையா எளிமைக்கு ஓர் எடுத்துக் காட்டு. நெல்லூரிலிருந்து சென்னைக்குக் கூட்டத்தில் பேச சைக்கிளிலேயே வருவார். கலந்து கொள்வார். 1952—ல் பாராளுமன்ற உறுப்பினராயும் சைக்கிளில் தான் சபைக்குச் செல்லுவார். ஆந்திராவில் இவர் கால் படாத இடமே இல்லை. தெலுங்கானாவில் இவருக்கு அமோக செல்வாக்கு. ஆந்திர முதல்வராக இருந்த அஞ்சையாவை, ராஜீவ்காந்தி ஹைதராபாத் விமான நிலையத்தில் அவமானப் படுத்திய போது ஆந்திர மக்கள் தன்மானம் பறி போகிறது என்று குரல் கொடுத்தார். இந்தப் பிரச்னையில் சுந்தரையா எழுப்பிய தன்மான கோஷங்களுக்கு விளைவு தெலுங்கு தேசக் கட்சி.

ப்ரியன்.

கர்ப்பிணிகள் ஜாக்கிரதை!

சங்கரதாஸ் சுவாமிகள் சத்தியவான் சாவித்திரி நாடகத்தில் எமன் வேடம் தாங்கி நடித்தார். நடித்த போது கையிலிருந்த சூலாயுதத்தை அதி ஆவேசத்தோடு ஓங்கித் தரையில் அடித்தார். இதன் விளைவாகச் சபையிலிருந்த ஒரு தாய்க்கு, 'கருச் சிதைவு' ஏற்பட்டது. அதிலிருந்து சுவாமிகள் எமன் வேடம் பூண்டு வருகிறார் என்றால், அந்தக் காட்சி ஆரம்பிக்கும் முன்பே, 'சுவாமிகள் எமன் வேடத்தில் வரப் போகிறார், கர்ப்பிணிகளிருந்தால் சபையை விட்டு வெளியில் போய் விடுங்கள். இந்தக் காட்சி முடிந்த பிறகு திரும்பி வாருங்கள்'' என்று கேட்டுக் கொள்வார்களாம்.

தகவல்: பொதக்குடி அனீஸ்





கேள்வி (72): நாட்டின் சுதந்திரத்தை வளர்ச்சியில்லாத ஒருவராகவும், நடுத்தர வர்க்க மக்களை ஓரத்தில் சுருண்டு முடங்கிய மனிதராகவும் சித்தரித்த நீங்கள் 'விதி' என்பதற்கு உருவகம் தர முடியுமா? (பாலு, பாலக்கரை).

கே.பாலசந்தர்: ஓ! முடியுமே! 'ரசிகன் ரசிகன் எனப்படும் உருவகம்தான் எங்கள் விதி, தலைவிதி எல்லாமே!

கேள்வி (73): கமல், ரஜினி, இருவரும் உங்கள் மாணவர்கள். இருவரும் கலைஞர்கள். உங்களுக்கு யாரை அதிகம் பிடிக்கும்? துணிச்சல் இருந்தால் இந்தக் கேள்விக்கும் பதில் சொல்லுங்கள் பார்ப்போம்! (உஷா, மன்னார்குடி)

கே.பாலசந்தர்: சரி! இப்படிச் சொல்லறேன். கமல் என்கிற கலைஞன், ரஜினி என்கிற மாணவன்.

கேள்வி (74): எத்தனையோ துணிச்சலான படங்கள் எடுத்திருக்கிறீர்கள். அற்புதமான நடிகர், நடிகைகளை உருவாக்கியிருக்கிறீர்கள்; எத்தனையோ விருதுகளை வாங்கியிருக்கிறீர்கள்; வெற்றிகளை சந்தித்திருக்கிறீர்கள்; பல தோல்விகளையும் சந்தித்திருக்கிறீர்கள். ஒரு காட்சியின் மொத்த அழுத்தத்தையும் ஒரே வார்த்தையில் 'அச்சா!' என்கிற வார்த்தையில் சொன்னீர்கள், இரு கோடுகள் படத்தில்! உங்கள் சுய விமர்சனத்தை ஒரே வார்த்தையில் சொல்லுங்களேன் பார்ப்போம்! இது சவால்! (கண்ணபிரான், புதுக்கோட்டை)

கே.பாலசந்தர்: சுய விமர்சனத்தை ஒரே வார்த்தையில் சொல்லணுமா? 'அச்சா'ன்னு ஒரே வார்த்தைல படத்திலே சொன்னேன் இல்லையா? 'அச்சமில்லை' இதுதான் என் சுய விமர்சனம்.

கேள்வி (75): தற்கொலை செய்து கொள்ள வேண்டும் என்கிற எண்ணம் உங்கள் கதாபாத்திரங்களுக்குத் தோன்றியிருக்கக் கூடும். அப்படிப்பட்ட எண்ணம் உங்களுக்குத் தோன்றியதுண்டா? (மருதமுத்து, அக்சரப்பாக்கம்)

கே.பாலசந்தர்: இப்பல்லாம் அடிக்கடி தோணுது சார்! ஆமாம்! நாங்க எடுத்த படங்களை நாங்களே வீடியோல மோசமான காஸட்ல பார்க்கும் போது, ஏன் தற்கொலை பண்ணிக்கக் கூடாதுன்னு தோணுது!

கேள்வி (76): நல்ல ஆப்டிமிஸத்தோடு விளங்கும் கவிதைவரிகளைக் கூறமுடியுமா உங்கள் படத்திலிருந்து? (சியாமளா ராஜகோபாலன், ஸ்ரீரங்கம்).

கே. பாலசந்தர்: ஆப்டிமிஸத்தோடா? ஓ! சொல்ல முடியுமே! 'வெற்றி வேண்டுமா போட்டுப் பாரடா எதிர் நீச்சல்!' வாலி எழுதினது என் படத்துக்காக; படம்: எதிர் நீச்சல்.

கேள்வி (77): எஸ். பி. முத்துராமன் அவர்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்? (ராஜாராம், வடபழனி)

கே. பாலசந்தர்: டைரக்டர்ஸ் டிலைட் என்று சில நடிகர்களைச் சொல்லுவார்கள். இவர் புரொடியூஸர்களின் டிலைட். புரொடியூஸர்களின் ப்ரைட். அயராது உழைக்கும் அப்படி ஒரு யூனிட். அதன் தலைவர் எஸ்.பி. முத்துராமன்.

கேள்வி (78): தங்கள் படைப்புக்களில் தங்களை மிகவும் கவர்ந்த தமிழ்ப்படக் கேரக்டர் எது? (ஆர். எஸ். செழியன், டொம்பிவில்லி—மேற்கு).

கே.பாலசந்தர்: முதல் படம் நீர்க் குமிழி. நீர்க் குமிழி சேதுவிலிருந்து, கடைசிப் படமான கல்யாண அகதிகள் ரெட்டை ஜடை அம்முலு வரை, எத்தனையோ குணச் சித்திரங்கள். எத்தனையோ கேரக்டர்கள் நான் பண்ணியிருக்கிறேன். குண விசேஷத்தாலும்

கமலா?

அந்த பாத்திரங்களை ஏற்று நடித்த நடிகர் நடிகைகளாலும் எத்தனையோ குணச் சித்திரங்கள் என் மனத்தில் நீங்காத இடம் பெற்றவை. ஆனாலும் எல்லாவற்றுக்குள்ளும் முதலிடம் பெறும் குணசித்திரத்தை அடையாளம் காட்ட வேண்டுமென்றால் அது அக்னி சாட்சி கண்ணம்மாதான்.

கேள்வி (79): மலையாளப் படங்களில் உள்ள ரியலிஸம் தமிழ் படங்களில் இல்லையே! (எம். பாஸ்கர், ஆதம்பாக்கம்).

கே. பாலசந்தர்: இந்தக் குற்றச்சாட்டுக்குப் பாதி காரணம் டைரக்டர்களும்.








தயாரிப்பாளர்களும். ஆனால் திரைப்பட ரசிகர்களும் பாதி காரணம். ரியலிஸம் வேண்டுமென்கிறீர்கள். அதே சமயத்தில் படத்தில் விறுவிறுப்பு வேண்டுமென்கிறீர்கள்; பாடல்கள் வேண்டுமென்கிறீர்கள்; சென்டிமென்ட்டல்மெலோடிராமா வேண்டுமென்கிறீர்கள்; பாடல்களுக்காக ஓடின படம் என்று மலையாளத் திரைப்பட சரித்திரத்தில் அவ்வளவாக இல்லை. ஆக ஒரு குறிப்பிட்ட படம் நல்ல முறையில் ஹிட் ஆவதற்கான ஃபார்முலாவை அலசிப் பார்த்தால் நான் சொன்ன அத்தனை ஐட்டங்களும் அதில் இருக்கின்றன. ஆக இப்படி ஐட்டங்களைச் சுற்றி ஒரு கதைப் பின்னப்படும் போது ரியலிஸம் பின்னுக்குத் தள்ளப்படுகிறது.

கேள்வி (80): இன்றைய சமுதாயத்தை சினிமாவும், பத்திரிகைகளும்தானே கெடுக்கின்றன? (மு. பூங்கோதை, பெங்களூர்–21).

ரஜினியா?

கே. பாலசந்தர்: "சரி! ஆமாம்" என்று சொன்னால் நீங்கள் சந்தோஷப்படுவீர்கள் என்றால் சொல்லிவிடுகிறேன். "சரி! ஆமாம்" மலிவான அரசியலும், லஞ்சப் பேயும், ஊழல்களும், நிர்வாகத் திறமையின்மையும், சீரழியும் பொருளாதாரமும், மக்கள் பெருக்கமும் சமுதாயம் கெடுவதற்குக் காரணம் இல்லை என்று சொல்ல முடியுமா உங்களால்?

கேள்வி (81): ஒரு டைரக்டர் என்கிற முறையில், உங்களைக் கவர்ந்த சமகாலத்தமிழ்ப் பட டைரக்டர் யார்? (கே. எஸ். சம்பத்குமார், மடிப்பாக்கம்).

கே. பாலசந்தர்: ஓ! சொல்லமுடியுமே! கலை அம்சத்தோடு, கலை நுணுக்கங்களோடு, நல்ல இசை, நல்ல படப்பிடிப்பு, நல்ல படத்தொகுப்பு, நல்ல நடிப்பு, நல்ல லொகேஷன்கள் என்று எல்லாவிதமான கலை நுணுக்கங்களையும் அழகான விகிதாசாரத்தில் கலந்து கொடுக்கக் கற்றுக் கொண்டிருக்கிற ஒரு "பா" டைரக்டர்தான் என்னை மிகவும் கவர்ந்தவர்.

கேள்வி (82): தங்கள படத்தைப் பார்த்துவிட்டு திருந்தியதாக நேரிலோ, தபாலிலோ யாராவது கூறியிருக்கிறார்களா? (வி. சீனிவாசன், முல்லைவாடி).

கே. பாலசந்தர்: ஏன் இல்லை? நிறைய பேர் அப்பப்போ எழுதுவாங்க. அதாவது ஒவ்வொரு படமும் வருகிற நேரத்தில் குறைஞ்சது நாலஞ்சு பேராவது தான் திருந்தி விட்டதாய் எழுதுவாங்க. புன்னகை பார்த்து விட்டு பொய்யே இனி சொல்ல மாட்டேன் என்று சிலர் வாக்குறுதி தந்து எழுதினார்கள். அரங்கேற்றம் பார்த்துவிட்டு, குடும்பத்தை சத்தியமாய் இனி பெருக்கிக் கொள்ள மாட்டேன் என்று சிலர் எழுதினார்கள். தப்புத்தாளங்கள் பார்த்துவிட்டு இனி விலை மாது வீட்டுக்கே போகமாட்டேன் என்று சத்தியம் பண்ணி ஒருவர் எழுதியிருந்தார். இப்போ கல்யாண அகதிகள் பார்த்து விட்டு என் மகனுக்கு நான் வரதட்சிணை வாங்க மாட்டேன் என்று ஒருவர் எழுதியிருந்தார். ஆனால் கடைசி வரை இவர்கள் கொடுத்த வாக்கை காப்பாற்றுகிறார்களா என்று பார்க்க என்னால் எப்படி சார் முடியும்?

எஸ். வி. ரமணன்: "நேரம் நல்ல நேரம்" நிகழ்ச்சி உங்களுக்குப் பிடித்திருந்ததா சார்?

கே. பாலசந்தர்: "நேரம் நல்ல நேரம்" உண்மையிலேயே நல்ல நேரம். **I had a good time with listeners**. என்னமோ தெரியலை கேள்வி கேட்ட நேயர்களை நேருக்கு நேரா சந்திச்சு உரையாடின உணர்வை ஏற்படுத்திச்சு இந்த நிகழ்ச்சிகள். கேள்வி கேட்ட வாசகர்களுக்கும், நிகழ்ச்சியைக் கேட்ட அன்பர்களுக்கும் நன்றி. வாய்ப்பை ஏற்படுத்தின "கல்கி" பத்திரிகைக்கும் நன்றி.

ராகமாலிகா வழங்கும் பட்டுப் புடவையைக் குலுக்கல் முறையில் பரிசாகப் பெறும் அதிர்ஷ்டசாலி:

இரா. ரவிச்சந்திரன்,
20, மாரியம்மன் கோவில் சந்து,
பழனி.



தொகுப்பு: மௌனஸ்ரீ

கே. பாலசந்தர்

லக்கேஜ் பெட்டித் தயாரிப்புத்
தலைவர்களின் படைப்பு—


விஐபி
கன்காரு

வந்திறங்குது இப்போது—

இதோ, ஜெட் யுகக் கட்டழகுள்ள
புதிய விஐபி கன்காரு! நாகரீக
நரம்போடிய அலாதி ஸ்டைலிங்.
கண்டறியாத வர்ண வகைகள்:
பீச் க்ரீம் (செவ்விள மஞ்சள்),
டெஸர்ட் பிரவுன் (மணற் கபில
நிறம்), மிஸ்ட் க்ரே (பனிச்
சாம்பல்), க்ரீம் சாக்கலேட்,
மேலும் பலப் பல. உட்புறமோ
இடவசதி மிகுதி.

ஓடோடிப் பார்வையிடுவீர்:
அருகிலுள்ள வியாபாரியிடம்...
சொகுசு லக்கேஜ் புதுவரவுகள்.

ஆகாயமெட்டும் எங்கள் அதிநவீனக் கற்பனை.



தேர்ந்தெடுக்க மிகப் பல வகைகள்,
வருங்கால யோக வரவுகளோ மேலும் பலப்பல.

அன்பின் முகவரி



இந்தப் படத்தின் நிஜமான கதாநாயகர்கள் சத்ய
ராஜும், கவுண்டமணியும்தான். நடிப்பதில் எல்லோரை
யும் தூக்கிச் சாப்பிட்டு விடுகிறார்கள்.

செந்தில் அந்தப் பக்கம் 'ஜயா' என்று கூப்பிட,
இந்தப் பக்கம் சாராயம் காய்ச்சும் கவுண்டமணி,
'சாராயமெல்லாம் பிச்சை எடுத்ததில்லப்பா' என்று
தமாஷாவாகச் சொல்லிச் சிரிக்க வைக்கிறார்.

இந்த சத்யராஜுக்கு நடிப்பில் என்ன பாலிஷ் ஏறி
யிருக்கிறது! விஜியின் அம்மா செத்துப் போயிருக்கும்
போது பேசுகிற விதமும், 'அம்மா' என்று கை விலங்கு
டன் காலைத் தொட்டு கண்ணில் ஒற்றிக் கொள்வதும்
குடிபோதையில் விஜியிடம் பேசுவதுமாய் மனிதர்
அட்டகாசம் பண்ணுகிறார்.

இனிமேல் மற்ற விஷயங்கள்.
பரவாயில்லை. வெகு சுவையானதுதான் படத்தில்
வைத்திருக்கிற முடிச்சு! ஜெயிலில் இருந்து தப்பிக்கும்
கைதி. அவன் முன் கதையில் உலவும் காதலி. இந்
நாளில் இன்னொருவன் மனைவி. அப்புறம் கைதியைக்
காதலிக்கும் இன்னொரு பெண். சாமர்த்தியமான
பின்னல். மணிவண்ணன் ஜாலியாகச் செய்த படம்
போலிருக்கிறது.

இழுவிலை க்ரூப் டான்ஸ் மத்தியில் டான்ஸ் ஆட
விட்டு ஒரு புன்முறுவல் பூக்க வைக்கிறார். இந்த மாதிரி
எங்கேயோ எப்பவோ பார்த்த மாதிரி இருக்கே. கைதி
யாக விடுதலையாகி வந்த சத்யராஜ் சந்திக்கும்
மோகனை இடத்தில் நல்ல இருப்பம்தான். நாய்கள் துரத்தும்
இடத்தில் நல்ல திருப்பம்தான். விஜி. மோகன் லவ்வில்
க்ளைமாக்ஸில் ஒரு திகில்.
லேசான கிறுகிறு.

ஆனால் அந்த முடிவுதான் நெருடல். அருவெறுப்போ
அந்த கொலைகள் என்று நினைக்க வைக்கின்றன.

இளையராஜாவின் அடக்கமான இசை.
ஜாரிங்கே இல்லாமல் மென்மையாகப் பூத்த பாடல்
கள்.

அன்பின் முகவரி அத்தனை பேருக்கும் தெரியலாம்.
தப்பில்லை.

—ஜெயமன்மதன்

* கே. கே. கோபாலன், கள்ளக்குறிச்சி

? ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்க அமைக்கப்படும் கமிஷன்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

! தன் பேரில் ஊழலுக்காக ஒரு கமிஷன் அமைக்கப்பட்டிருக்கிறது என்று அறிந்த வுடனே, பதவி துறந்த அமைச்சர்கள் அதி காரிகள் காலம் மலையேறி ரொம்ப நாளாச்சு. இப்போதைய கமிஷன்களைப் பற்றி சுருக்க மாக: இவை ஓய்வு பெற்ற நீதிபதிகளுக்கு மறு வேலை வாய்ப்பு.





* அ. ராஜாரஹ்மான், உத்தமபாளையம்

? தற்போது கொண்டுவரப்பட்டுள்ள பயங் கரவாத தடுப்புச் சட்டத்தை மேற்கு வங்க முதல்வர் எதிர்ப்பது சரியா?

! ஜோதிபாசுவாவது எதிர்ப்புத் தெரிவித் திருக்கிறாரே! மெச்சுகிறேன். பிராளுமன்றத் தில் எதிர்க்கட்சிகள் குறைந்த பட்சம் வெளி நடப்பாவது செய்திருக்க வேண்டிய விஷ யம் இது. பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் ஆள் தூக்கிச் சட்டத்தை விட மோசமான இந்தச் சட்டத்தைப் போட்டுத்தான் பயங்கர வாதத்தை அடக்கப் போகிறார்கள் என்றால் இந்த அரசு யந்திரம் ஏற்கெனவே உள்ள சட்டங்கள் விஷயத்தில் எவ்வளவு பலவீன மாகச் செயலாற்றுகிறது! இந்தச் சட்டத்தை ஆளும்கட்சியும், போலீஸும் துஷ்பிரயோகம் செய்யாது என்பது என்ன உறுதி? அபரிமித அதிகாரங்களை அரசிடம் வழங்குவது ஜன நாயகத்தில் நல்லதல்ல; அது ஜனநாயகமே அல்ல!

* வி. ரவிகுமார், லால்குடி—1.

? அன்பளிப்பாக உங்களுக்கு ஒரு டிரான் ஸிஸ்டர் அனுப்பலாமா என்று நினைக்கிறேன். பெற்றுக் கொள்வீர்களா?

! டெல்லி செட்டாக இல்லாத வரை சரி!

??????????????????????????????????????

அகில இந்திய ஜோக்!

??????????????????????????????????????

* டாக்டர் நாவலர்தாசன், சென்னை—56.

? ராஜீவ்காந்தியின் ரஷியப் பயணம் இந்திய பொருளாதாரத்தை உயர்த்துமா?

! பொருளாதாரத்தை உயர்த்துகிறதோ இல்லையோ இந்தியக் குடிமகனின் கடன் சுமையை நிச்சயம் உயர்த்தும்!

* பா. கிருஷ்ணதாஸ், கும்பகோணம்—1.

? யாருடைய தன்னம்பிக்கை உங்களை வியக்க வைக்கிறது?

! காலிழந்து மீண்டும் நாட்டியமாடி நிரூ பித்த சுதா செந்திலைப் படிக்கிறவரை என்னை வியக்க வைத்த தன்னம்பிக்கை எம். ஜி. ஆருடையதுதான்.

* இரா. சுவாமிநாதன், சீர்காழி.

? பள்ளி ஆசிரியரை ஓடத்திற்கும் ஏணிக் கும் உவமையாகச் சொல்லும்போது பத் திரிகை ஆசிரியரை யாருக்கு உவமையாகச் சொல்லலாம்?

! அரங்கத்தின் மேடைக்கு!

* த. சத்தியநாராயணன், அயன்புரம்.

? 'அகில இந்திய ஜோக்' என்று எந்த நிகழ்ச்சியைக் குறிப்பிடுவீர்கள்?

! அண்மையில் மிகக் குறைந்த கால டெபா ஸிட்களுக்கும் 8% வட்டி என்று அறிவித்து விட்டுத் திடீரென்று அனைத்து அரசுடமை பாங்குகளும் அடித்த பல்டியை.

* மா. புகழேந்தி, வாணியம்பாடி—3.

? சுங்க இலாகா அதிகாரிகள் தங்கள் இல் லத்தைச் சோதனையிட்டால் என்ன கிடைக் கும்?

! தங்கத்தையும் வைரத்தையும் விட விலை மதிப்பிடற்கரிய நூல்கள் கிடைக்கும்.

* விலாராம், தக்கலை.

? வாரம் ஐந்து நாட்கள் வேலை என்ற திட்டம் வெற்றியளிக்குமா?

! ஊழியர்கள் எத்தனை நாட்கள் அல்லது எத்தனை மணி வேலை செய்கிறார்கள் என்பதில் ஒரு பிரமாத வித்தியாசம் வந்து விடப் போவதில்லை. என்ன வேலையை எப்படிச் செய்கிறார்கள் என்பதைப் பொறுத்துதான் அதன் வெற்றி தோல்வி. செய்யும் வேலைக்கு ஒரு தர நிர்ணய இலாகாவை ஏற்படுத்தலாம் என்றால் அந்தத் தர நிர்ணய இலாகாவுக்கு ஒரு தர நிர்ணய இலாகா. இப்படி கோர்த்து மாட்டிக் கொண்டே போக வேண்டியிருக்கும். ஆகவே அரசு ஊழியர்களுக்கு மகிழ்ச்சி தரக் கூடிய இந்த விஷயம் அனைத்துப் பொது மக்களுக்கும் மகிழ்ச்சி தரும்படியாகப் பார்த்துக் கொள்வது அரசு ஊழியர்கள் கையில் தான் இருக்கிறது.

* என். செந்தில்குமார், மயிலாடுதுறை.

? பிறருக்குச் சோப்புப் போட்ட அனுபவமுண்டா?

நீங்கள் கேட்டிருக்கிற அடுத்த கேள்வி

??????????????????????

நீங்கள் கேட்டவை

— தராசு

??????????????????????

தான் இதற்கு பதில்: (பதில் சொல்ல முடியாத கேள்வி எது?)


* ஏ. ஜோசப், பாண்டிச்சேரி—8.

? உதட்டழகில் சிறந்தவர் மாதவியா? அனுராதாவா?

! மேக்கப்மேனின் மூடைப் பொறுத்தது சினிமா நடிகையின் லிப்ஸ்டிக் பூச்சு. அவருக்கு மூட் அவுட்டானால் இருக்கிற உதட்டழகும் அரோகரா. ஒரு மூதுரை உங்களுக்கு ஞாபகமிருக்கிறதா? உதட்டிற்கு அழகு உண்மை பேசுதல். அட போய்யா என்று கொட்டாவி விடத் தொடங்கி விட்ட மாதிரி இருக்கே! போகட்டும் வேற லைனில் சொல்கிறேன். உதட்டிற்கு அழகு ஒழுங்கான வசன டெலிவரி. அதற்கு கர்த்தா வசனகர்த்தா.

? அரசாங்க வீட்டைக் காலி செய்ய மறுத்த ராஜ்நாராயணனுக்கு நேர்ந்த கதி...

! அதுதான் இங்கே சட்டமன்ற அரசியல் கட்சி அலுவலகங்களுக்கும் தொடர்கிறதே! விதிகள் இருப்பது கடைபிடிப்பதற்காக. அதைச் சட்டமன்றக் கட்சிகளும் தலைவர்களும் எங்கள் இஷ்டப்படி விலக்களிக்க வேண்டும் என்று அடம் பிடிக்கத் தொடங்கினால் அழகல்ல.



* எஸ். ஏ. கோவிந்தகுமார், நீடாமங்கலம்.

? தற்போது சென்னையில் எதற்குப் பஞ்சம்? எதற்குப் பஞ்சமில்லை?

! தண்ணீர்... தண்ணி..





* ரூ. 10 பரிசு பெறுபவர்

அ. ராஜாரஹ்மான்,
7, கருப்பட்டி சந்து,
உத்தமபாளையம்,
மதுரை (மா.வ).



ஏங்களுக்கு என்ன பதில்?

இன்றைய இளைஞன் எந்த திசையிலும் சந்திப்பது பிரச்னையை. வேலை வாய்ப்பு, படிப்பு, தேர்வு, பெற்றோர் மனத்தாங்கல் என்று எந்தத் துறையை எடுத்துக் கொண்டாலும் சரி, பிரச்னை... பிரச்னை. நொந்த விந்துப் போயிருக்கிறார்கள் இளைஞர்கள். இந்த நிலையில் ஒரு முதிர்ந்த அரசியல்வாதியிடம், மூன்று இளைஞர்களை அழைத்துப் போய் அவர்கள் பிரச்னைகளையும், நாட்டுப்பிரச்னைகளையும் கேட்க வைத்து, பதிலைப் பெற்றால் என்ன என்று தோன்றியது. அதன் விளைவே இந்த உரையாடல். இளைஞர்களைச் சந்தித்தவர் ஜனதா தலைவர் திரு. இரா. செழியன் அவர்கள்.

சந்தித்த இளைஞர்கள்: 1. எழிலரசு (வங்கி ஊழியர்)
2. பாலாஜி (மாணவர்)
3. அகிலன் (மாணவர்)

பாலாஜி: பொதுவாக இன்றைய இளைஞர்கள், மாணவர்கள் பற்றிய உங்கள் கணிப்பு என்ன?

செழியன்: ரொம்ப தரமுள்ளவர்கள், விவரமறிந்தவர்கள். வேலையில்லாத் திண்டாட்டம் போன்ற பிரச்னைகளால் பலர் பாதிக்கப்பட்டு விரக்தியடைந்து மனமுடைந்து போகிறார்கள். அதுபோன்ற இளைஞர்களை நல்வழிப்பாதையில் கொண்டுசெல்ல வேண்டுமானால், பிரச்னைகள் தீர்க்கப்பட வேண்டும். பொதுவாக நோக்கினால் ஒரு நல்ல குறிக்கோளை நோக்கிச் சரியான பாதையில் செல்லும் துடிதுடிப்பான இளைஞர்களை நான் நிறையக் காணுகிறேன்.

எழிலரசு: இளைஞர்களுக்கு அரசியல் தேவையா? இளைஞர்களை அரசியல்வாதிகள் பயன்படுத்திக் கொள்கிறார்களே?

செ: மாணவர்கள் தான் அரசியல்வாதிகள் தங்களை உபயோகித்துக் கொள்ள அனுமதிக்கிறார்கள். அரசியலில் ஈடுபட வேண்டுமா என்பது பற்றி என் ஆலோசனையை நான் தெரிவிக்க முடியாது. இது அவர்களே முடிவுசெய்ய வேண்டிய பிரச்னை. இன்றொன்றும் சொல்லுவேன். அரசியல்வாதிகளை ஏன் கல்லூரிக்குள் அனுமதிக்கிறீர்கள்? உங்கள் கல்லூரிக்குத் தேர்தலில் யாராவது கட்சியின் பெயர்சொல்லிக்கொண்டு ஓட்டுக் கேட்டால் அவர்களுக்கு ஓட்டுப் போடாதீர்கள். சமுதாயத்துக்கு சேவை செய்ய வேண்டும் என்று நீங்கள் உளமார நினைப்பீர்களானால், அரசியலைத் தவிர வேறு பல வழிகளும் இருக்கின்றன.

அகிலன்: அரசியல்வாதிகள் சுயவிளம்பரத்துக்காகப் போராட்டம் நடத்துகிறார்கள். இந்தப் போராட்டங்களின் போது, வன்முறைகளில் பெரிதும் பாதிக்கப்படுவது இளைஞர் சமுதாயம் தான். இதை மாற்றுவது எப்படி?

செ: அரசியல்கட்சிகள் நடத்தும்போராட்டங்களை ஆதரிக்காமல் உங்களுக்குள் ஒரு ஒற்றுமையை ஏற்படுத்திக் கொண்டு, ஒரு குறிப்பிட்ட பிரச்னைக்காக, காந்திய

* திரு இரா. செழியன்



* இளைஞர்களுக்கென்று தனிப் பிரச்சனை இல்லை



• உங்களுக்கு நீங்களே வழிகாட்டி

முறையில் போராட்டம் நடத்தலாம். வேலையில்லாத் திண்டாட்டப் பிரச்னையைப் பெரிது படுத்தி, இளைஞர்கள் ஒன்றுசேர்ந்து போராட்டம் நடத்தினால் என்ன? அரசியல்வாதிகள் தான் தங்கள் existence—க்காக எதையாவது செய்து கொண்டு இருக்கிறார்கள். நீங்களாவது உருப்படியான பிரச்னைகளில் உங்கள் கவனத்தைச் செலுத்துங்களேன்.

எழிலரசு: ஜனநாயகத்தில் அரசியலுக்கும் அறிஞர்களுக்கும், இடைவெளி அதிகமாகிக் கொண்டே வருகிறதே — இதை மாற்ற முடியாதா?

செ: ஜனநாயகத்தில் அறிஞர் பெருமக்கள் கருத்து சரியானபடி பிரதிபலிக்க வேண்டும் என்பதற்காகத்தான் மேல்சபை, ராஜ்ய சபை போன்றவை ஏற்பட்டன. 1947—க்கு முன் ஒரு லட்சியம் இருந்தது. ஆனால் அதற்கு பின் நடந்த அரசியல் நிகழ்ச்சிகள், அறிஞர்களை வெகுதூரம் கொண்டு போய் நிறுத்தி விட்டது.

பாலாஜி: இளைஞர்கள் எந்த சாதனை செய்தாலும் அதைப் பிரபலப்படுத்தாமல் அமுக்குகிறார்கள். உதாரணமாக, சமீபத்தில் பகவான்சிங் என்றநிருபர் தன் உயிரைப் பணயம் வைத்து விடுதலைப் புலிகளுடன் யாழ்ப்பாணத்துக்குச் சென்று வந்தார். அதே போல அண்ணாமலைப் பல்கலைக்கழக மாணவர் ஒருவர் ஸ்பிரிட்டால் ஓடக் கூடிய கார் ஒன்றைக் கண்டுபிடித்தார். இவைகளெல்லாம் சரியான முறையில் பிரபலப்படுத்தவில்லையே!

செ: உங்கள் ஆதங்கம் புரிகிறது. மிக அருமையான, பாராட்டும்படியான சாதனைகளை இளைஞர்கள் செய்கிறார்கள். ஆனால் அவர்களை ஊக்குவிப்பவர்கள் குறைவு. ஒப்புக் கொள்கிறேன். எந்தத் திசையில் சென்றாலும் அவர்கள் தடுத்து நிறுத்தப் படுகிறார்கள். இந்தச் சூழ்நிலை எவ்வளவு விரைவில் மாற்றப்படுமோ, அப்போதுதான் நாட்டு முன்னேற்றம் துரிதமாகும்.

அகிலன்: "ஜனதா கட்சி மீது மக்கள் நிரம்ப நம்பிக்கை வைத்திருந்தார்கள். அது உடைந்த போது மக்கள் நம்பிக்கையும் உடைந்து போயிற்று. எதிர்க்கட்சிகளை இணைக்க இப்போதாவது திட்டம் வைத்திருக்கிறீர்களா?

செ: 1975—1977 சூழ்நிலை வித்தியாசமானது. ஒருவீடு பற்றி எரிவது போல இந்தியா முழுவதும், ஜனநாயகம் என்னும் வீடு பற்றி எரிந்து கொண்டிருந்தது. அதை அணைத்து



• திரு பாலாஜி



• திரு அகிலன்



• திரு எழிலரசு

தினசரி ஒரு காரட்



1. காரட் ஞாபக சக்திக்கு ஒரு நல்ல டானிக். தொடர்ந்து சாப்பிட்டால் நல்ல நினைவாற்றல் கிட்டும்.
2. காரட் இரத்தத்தைத் தூய்மை செய்யும். இரத்தக் குறைபாடுகளை நிவர்த்திக்கும்.
3. மஞ்சள் காமாலை, க. பி. மூலம் ஆகிய நோய்களைக் குணப்படுத்துவதில் காரட் சக்தியோடு செயலாற்றுகிறது.
4. பளபளப்பான மிருதுவான சருமத்திற்குக் காரட் ஜூஸ் மிகவும் பயனுள்ளது.
5. குடல் புழுக்களைத் தவிர்ப்பதில் காரட் மிகவும் உதவும். காலையில் வெறும் வயிற்றில் காரட் ஜூஸ் சாப்பிட வேண்டும்.
6. மலச்சிக்கலுக்கும் காரட் சரியான மாற்று. காலையில் வெறும் வயிற்றில் காரட் ஜூஸ் சாப்பிட்டு வந்தால் பலன் உண்டு.

ஆதாரம்: பாடி & ப்யூட்டி கேர்.

ஜனநாயகத்தைக் காப்பாற்ற ஆட்கள் தேவைப்பட்டது. ஒன்றுபட்டோம். ஜனநாயகம் மீண்டும் நிலைநிறுத்தப்பட்டவுடன், விடுத்தி அணைந்ததும் 'வேலை முடிந்து விட்டது' என்ற நிலையில் கலைந்து விட்டோம். இணைக்கும் முயற்சி நடக்கத்தான் செய்கிறது. ஆனால் எவ்வளவு தூரம் சாத்தியப்படும் என்று தெரியவில்லை.

எழிலரசு: இளைஞர்கள்; எங்கு சென்றாலும், 'அனுபவம் உண்டா' என்று கேட்கிறார்கள். 'எந்த வாய்ப்பையும் கொடுக்காமல் அனுபவம் உண்டா?' என்று கேட்பது எந்த வகையில் நியாயம்?

செ: எதற்குமே ஒரு ஆரம்பம் உண்டு. என்னை எடுத்துக் கொண்டீர்களானால் விடுதலைப் போராட்டத்துக்கு முன்பிருந்தே அரசியலில் இருந்திருக்கிறேன். 1962 தேர்தலில் தான் முதலில்போட்டியிட்டேன். ஆக அதற்கு முந்தைய காலம் அனுபவமாகக் கருதப்பட்டது. ஆக இந்த 'அனுபவம்' என்பது தவிர்க்க முடியாத ஒன்றாகி விட்டது. ஆனால், தகுதியுள்ள சிலர், சரியான சந்தர்ப்பம் கிடைக்கும் போது திடீர் என்று எந்த அனுபவமும் இல்லாமல் முன்னால் வந்து விடுகிறார்கள். இதுவும் நடந்து கொண்டுதான் இருக்கிறது.

பாலாஜி: ! இட ஒதுக்கீடு இளைஞர்களை மிகவும் பாதிக்கிறதே! இதைப் பற்றி உங்கள் கருத்து என்ன?

செ: இந்தப் பிரச்சனை தீர்க்கப்பட வேண்டுமானால் வாய்ப்புக்களை அதிகமாக்க வேண்டும். ஒரு ரயில், நிறைந்து விட்ட தென்றால் கூட இரண்டு பெட்டிகள் இணைந்தால்என்ன? அது போன்றுதான். ஆனால் அரசியல் ஆதாயத்துக்காக, அந்தந்த மாநில அரசுகள் பிற்பட்டோர் சதவீதத்தை ஏற்றிக் கொண்டே போகின்றன. வயது வந்த எல்லோரும் கல்வி அறிவைப் பெறும் வரை இந்த ரிஸர்வேஷன் ஸிஸ்டம் தவிர்க்கப்பட முடியாதது.

அகிலன்: பெரும்பாலான இளைஞர்கள் விரக்தியின் உச்சகட்டத்துக்குச் சென்று தீவிரவாதியாகவும், பயங்கரவாதியாகவும் மாறி விடுகிறார்கள்! இதைத் தடுப்பதற்கு என்ன வழி?

செ: இந்தக் கேள்விக்கு என்னால் பதில் சொல்ல முடியாது. என் வீட்டைச் சரியாக வைத்துக் கொண்டுதான் மற்றவர்களுக்கு நான் அறிவுரை கூற முடியும் **(I should set right my house)** இலங்கை பிரச்சனை சம்பந்தமாக மறைந்த இந்திரா அவர்கள் என்னிடம் ஆலோசனை கேட்ட போது கூட நான், 'நீங்கள் பொறுப்பில் இருக்கிறீர்கள். தீர்மானிக்க வேண்டியது நீங்களே' என்று சொன்னேன். ஆலோசனை கூறுவது என்பது ஒரு பக்கம் பார்க்கப் போனால் சுலபமான வேலையும் கூட. ஆனால் அவைகளைச் செயல்படுத்தக் கூடிய நிலையில் நாங்கள் இருக்க வேண்டும்.

(திருப்பர் குறுக்கிட்டு)

'பஞ்சாப் பிரச்னையில் தீவிரமாக இறங்கியிருப்பவர்கள் இளைஞர்களே. அவர்களை நல்வழியில் அழைத்துச் செல்ல எதிர்க்கட்சிகள் என்ன செய்துள்ளன?

செ: எத்தனையோ முறை எதிர்க்கட்சிகள் குழு பஞ்சாபிற்குச் சென்று இளைஞர்களுக்கு ஆலோசனை வழங்கியிருக்கிறது. அதைக் கேட்டுத் திருந்தியவர்களும் இருக்கிறார்கள்.

எழிலரசு: எல்லா கட்சிகளும் இளைஞர்களுக்கு வாய்ப்புக் கொடுக்க வேண்டும் என்று வாயளவில் சொல்லிக் கொண்டிருக்கின்றனவே தவிர செயலில் ஒன்றும் இல்லை. உதாரணமாக, உங்கள் கட்சியின் தலைமைப் பதவியை ஒரு இளைஞருக்குக் கொடுத்தால் என்ன?

செ: சந்திரசேகருக்கு வயது 58. ஆனாலும் இன்னும் இளைஞர்களுக்குள்ள அதே எழுச்

சியுடன் தான் இருக்கிறார். ஆனால் காலத்தின் கட்டாயம் என்றால், ஸீனியாரிடி, பரிந்துரைகள் இவற்றையெல்லாம் மீறி ஒரு இளைஞர் தலைவன் உருவாவான் என்பது என் அழுத்தமான நம்பிக்கை.

பாலாஜி: இந்த இளைஞர் ஆண்டில் எங்களுக்கு நீங்கள் கூறும் அறிவுரை என்ன?"

இளைஞர்கள் தங்களைத் தாங்களே நிர்ணயித்துக்கொள்ளவேண்டும். இளைஞர்களுக்கு என்றுதனிப் பிரச்சினை இல்லை. இளைஞர்கள் பிரச்னையும் சமுதாயப் பிரச்சினைகள் தான். ஓரணியில் திரளுங்கள். அரசியல் சட்டப்படி பார்த்தால், சுதந்திரம் பெற்ற பிறகு முதல் பத்தாண்டுகளில் எல்லோருக்கும் கல்வி கொடுத்திருக்க வேண்டும். நடந்ததா? 30 ஆண்டுகளில்தீராத இந்தப் பிரச்சினை 300 ஆண்டுகளில் கூட தீராது. இந்த பிரச்னையை வைத்து நீங்கள் அகிம்சா வழியில் ஏன் போராடக் கூடாது. அரசியல்வாதியை எதிர்பார்க்காதீர்கள். அவனே குருடனைப் போன்று உள்ளான். தலைவன் என்று யாரையும் சொல்லாதீர்கள். உங்களுக்கு நீங்களே வழிகாட்டி.

பாலாஜி: எந்தப் பிரச்னையை நாங்கள் முதலில் சந்திப்பது?

செ: மக்களின் பிரதிநிதி சரியாகச் செயல்படாவிட்டால் தட்டிக் கேளுங்கள். போராட்டம் நடத்துங்கள். உங்கள் உரிமைகளுக்காக நீங்கள் போராடத்தான் வேண்டும்.

உங்களுக்குக் கிடைக்கும் சந்தர்ப்பத்தைச் சரியானபடி உபயோகித்துக் கொள்ளுங்கள். நீங்கள் உங்களையே ஆத்ம பரிசோதனை செய்து கொண்டு புடம் போட்ட தங்கமாக மினிருங்கள். இப்படிச் செய்தால் சமுதாயமும், நாடும் தன்னாலேயே திருந்திவிடும் என்பது என் நம்பிக்கை.

தொகுப்பு: ப்ரியன்.

படங்கள்: 'சுபா' எட்வர்ட்.



தலைவலி தவிர்ப்பது எப்படி?

பொதுவாகத் தலைவலி என்பது ஒரு பிரதான நோய் அல்ல. உடலில் ஏற்பட்டுள்ள பல்வேறு ஒழுங்கீனங்களை அவை பிரதிபலிக்கின்றன. பொதுவாக நம் தலைவலிகளை ஸீரியஸாக எடுத்துக் கொள்வதில்லை. மாத்திரை சாப்பிட்டு அடக்கி விடுகிறோம். பரிசோதிக்காமல் தக்க சிகிச்சை தராமல் நாம் புறக்கணிக்கிறோம். தலைவலி ஏற்படுமுன்பே அது வராமல் தவிர்ப்பது மேல். கீழே சில யோசனைகள்:

1. சின்னச் சின்ன விஷயங்களைக் குறித்து அதிகம் அலட்டிக் கொள்ளாதீர்கள். தங்கள் சூழ்நிலையிலோ வேலையிலோ பரிபூரண எச்சரிக்கையைக் கடைப்பிடிப்பவர்கள் சுலபமாக மனசு பாதித்துத் தலைவலிக்கு ஆளாகிறார்கள்.

2. மனசு களைத்து எரிச்சலுற்ற வேளையில் ஒரு பிரச்னையோடு மல்லுக் கட்டி நிற்க வேண்டாம். களைப்புற்றவுடனே பிரச்னையை ஒத்திப் போடுங்கள். ரிலாக்ஸான பிறகு சிந்தியுங்கள்.

3. அநாவசியக் கவலைகளை ஒதுக்கி வையுங்கள். சொல்வது சுலபம். செய்வது கடினம்தான். தனி முயற்சி செய்தால் பலன் தெரியும். கவலைதான் தலைவலியின் சாவி.

4. எளிதில் திருப்தியடையுங்கள். உலகில் எத்தனையோ தேவைகள். அதில் பல மனசு கற்பித்துக் கொண்டவை. தேவை கிட்டாவிட்டால் மனம் விரக்தியுறுகிறது. தீவிர வேட்கையும் பெரிய சாதனை புரியும் அவாவும் உள்ளவர்கள் தலைவலியின் பிடியில் சிக்கி விடுகிறார்கள். எனவே சாந்தமாகவும், திருப்தியுடனும், சஞ்சலமின்றியும் இருக்கப் பழகுங்கள். தலைவலிக்கு எப்போதைக்குமாக குட்பை சொல்லி விடலாம்.

ஆதாரம்: பாடி & ப்யூட்டி கேர்.

அறிவு நூல்களுக்கு ஓர் அப்துற்றஹீம்

தமிழில் ''தன்னம்பிக்கை நூல்களின் தந்தை'' என ஏகமனதாகப் பாராட்டப் பெறும் எம். ஆர். எம். அப்துற் றஹீம், 63 வயது ஆகும் மூதறிஞர்.

இவரது தன்னம்பிக்கை நூல்களைப் படித்து முன்னுக்கு வந்த பலர் ஆயிரக்கணக்கான பாராட்டுக்களைக் குவித்துள்ளனர். மலேசியாவில் ஒரு கோடீஸ்வர ரசிகர் இவரது வியாபாரம் செய்வது எப்படி? என்ற நூலைப் படித்து முன்னுக்கு வந்ததும், அந்நூலின் 500 பிரதிகளை விலைக்கு வாங்கித் தன் அலுவலகத்திலுள்ள அனைவருக்கும் விநியோகித்திருக்கிறார். அவரது பேட்டி இது:



(1) தங்களை எழுத்துலகிற்கு அறிமுகப்படுத்திய நூல் எது?

சிலப்பதிகாரத்தில் குறிப்பிடப்படும் ''தொண்டி'' தான் எங்கள் ஊர். எங்களூர் நூலகத்தில் ஆம்ஸ்ட்ராங் எழுதிய ''லார்ட் ஆஃப் அரேபியா'' என்ற நூலை மொழி பெயர்க்க விரும்பினேன். எனது தந்தையும் ''உன்னால் முடிந்தால் செய்!'' என ஊக்க மூட்டினார்கள். அதை ''அரேபியாவின் அதிபதி'' என்ற பெயரில் மொழி பெயர்த்தேன்.

(2) தங்களை எழுத்துலகில் வெற்றி பெறச் செய்த முதல் நூல் எது?

''வாழ்க்கையில் வெற்றி'' என்ற நூல். இதுவரை 18 பதிப்புகள் கண்டிருக்கிறது.

(3) தாங்கள் வேறு துறையில் பணியாற்றி இருக்கிறீர்களா?

வேலை வாய்ப்பு அலுவலகத்திலும், பிறகு யுத்தத்திற்கு ஆட்களை அனுப்பும் வேலையிலும் கொஞ்ச காலம் பணியாற்றினேன். 'சுதேசமித்திர'னில் பயிற்சி பெற்று 'சுதந்திர நாடு' என்ற தினசரிப் பத்திரிகையில் ஆசிரியராகவும் சிலகாலம் இருந்தேன்.

(4) நீங்கள் ஏன் அறிவு நூல் எழுதினீர்கள்? இதற்கு என்ன லட்சியம்? பணம் சம்பாதிப்பதா?

பணம் சம்பாதிப்பது மட்டும் எனது இலட்சியமல்ல. என் பேனாவிலிருந்து நல்ல கருத்துக்கள் வர வேண்டும். இதையே ஆண்டவனிடம் தினமும் பிரார்த்திக்கிறேன்.

(5) உங்களுடைய குடும்பம் பற்றி...?

நாங்கள் 'மிகுராசு மாலை' எழுதிய ஆலிப் புலவர் வழித்தோன்றியவர்கள். எங்கள் மூதாதையருக்கு வரும் கடிதங்கள், ஏன் முகவரி கூட சீட்டுக் கவியாகவே இருக்கும்.

(6) அண்மை காலத்தில் அத்தகைய நூல்கள் தாங்கள் எழுதுவது இல்லையே, ஏன்?

தன்னம்பிக்கை தரும் 30 நூல்கள் வரை எழுதியுள்ளேன். இனியும் எழுதினால் இதே கருத்துக்கள் **Repetition** ஆகிவிடும். எனவே விட்டு விட்டேன்.

(7) தற்கால வாசகர் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

நமது ஜனங்கள் பொழுது போக்கத்தான் படிக்கிறார்கள். காலத்தின் அருமையை உணரவில்லை.

(8) தங்களுடைய பள்ளி வாழ்க்கையில் மனத்தைத் தொட்ட இனிய நிகழ்ச்சி ஏதாவது உண்டா?

நான் 5-ம் பாரம் படித்தபோது எனது சயின்ஸ் ஆசிரியர் ஸ்ரீ ராமானுஜ அய்யங்கார் ஒரு நாள் என்னைச் சுட்டிக்காட்டி, **"Abdul Rahim is a noble-soul"** என்று சொன்னார். அவருடைய வாக்கு பொய்க்கக் கூடாது என்பதில் இன்றளவும் நான் அக்கறை காட்டி வருகிறேன்.

(9) இன்றைய சமுதாயத்திற்குத் தாங்கள் கூறுவது என்ன?

உலக வாழ்க்கையின் இன்ப துன்பங்களை கீதையில் குறிப்பிட்டுள்ளவாறு, ''சம துக்க சுக'' மாக பாவிக்கும் மனத் திண்மையை நாம் பெற வேண்டும்.


பேட்டி: அம்ஸா

புகைப்படம்: அடையார் மோஹனன்

Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd. at the Bharathan Press, Race Course Road, Guindy, Madras-600032. (Phone: 431543)

Assistant Editor: P. S. Mani

Editor: K. Rajendran



அறிமுகப்படுத்துகிறோம்!

புதிய ஜான்ஸன்ஸ் ப்ரிக்லி ஹீட் பவுடர்

அது வேர்க்குருவிற்கு விரைவாக நிவாரணமளிப்பது மட்டுமல்ல, உண்மையிலேயே அதைத் தடுத்திட உதவுகிறது.

நீங்கள் வேர்க்குருவைத் தடுக்க முடியும்போது அது தாக்கும்வரை ஏன் காத்திருக்க வேண்டும்?

இப்போது, உங்கள் வேர்க்குரு பிரச்சினையைக் கட்டுப்படுத்த இன்னும் மிகத் தீவிரமான வழி— புதிய ஜான்ஸன்ஸ் ப்ரிக்லி ஹீட் பவுடர். அது வேர்க்குருவிற்கு விரைவாக நிவாரண மளிப்பது மட்டுமல்ல உண்மையிலேயே அதை தடுத்திட உதவுகிறது.

புதிய ஜான்ஸன்ஸ் ப்ரிக்லி ஹீட் பவுடர் ஏன் மிகவும் தீவிரமானது?

உங்களுக்கு அதிகமாக வியர்த்து. அந்த வியர்வை உங்கள் சருமத்தில் அதிக நேரம் தங்கியிருக்கும்போது. வேர்க்குருவின் தாக்குதலுக்கு நீங்கள் ஆளாகிறீர்கள். அதற்காகத்தான் புதிய ஜான்ஸன்ஸ் ப்ரிக்லி ஹீட் பவுடர் மிகவும் தீவிரமானதாகத் தயாரிக்கப்பட்டுள்ளது. வியர்வையை நன்றாகவும் விரைவாகவும் உறிஞ்சும் வண்ணம் விசேஷமாகத் தயாரிக்கப்பட்டுள்ளது அது— உங்கள் சருமத்தில் பாக்டீரியாக்கள் பெருகுவதைத் தடுக்கிறது— ஆகவே வேர்க்குரு இல்லை. எரிச்சல் இல்லை. அரிப்பு இல்லை. அப்பாடா என்ன நிவாரணம்! அதற்குமேல் புதிய ஜான்ஸன்ஸ் ப்ரிக்லி ஹீட் பவுடர், இப்போது மகிழ்ச்சிதரும் புதிய நறுமணமும்* கொண்டுளது.

வரும் கோடையில் வேர்க்குரு தாக்கும் வரை காத்திருக்காதீர்கள். விரைந்து வாங்கிடுங்கள் ஒரு பேக் புதிய ஜான்ஸன்ஸ் ப்ரிக்லி ஹீட் பவுடர். வேர்க்குருவை நீங்கள் தடுக்க முடியும்போது. வேர்க்குருவால் ஏன் சிரமப்பட வேண்டும்?


விசேடமாகத் தயாரிக்கப்பட்டுள்ள இது இவ்விதங்களில் செயல்படுகிறது.



வியர்வையை நன்றாகவும் விரைவாகவும் உறிஞ்சுகிறது.



சருமத்தில் பாக்டீரியாக்கள் பெருகுவதைத் தடுப்பதற்கான விசேட மருந்துக் கலவை கொண்டது.



சருமத்தை குளிர்ச்சியாகவும் புத்தம் புதுமையாகவும் வைத்துக் கொள்கிறது. அதன் இதமான செயல்.




*சந்தன மணத்திலும் கிடைக்கிறது.

Johnson & Johnson

OBM-4181 TAM

REGISTERED No. 4392



ஒரு பேக் ரஸ்னு திறங்கள். மகிழ்ச்சி நேரம் துள்ளிக் குதித்திடும் எந்நேரமும்.

விருந்து வைப்பது இவ்வளவு சுலபமாக இருந்ததில்லை,
உங்கள் அன்பு நண்பர்களை அழையுங்கள்.
ஒரு பேக் ரஸ்னுவை திறந்து வையுங்கள். ஆம்,
''உங்களைப் பார்த்து வெகுநாளாகி விட்டதே'',
என்று சொல்லி முடிப்பதற்குள் விருந்து தொடங்கிவிட்டது!

ரஸ்னு விருந்துகளில் படைத்திட பாங்கான ஸாஃப்ட் பானம்.
காரணம், ரஸ்னு என்றால எல்லோரும் விரும்புவது.
அத்துடன் விருந்தினர் விரும்பியவற்றை ரஸ்னு தருகிறது.
9 சுவைமிக்க நறுமணங்களில் தயாரிப்பதற்கு சுலபமான குளிர் பானம், **ஆரஞ்ச், அன்னாசி, எலுமிச்சை, காலாகட்டா, மிக்ஸ் ஃப்ரூட், ரோஜா, நன்னாரி, மசாலா மில்க், மசாலா சோடா.** ஒவ்வொருவருக்கும் ஒவ்வொன்று. அதை சாதாவாகவோ அல்லது ஐஸ் மற்றும் சோடாவில் கலந்து பரிமாறுங்கள். இரண்டு முறையிலும் அதன் சுவையே அலாதி! இது மட்டுமா, இதர எந்த ஸிரப் ஸ்குவாஷைவிட ரஸ்னுவுக்கு பாதிக்கும் குறைந்த செலவுதான் மகிழ்ச்சி பொங்குக.



ரஸ்னு

ஸாஃப்ட் ட்ரிங்க் கான்ஸென்ட்ரேட்
சுவைமிக்கது
சிக்கனமானது
பல நறுமணங்கள் கொண்டது.

குவைத், தோஹா, பாஹ்ரீன், மொரீஷியஸ், கெய்ரோ, கார்டூம், லுஸாகா, கெய்ரோபி, ஜெட்டா, ஒஸ்லோ, லண்டனிலகூட கிடைக்கிறது.

தயாரிப்பவர்கள்: பயோமா இண்டஸ்ட்ரீஸ், அஸர்வா, அஹமதாபாத்-380 016